

உடைப்பு நாடகம் நடக்கேக்
கயே தெரியும் வில்லங்கம்
வரப்போகுது எண்டு....


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28

சுடர் 31 | கதிர் 285 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 21, செவ்வாய்க்கிழமை 06.09.2016


# படையினரின் இடையூறுகள் குறித்து அறிக்கை தயாரிக்க சிறப்புக் குழு நியமனம்

## முல்லைத்தீவு மீனவர்களிடம் உறுதியளித்தார் முதலமைச்சர்

முல்லைத்தீவு, செப்ரெம்பர் 6

இராணுவமும் கடற்படையினரும் முல்லைத்தீவு மீனவர்களுக்குப் பலவித இடையூறுகளையும் இன்னல்களையும் ஏற்படுத்துகின்றனர். அத்துடன், மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு துணிச்சலுடன் சேவையாற்றும் அரச அதிகாரிகளின் பணிகளுக்கும் படையினர் இடையூறு விளைவிக்கின்றனர், அச்சுறுத்துகின்றனர். இவை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை தயாரிக்க சிறப்புக்குழு ஒன்று அமைக்கப்படும். அந்த அறிக்கை கொழும்பு அரசிடம் கையளிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இவ்வாறு முல்லைத்தீவு மீனவர்களிடம் நேற்று உறுதியளித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கேட்டறிந்து, அது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதற்காக வடக்கு மாகாண முதலமைச்சரினால் நேற்றையதினம்

>> 23ஆம் பக்கம்

# போர்க்குற்றங்களின் உண்மைத் தன்மையை அறிவதில் தவறில்லை

## இப்படிக் கூறுகிறார் மங்கள

கொழும்பு, செப். 6

கடந்த ஆட்சிக் காலத்தில் உயர் மட்டங்களிலிருந்து கிடைத்த உத்தரவுகளால் இராணுவத்தினர் குற்றங்களைச் செய்திருக்கலாம். எனவே அதன் உண்மைத்தன்மை தொடர்பில் விசாரித்து அறிவதில் எந்தவிதமான தவறும் இல்லை. இவ்வாறு தெரிவித்தார் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

உலகிலுள்ள இராணுவத்தினரில் இலங்கை இராணுவம் ஒழுக்க விழுமியங்களைக் கடைப்பிடிக்கும் இராணுவமாகும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதன் காரணமாகக் கடந்த காலங்களில் சமாதானப் படைகளில் எமது படையினர் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் உயர்

>> 23ஆம் பக்கம்

# 124 ஏக்கர் காணிகளை கிளிநொச்சியில் விடுவித்தது இராணுவம்

கிளிநொச்சி, செப். 6

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளில் 142 ஏக்கர் காணிகள் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கனகாம்பிகைக் குளம், திருவையாறு, ஆனந்தபுரம், செல்வா நகர், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதியில் 108 ஏக்கர் காணிகளும், கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கல்மடுநகர், புளியம் பொக்கணை ஆகிய கிராமங்களில் 24 ஏக்கர் காணிகளும், பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் முழங்காவில், பொன்னாவெளி ஆகிய

>> 23ஆம் பக்கம்

# பிரபல தங்க வியாபாரியை திருமலையில் காணவில்லை

கொழும்பு, செப்.6

தங்கம் வாங்குவதற்காக ஒரு கோடி ரூபா பணத்துடன் திருகோணமலை சென்றிருந்த முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் திடீரென காணாமற்போயுள்ளார் என உறவினர்களால் பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கலுத்துறையிலுள்ள பண்டாரகம, அட்டுலுகம பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மொஹமட் நஸ்ரின் (வயது – 35) என்ற தங்க வியாபாரியே மாயமாகியுள்ளார். இது தொடர்பில் திருகோணமலை, பண்டாரகம ஆகிய பொலிஸ் நிலையங்களில் குடும்பத்தாராலும், நண்பர்களாலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (விரிவு: பக்.25)

# புது மோ.சைக்கிளை ஓட்டிப் பார்க்க ஆசைப்பட்டவர் பரிதாபச் சாவு

முல்லைத்தீவு, செப். 6

புதிதாக வாங்கிய மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞர் மின்கம் பத்துடன் மோதுண்டு உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று துணுக்காய் – கொத்தம்பியா குளம் பகுதியில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் துணுக்காய் - தேறாங்கண்டலைச் சேர்ந்த ஜெகநாதன் கோபிராஜ் (வயது -19) என்ற இளைஞனே உயிரிழந்தார்.

“மூத்த சகோதரியால் புதிதாக் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிளை ஓட்டிப் பார்க்க எடுத்துச் சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததன் காரணமாக, கொத்தம்பியாகுளப் பகுதியில் வீதியின் அருகே நடப்பட்டிருந்த இரு மின்கம்பங்களுக்கிடையில் மோதுண்டது. இதன்போது தலையில் பலத்த காயமடைந்த குறித்த இளைஞன், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலம் மல்லாவி வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டது” என்று மல்லாவிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் மல்லாவிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-101,ரி7)

# மின்சாரம் தாக்கியதில் குடும்பத்தலைவர் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், செப். 6

வெல்டிங் வேலை செய்த குடும்பத் தலைவர் ஒருவர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம், நேற்று கொக்குவில் பிடாரி கோவில் பகுதியில் இடம்பெற்றது. இதன் போது மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த ரஜீவ் (வயது- 32) என்ற இளம் குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கொக்குவில் பிடாரி கோவில் பகுதியிலுள்ள மாடி வீடொன்றில் வெல்டிங் வேலை செய்துகொண்டிருந்த குடும்பத் தலைவருக்கு தவறுதலாக நேற்று மாலை மின்சாரம் தாக்கியது. இதனை அடுத்து அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார். அவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக சேர்ப்பிக்கப்பட்டது. சடலம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-106)

# வடக்கில் விகாரைகளுக்கு பாதுகாப்புவேண்டும்

## உயர் நீதிமன்றில் மனு

கொழும்பு, செப்.6

பௌத்த உரிமைகளைக் கண்டிக்கும் நடவடிக்கைகளில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஈடுபடுகின்றார். அவரின் இந்த நடவடிக்கை அரசமைப்பை மீறியுள்ளதாக தீர்ப்பு வழங்க வேண்டும். வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள புத்த விகாரைகளைப் பாதுகாக்கும்படி அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

இவ்வாறு கோரிக்கைகளை முன்வைத்து உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கறிஞர் தர்ன வேரதுவகே இந்த வழக்கைத் தாக்கல் செய்தார்.

மனுவில் பிரதிவாதிகளாக வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ,சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான அமைச்சர்

>> 23ஆம் பக்கம்

## மலேசியத் தூதுவர் மீதான தாக்குதல்

# நல்லாட்சி அரசுக்கு விழுந்த பலத்த அடி

## நாடு திரும்பிய மகிந்த தெரிவிப்பு

கொழும்பு, செப்.6

இலங்கைக்கான மலேசியத் தூதுவர் மீதான தாக்குதலானது நல்லாட்சி அரசுக்கு விழுந்த அடியாகும் இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

ஆசிய அரசியல் கட்சிகளின் மாநாட்டில் பங்கேற்பதற்காக மலேசியா சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்று முற் பகல் நாடு திரும்பினார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொது எதிரணி உறுப்பினர்களால் அவருக்குப் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது. ஆதரவாளர்கள் சிலர் தேசியக் கொடியுடன் அணி திரண்டிருந்தனர்.

ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் தோல்வியடைந்த பின்னர், தாய்லாந்து, கென்யா, தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு மகிந்த ராஜபக்ச பயணம் மேற்கொண்டிருந்தார்.

>> 23ஆம் பக்கம்

# பரவிப்பாஞ்சானில் சில காணிகளை உடனே விடுவிப்பதில் சிக்கலாம்

யாழ்ப்பாணம், செப். 6

பரவிப்பாஞ்சானில் ஒரு தொகுதிக் காணிகளை உடனடியாக விடுவிப்பதில் சிக்கல் இருப்பதாக, பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். எனினும் அந்தக் காணிகளை விரைந்து விடுவிக்க முயற்சிப்பதாகவும், அவர் உறுதி

>> 23ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு தொண்டராசிரியர்களுக்கு போட்டிப் பரீட்சை மூலமே நியமனம்

## அமைச்சரவைக்கு பத்திரம் முன்வைப்பு

யாழ்ப்பாணம், செப்.6

வடக்கு மாகாண தொண்டராசிரியர்களுக்கு, ஆசிரியர் உதவியாளர் நியமனம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தில் போட்டிப் பரீட்சை மூலமே நியமனம் வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது: காலத்திற்கு காலம் ஏற்படும் தொண்டராசிரியர்கள் நியமனம் தொடர்பான சர்ச்சைக்கு கடந்தகாலங்களிலேயே உறுதிபட அறிவித்தல் விடப்பட்டபோதும், அதனைக் கடைப்பிடிக்காது அதிபர்களே தொடர்ந்தும் தொண்டராசிரியர்கள் பலரை நியமிப்பதாகவே கல்வி அமைச்சு கருதுகின்றது.

இதனை வடக்கு கிழக்குக்காக தனித்துப் பார்க்கமுடியாது என ஆரம்பத்தில் கூறப்பட்டபோதும், போர் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளின் காரணத்தால் அவை பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனினும் க.பொ.த உயர்தரத்துடன் மட்டும் தொடர்ந்தும் அதிகளவானோர் ஆசிரியர்களாக உள்வாங்கப்படுவதும், வடக்கின் கல்வி வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தநிலையில் தொண்டர் ஆசிரியர்களின் சேவைக்காலத்தைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு மீண்டும் ஓர் சந்தர்ப்பம் அளிக்கும் முகமாக போட்டிப் பரீட்சை மூலம் உள்வாங்கும் முடிவை அமைச்சரவைக்கு கல்வி அமைச்சு முன்வைத்தது.

இந்தப் போட்டிப் பரீட்சையில் தற்போது தொண்டராசிரியர்களாக உள்ளவர்கள் மட்டுமே பங்கு கொள்ளமுடியும்.

இதேவேளை மாகாணக் கல்வி அமைச்சின் எழுத்து மூலமான அனுமதியின்றி எந்தவொரு தொண்டராசிரியரையும் அதிபர்கள் நியமிக்கும் அதிகாரம் சட்டத் தின் பிரகாரம் இல்லை என்பதனால், இவ்வாறு நியமிக்கும் அதிபர்களைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்து ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

(வ-101)

## உயர்தர தொழில்நுட்பக் கல்வி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், செப். 6

இந்தியாவின் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திலிருந்து வருகை தரும் குழுவானது நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலுக்கென இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தில் இருந்து 5 அதிகாரிகள் நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தருகின்றனர்.

இவர்கள் உயர்தர மாணவர்களையும், பெற்றோர்களையும் சந்திக்கின்றனர். இந்தக் கலந்துரையாடலானது ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு தொழில்நுட்ப வழிகாட்டலுக்கான பயனுள்ள கலந்துரையாடலாக அமையும். இதில் பங்குபற்ற விரும்புவோர் cg.jaffnamea.gov.in எனும் இணையத்தள முகவரியில் முன்பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் பிரத்தியேக செயலாளா தெரிவித்தார். (வ-ரி)



விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நேற்று குழந்தைகள், இளையோருக்கான ஆன்மீக வலுவூட்டல் நிகழ்வாக யானை பவனி நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வு நேற்று மாலை சித்தன்கேணி சிவன் ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்டு வழக்கம்பரை அம்மன் ஆலயம் வரை இடம்பெற்றது. இதில் பெருமளவான சிறுவர்கள், இளையோர் கலந்துகொண்டு யானையுடன் பவனி வந்தனர். (வ-21)

# கஞ்சா வைத்திருந்தவர் கிளிநொச்சியில் கைது

கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதியில் 2.65 கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி சிறப்பு அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் இரவு நடத்திய திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலின் போதே, இந்தக் கஞ்சா மீட்கப்பட்டதுடன், சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என கிளிநொச்சிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-21,27)

# மது, புகைத்தல் பொருள்கள் மீதான வரியை உடனே அதிகரிக்கவேண்டும்

## வலியுறுத்தி சங்கானையில் கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், செப். 6

மது மற்றும் புகைத்தல் பொருள்கள் மீதான அதிகரிக்கப்பட்ட வரியை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என வலியுறுத்தி, சங்கானை பஸ் நிலையத்தின் முன்பாக நேற்று மாலை கவனவீர்ப்புப் போராட்டமும், விழிப்புணர்வும் நடைபெற்றது.

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் ஏற்பாடு செய்த இந்தப் போராட்டம் நேற்று மாலை 4.15 மணியிலிருந்து 5 மணி வரை நடைபெற்றது. சுமார் 50 பேர் வரையில் கலந்து கொண்டனர்.

மது மற்றும் புகைத்தல் பொருள்கள் மீதான வரி அதிகரிப்புத் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டது. அதனை ஏன் நடைமுறைப் படுத்தவில்லை என்று போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் கேள்வி எழுப்பினர்.

சிகரெட் வரியை அதிகரிக்க சுகாதார அமைச்சருக்கு தடையாக இருப்பவர் யார் என்றும், இதன் போது அவர்கள் கேள்வி எழுப்பினர். ஜனாதிபதியும் - பிரதமரும் இணைந்து முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு என்ன நடந்தது என்று கேள்வி எழுப்பிய பதாகைகளையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்தனர். (வ-5)

# சட்டத்தரணியை நீதிவான் மன்றில் சரணடையுமாறு ஆலோசனை

யாழ்ப்பாணம், செப். 6

பெண் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரனுக்கு எதிராக மல்லாகம் நீதிவான் மன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவை இடைநிறுத்திக் கட்டளை பிறப்பிக்குமாறு கோரி யாழ். மேல் நீதிமன்றத்தில் செய்யப்பட்ட விண்ணப்பத்தை நீதிபதி இளஞ்செழியன் நிராகரித்தார்.

மல்லாகம் நீதிவான் மன்றத்தின் கட்டளைக்குப் பணிந்து, முதலில் அதனை நிறைவேற்ற வேண்டும் என்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஆலோசனை வழங்கினார்.

மல்லாகம் நீதிமன்றப் பதிவாளரை தொலைபேசி ஊடாக அச்சுறுத்தியாக பெண் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரனுக்கு எதிராக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அவருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் மன்றத்தில் வழக்குப் பதிவு செய்தனர். அந்த வழக்கு கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது குற்றஞ்சாட்டப்பட்ட சட்டத்தரணி மன்றில் முற்படவில்லை. இதனால் அவருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் பிடியாணை கட்டளை பிறப்பித்தார்.

அந்தப் பிடியாணையை இடைநிறுத்தி வைப்பதற்கு கட்டளை பிறப்பிக்குமாறு கோரி சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன், சட்டத்தரணி ஊடாக யாழ். மேல் நீதிமன்றத்தில் நேற்று மனு தாக்கல் செய்தார். இந்த மனு நேற்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் முன் வைக்கப்பட்டது.

மனுவைப் பரிசீலனை செய்த நீதிபதி, அது தொடர்பாக செய்யப்பட்ட சமர்ப்பணத்தை நிராகரித்து, மனுவை தள்ளுபடி செய்தார். மல்லாகம் நீதிவான் மன்றத்தின் கட்டளைக்கு முதலில் பணிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பணித்தார்.

நீதிமன்றத்திடம் வருகின்ற வழக்குகள் தொடர்பில், நீதிமன்றத்தின் சட்ட நடவடிக்கை முறைகளாகவே, அழைப்பாணைகள், பிடியாணைகள் என்பன பிறப்பிக்கப்படுகின்றன. இந்த சட்ட நடவடிக்கைகளுக்குப் பணிந்து நடக்க வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் கடமையாகும்.

நீதிமன்றத்தின் முன்னால் உள்ள இந்த வழக்கில் மல்லாகம் நீதிவான் மன்றத்தினால் கடந்த 2 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட பிடியாணை இன்னும் நடைமுறையில் உள்ளது. எனவே, அந்தக் கட்டளைக்கு மதிப்பளித்து, அந்த நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டப்பட்டவர் முன்னிலையாவதே சட்டத்தின் தேவைப்பாடாகும்.

அவ்வாறு அங்கு முன்னிலையாகும் போது, அந்த நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற கட்டளை, குற்றஞ்சாட்டப்படுபவருக்கு எதிராக இருக்குமேயானால், அது தொடர்பில் மேல் நீதிமன்றத்தில் மீளாய்வு மனு தாக்கல் செய்ய முடியும்.

தற்போது மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், நீதிவான் மன்ற உத்தரவைப் புறந்தள்ளி, அதனை இடைநிறுத்தக் கோருவதாகும். இந்தக் கோரிக்கையை அல்லது இந்த விண்ணப்பத்தை ஒரு சட்ட நடைமுறையாக ஏற்றுக்கொள்ள முடியாது. முதலில் நீதிவான் மன்றத்தின் கட்டளைக்குப் பணிய வேண்டும். அதன் பின்னரே முறைப்பாடு செய்ய வேண்டும்.

நீதவான் மன்றத்தின் கட்டளையை மதிக்காமல் மேல் நீதிமன்றத்தில் நீதி வழங்குமாறு கோருவதை ஏற்றுக்கொள்ள முடியாது. முதல்நிலை நீதிமன்றமாகிய நீதிவான் மன்றத்தின் கட்டளையில் தேவையற்ற விதத்தில் சட்ட ரீதியாக மேல் நீதிமன்றம் தலையீடு செய்ய முடி யாது. இந்த நீதிமன்றம் சம்பந்தப்பட்ட பிடியாணையை இடைநிறுத்தக் கோரும் மனுவை தள்ளுபடி செய்கின்றது என்று கட்டளையை அறிவித்தார் நீதிபதி இளஞ்செழியன். (வ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்தவை மலேசியாவுக்குள் அனுமதித்ததாலேயே வன்முறை

## தமிழ் அமைப்புக்கள் தெரிவிப்பு

கொழும்பு, செப்.6

மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் தாக்கப்பட்ட சம்பவம் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள அதேவேளை, போர்க் குற்றச்சாட்டுகளுக்குள்ளான இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மலேசியாவுக்கு வருவதற்கான அனுமதி வழங்கப்பட்டமையே இந்தத் தாக்குதலைத் தூண்டியது என்று மலேசிய தமிழர் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மலேசியாவுக்குள் வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தால், இந்தத் தாக்குதலை தவிர்த்திருக்கலாம்" என்று மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை ஒருங்கிணைத்த சதீஸ் முனியாண்டி தெரிவித்தார்.

மலேசியாவின் மாநகரசபை உறுப்பினரான அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாங்கள் ஆரம்பத்திலிருந்தே எங்கள் ஆர்ப்பாட்டங்களில் வன்முறைகளை அனுமதிக்கப் போவதில்லை என்பதை தெரி வித்துவந்துள்ளோம்.

மலேசிய தலைநகரில் இடம்பெறும் உச்சிமாநாட்டுக்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியை அழைக்கவேண்டாம் என நாங்கள் விடுத்த வேண்டு கோள்களை மலேசிய ஆளும் கட்சியே புறக்கணித்தது. பொலிஸாரும் எங்கள் வேண்டுகோள்களைப் புறக்கணித்தனர்.

தாக்குதல் சம்பவங்களை நாங்கள் கண்டிக்கும் அதேவேளை, மலேசியா அரசும் அதிகாரிகளுமே இதற்குக் காரணம் எனக் கருதுகின்றோம்-என்றார்.

(வ-சி)

# கிளிநொச்சிக் கடல் வளங்களை பாதுகாப்பது குறித்து ஆராய்வு



கிளிநொச்சி, செப். 6

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட கடல் வளங்களைப் பாதுகாப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று இடம் பெற்றது.

இந்த கலந்துரையாடல் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் தலைமையில் மாவட்டச்செயலக மாநாட்டுமண்டபத்தில் நேற்று மாலை இடம் பெற்றது.

கடல்வாழ் உயிரினங்கள், கடல் தாவரங்கள், மற்றும் அரிய உயிரினங்களைப் பாதுகாப்பது தொடர்பாகவும், கடல் வளங்கள் தொடர்பாகவும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட் டது.

இந்தக் கலந்துரையாடலில் கிளி நொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலாளர் எஸ். சத்திய சீலன் கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலாளர்கள், பொலிஸார், கடற்படையினர், நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் துறைசார் திணைக்களத் தலைவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

(வ-21,27)

# காணாமற்போன ஆசிரியை நேற்று கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

கிளிநொச்சி செப். 6

கிளிநொச்சியில் கடந்த சனிக்கிழமை காணாமற்போனதாகக் கூறப்பட்ட ஆசிரியை ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தேவாலயக் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்கந்தபுரம் அ.த.க. பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றும் மூன்று பிள்ளைகளின் தாயான ஜெயரத்தினம் ஜெயவக்சலா (வயது-51) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை காலை ஆசிரியை வீட்டிலிருந்து காணாமற்போயிருந்தார். இந்த நிலையில் தேவாலய காணியிலுள்ள கிணற்றில் தண்ணீர் அள்ளிக் குடிக்க வந்த இரு மாணவிகள் கிணற்றில் பெண் ஒருவரின் சடலம் மிதப்பதைக் கண்டு தேவாலயக் குருவுக்கு அறிவித்தனர். இதனை அடுத்து பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

சடலம் தொடர்பான பரிசோதனையை மேற்கொண்ட கிளிநொச்சி இறப்பு விசாரணை அதிகாரி க. திருலோகமூர்த்தி ஆசிரியர் தற்கொலை செய்கொண்டதை உறுதிப்படுத்தினார். விசாரணைகளின் போது கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குறித்த ஆசிரியையுடைய தாயார் உயிரிழந்ததாகவும், இதனால் ஆசிரியர் மன உளைச்சலுக்கு உள்ளாகி இருந்ததாகவும் தெரியவந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-21,101,ரி7)

# கோப்பாய்ச் சந்தியில் சமிக்ஞை விளக்குகள் இயங்க ஆரம்பித்தன



யாழ்ப்பாணம், செப். 6

கோப்பாய் சந்தியில் பொருத்தப்பட்ட சமிக்ஞை விளக்குத் தொகுதி நேற்று முதல் இயங்கத் தொடங்கியது.

யாழ்ப்பாணத்தில் புதிதாக 6 இடங்களில் சமிக்ஞை விளக்குகள் பொருத்தும் வேலைகள் இடம்பெற்று முடிவடைந்து, தற்போது செயற்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

யாழ். நகரில் வேம்படிச் சந்தி, ஆரியகுளம் மற்றும் திருநெல்வேலிச்சந்தி, கோப்பாய்சந்தி, சுன்னாகம் சந்தி, நெல்லியடிச் சந்தி ஆகிய முக்கிய சந்திகளில் இந்த வீதிச் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பொருத்தப்பட்ட விளக்குகளில் கோப்பாய் சந்தியில் பொருத்தப்பட்ட சமிக்ஞை விளக்குத் தொகுதி நேற்று முதல் இயங்க ஆரம்பித்தது. (வ-21)

# மிதிவெடியில் சிக்கி சிப்பாய் படுகாயம்

தென்மராட்சி, செப். 6

வெடிபொருள்கள் அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த படைச் சிப்பாய் மிதிவெடிக்குள் அகப்பட்டு காலில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று கிளாலியில் இடம்பெற்றது. இந்தப் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளில் வெடிப்பொருள்கள் அகற்றும் பணியை இராணுவத்தின் வெடிப் பொருள்கள் அகற்றும் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று வெடிப் பொருள்கள் அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த படைச்சிப்பாயின் கால் மிதிவெடிக்குள் அகப்பட்டு வெடித்ததில் கால்சிதைவடைந்தது. இதில் எம்.டி.பி.திஸாநாயக்கா ( வயது 43 ) என்ற படைச்சிப்பாயே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (வ- 9)

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 546
சீட்டிழுப்பு திகதி 2016.09.05
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
22 29 43 68 C
சுப்பர் ஜக்பொட்
ரூ. 48,817,500/=
வெல்லப்படவில்லை

# மாகாணங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறித்து இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.6

மாகாண சபைகளுக்கு 2017 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் இன்று கொழும்பில் அமைந்துள்ள திறைசேரி அலுவலகத்தில் சிறப்புக் கலந்துரையாடல் இடம்பெறுகிறது.

இலங்கையின் 9 மாகாணங்களுக்கும் 2017ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் திட்டங்கள், அதற்கான செலவினங்கள், இதன் மூலம் ஒதுக்கீடு செய்யப்படும் தொகைகள் தொடர்பில் திறைசேரியின் செயலாளர் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறுகிறது.

இந்தக் கலந்துரையாடலுக்காக 9 மாகாணங்களின் முதன்மைச் செயலாளர்கள், பிரதி முதன்மைச் செயலாளர்கள்- நிதி ஆகியோர் அழைக்கப்பட்டனர்.

ஒரு நாள் கலந்துரையாடலாக இடம்பெறும் இந்தக் கலந்துரையாடலின் ஆய்வின் பிரகாரம் 2017ம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி வரையறை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் நவம்பர் 10ஆம் திகதி 2017 ஆம் ஆண்டுக்கான பாதீடு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள நிலையில் இந்தக் கலந்துரையாடல் இன்று இடம்பெறுகிறது.

(வ-101)

தேவை
மில்லில் தங்கி இருந்து வேலை செய்பவர்கள் தேவை. நெல் கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு - மாப்பியன் மில். 077 7722215

தேவை
ஜசிங், தையல் முழுமையாக தெரிந்த பெண்கள் உடன்தேவை.
தொடர்பு -076 5703988

ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு
5 நாள் ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு
077 245 3673
(J 4365)
(10.17)

கடைகள் வாடகைக்கு
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் ஏறத்தாழ 500 சதுர அடி அளவுள்ள கடைகள் வாடகைக்கு உண்டு
தொடர்பு:
077 1620 626
(10.17)

தவறிவிட்டது

இந்தப் படத்தில் உள்ள ஆண் நாய் 31.08.2016 முதல் காணவில்லை.
கண்டவர்கள் பின்வரும்
T.P - 077 931 3880, 021 222 7652
இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சாவகச்சேரி பதியுறை
அமிர்தபாஷினி தாயார் உடனுறை சந்திரசேகர வாரிவனநாதர் சுவாமி தேவஸ்தானம்
பாலஸ்தாபன விஞ்ஞாபனம்
அன்புடையீர் !
எதிர்வரும் 08.09.2016 வியாழக்கிழமை காலை 7.04 மணி முதல் 8.43 மணி வரையுள்ள கன்னி லக்கின முகூர்த்தத்தினில் சிவ பாலஸ்தாபனம் செய்ய அருள் கிட்டியுள்ளது. அத்தருணம் கலந்து கொண்டு அருள் பெற்று உய்யுமாறு அழைக்கின்றோம்.
பாலஸ்தாபனக் குரு
ஸ்ரீ பிரம்மஸ்ரீ தியாக உமாசுத சிவாச்சாரியார்
B.A. Hons M.A சைவ சித்தார்த்தம் ஈழத்து சிதம்பரம்
குறிப்பு: திருப்பணிகள் செய்ய விரும்பும் மெய்யடியார்கள் ஆலய தர்மகர்த்தாவுடன் தொடர்பு கொள்க.
வங்கி இலக்கம் : 000732134721
தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரி
சிவப்பணியில் என்றும் தர்மகர்த்தா
விளம்பர அன்பளிப்பு :மாறன் டிஜிற்றல் வீடியோ சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாஸ் குணவர்தனவை மன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவு

கொழும்பு, செப் 6
முன்னாள் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன மற்றும் அவரது மகன் ரவிந்து குணவர்தன ஆகியோரை எதிர்வரும் 19 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவித்தல் விடுத்துள்ளது.
கடந்த 2009 ஆம் ஆண்டு மாலபே தகவல் தொழினுட்பக் கல்லூரியில் கல்வி கற்ற மாணவர் ஒருவரைக் கடத்திச் சென்று தாக்கிய சம்பவம் தொடர்பில் இவர்களை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இருவரையும் நீதிமன்றில் முற்படுத்துமாறு, சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
மாணவனைத் தாக்கியமை தொடர்பில் குறித்த இருவர் உட்பட எட்டு பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ந-5)

## மலேசியாவுக்கான இலங்கை தூதுவரின் மீது தாக்குதல்

கொழும்பு, செப் 6
மலேசியாவின் கோலாலம்பூர் விமான நிலையத்தில் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் இப்ராஹிம் அன்சார் நேற்று முன்தினம் மாலை தாக்கப்பட்டமை தொடர்பான காணொளி வெளியாகியுள்ளது.
தாக்குதலுக்குள்ளான தூதுவர் தலையில் பலத்த காயமடைந்த நிலையில் கோலாலம்பூர் வைத்தியசாலையில் உடனடியாக சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மலேசியாவிலுள்ள இலங்கைத் தூதரகமானது, மலேசியப் பொலிஸாருடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது.
மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை இலங்கை அரசு மிகவும் வன்மையான முறையில் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளது. (ந-5)

**மணமகள் தேவை**
இந்து கௌரவ குடும்பம் 1979. 12இல் செவ. பூசம். கி.பா -24. நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு A/L அல்லது அதற்கு மேல் படித்த அழகிய மணமகள் தேவை. (கிறிஸ்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.)
சசி திருமணசேவை
5/1, புகையிரத வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
077 151 7552 (Viber)
Email: saseekanth.s@gmail.com T.P: 077 044 3589

**ஒப்படைப்பு கட்டளை (Vesting Order) அறிவித்தல்**
**ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்**

ஆலடி வேல்முருகன் ஆலயத்தின் ஒப்படைப்பு கட்டளை தொடர்பில்

01.சுப்பிரமணியம் நாகராசா
அல்வின் வீதி,
காரைநகர்.
02.முருகேசு தேவராசா
அல்வின் வீதி,
காரைநகர்.
**மனுதாரர்கள்**

மேற்குறித்த ஆலடி வேல் முருகன் ஆலயத்தினை 1918 ஆம் ஆண்டு தோற்றுவித்து குறித்த ஆலயத்தின் முகாமையாளர்களாக கதிரன் சீனியன், சீனியன் சடையன், சடையன் இளையவி, இராமலிங்கம் சுப்பிரமணியம், சுப்பிரமணியம் நாகராசா, முருகேசு தேவராசா ஆகியோர் இவ்வாலயத்தின் தர்மகர்த்தாவாக செயற்பட்ட போதும் அந்த அதிகாரத்தினை அவர்களுக்கு வழங்கத் தேவையான நொத்தாரிஸ் முகதாவில் நிறைவேற்றப்பட்ட முறையான ஆவணங்களோ இவ்வாலயத்தில் முறையான முகாமை திட்டமோ இல்லாத காரணத்தால் இவ்வாலயத்தின் நம்பிக்கைச் சொத்து உடமைகள் எவரிடம் உள்ளது என்பது குறித்து நிலையற்ற தன்மை தோன்றியுள்ளது. இவ்வாலயத்தின் இதன் கீழ் ஆதன இடாப்பில் விவரிக்கப்படும் தர்ம சொத்துக்களுக்கு இவ்வாலயத்தின் தர்மகர்த்தாக்களான மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மனுதாரர்களின் பெயரில் ஓர் ஒப்படைப்பு கட்டளை (Vesting Order) பெறும் நோக்கில் இந்நீதிமன்றத்தில் நம்பிக்கைச் சொத்து/ 12/16 எனும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு ஒப்படைப்பு கட்டளை பெறுவது தொடர்பில் (Vesting Order) பத்திரிகையில் விளம்பரப்படுத்துமாறு கௌரவமன்று கட்டளையிட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.
அக்கறையுள்ள ஆள் எவரேனும் மேற் குறித்த மனுதாரர்களுக்கு குறித்த ஆலடி வேல்முருகன் ஆலயத்தின் ஒப்படைப்பு கட்டளை (Vesting Order) ஏன் வழங்கப்படக் கூடாதென ஆட்சேபனை ஏதுமிருப்பின் 26.10.2016 ஆம் திகதி கௌரவ ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில் முற்பகல் 10.00 மணிக்கு பிரசன்னமாகி உங்கள் தரப்பு ஆட்சேபனையினைத் தங்களது சட்டத்தரணி ஊடாக முன்வைக்குமாறு இத்தால் நீவிர் கோரப்படுகின்றீர்கள்.

**ஆதன இடாப்பு**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தீவுப்பகுதி காரைநகர் வடக்கு நிலபர ¾ அதற்குள் அமையும் கோயிலும் இதற்கெல்லை.

வடக்கு : அல்வின் வீதி
கிழக்கு : அல்வின் வீதி
தெற்கு : மணியம் பூரணத்தின் ஆதனம்
மேற்கு : மணியம் பூரணத்தின் ஆதனம்
இதனடங்கலும் இதற்கு சேர்ந்தவைகளும்.

நீதிமன்ற உத்தரவுப்படி
2016 ஆம் ஆண்டு 08 மாதம் 26 ஆம் திகதி

வரைபு
P.மோகனதாஸ்
சட்டத்தரணி

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
ஊர்காவற்றுறை.

# வடக்கில் படைகளின் பிரசன்னம் அவசியம்

## வாசுதேவ எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, செப் 6
வடக்கின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இராணுவத்தினரின் பிரசன்னம் அங்கு அவசியமாகும். விக்னேஸ்வரனுக்கு தமிழ் மக்களின் ஆதரவு இல்லை. அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவிலேயே தங்கியுள்ளார்.
இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது–
இன்றைய அரசு இரண்டு பாதைகளில் பயணிக்கின்றது.
வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் பன்னாட்டு விசாரணைத் தேவையை நிறைவேற்றுவதற்கு அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தயாராகவே உள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ அல்லது அரசோ விக்கினேஸ்வரனின் பன்னாட்டு விசாரணைத் தேவையை நிறைவேற்றத் தயாரில்லை.
அதேவேளை, இன்றைய அரசு ஏகாதிபத்திய மேற்கு நாடுகளின் தாளத்துக்கு ஆட்டம் போடுகிறது. ஐ.நா. என்பது இன்றைய மேற்கத்தையநாடுகளின்தேவைகளை நிறைவேற்றும் ஓர் அமைப்பாகும். அதன் செயலாளர் நாயகம் பான் கீ மூன் மேற்கத்தைய நாடுகள் சொல்வதைச் செய்யும் கிளிப்பிள்ளையாவார்.
அதற்கமைய இலங்கைக்கு வந்து வட மாகாணத்திலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றுமாறு அரசை வலியுறுத்தியுள்ளார்.
இலங்கையில் வட மாகாணத்தில் மட்டுமல்ல நாடு பூராகவும் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு இராணுவத்தினரின் பிரசன்னம் தேவை. அதேவேளை வடக்கிலும் பாதுகாப்புக்கு தேவையான அளவில் படையினர் நிலை கொண்டிருக்க வேண்டியது கட்டாயமாகும் – என்றார். (ந-5)

# விவசாய போதனாசிரியர்களுக்கு மின் பயிர் சிகிச்சைப் பயிற்சிகள்

## திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் செயலமர்வு



யாழ்ப்பாணம், செப் 6
விவசாயம் மற்றும் உயிரியல் விஞ்ஞானத்துக்கான பன்னாட்டு மையத்தின் அனுசரணையில், விவசாயப் போதனாசிரியர்களுக்கு மின் - பயிர் சிகிச்சைப் பயிற்சியை வழங்கும் செயலமர்வு நேற்றுத் திங்கட்கிழமை, திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் ஆரம்பமானது. மூன்று நாள்கள் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சியில் வடக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 30 விவசாயப் போதனாசிரியர்கள் கலந்து கொண் டுள்ளனர்.
நேற்று இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்ததாவது–
முப்பது வருட போரின் பாதிப்புகளில் இருந்து விடாமுயற்சியுடைய எமது விவசாயிகள் சில வருடங்களில் மீண்டெழுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. அவர்கள் மீளமுடியாத இன்னுமொரு போருக்குத் தொடர்ந்தும் முகம் கொடுத்து வருகிறார்கள். அது அவர்களது பயிர்கள் மீது பீடைகள் தொடுத்திருக்கும் போர்.
இயற்கைச் சூழற்தொகுதிகளில் எல்லா உயிரினங்களுக்கும் இடையில் ஒரு சமநிலை நிலவுகிறது. இங்கு நல்லது கெட்டது என்று எதுவும் இல்லை. பீடைகள், களைகள் என்ற வித்தியாசம் இல்லை. ஆனால், ஒற்றைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாய நிலங்களான செயற்கைச் சூழலில் உயிரினச் சமநிலை இல்லை. இங்கு பீடைகளினதும் களைகளினதும் பெருக்கம் தவிர்க்க முடியாமல் உள்ளது.
எங்களுக்கு நோய்கள் வரும்போது மருத்துவர்களின் உதவியை நாடுகிறோம். மருத்துவர்களின் பரிந்துரைச் சிட்டைகள் இன்றி மருந்தகங்களில் மருந்தினைக் கொள்வனவு செய்ய முடியாது. பயிர் நோய்களுக்கு விரும்பிய மருந்துகளை விரும்பிய அளவுகளில் எவரும் எங்கும் வாங்கலாம். உரிய ஆலோசனைகள் இல்லாமல் விளம்பரங்களை நம்பி விவசாய இரசாயனங்களைப் பயன்படுத்துகிறோம். அதனால் நிலமும், நீரும், உணவும் நஞ்சாவதோடு நாளடைவில் மருந்துகளால் எதுவும் செய்ய இயலாதவாறு பீடைகளும் இசைவாக்கம் பெற்று வருகின்றன.
இவற்றைத் தவிர்ப்பதற்கு விவசாயப் போதனாசிரியர்கள் டிஜிற்றல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். கையடக்கக் கணினிகளில் விவசாயம் தொடர்பான மென்பொருள்களை நிறுவிக்கொண்டால் உலகில் எந்த மூலையில் உள்ள விவசாய நிபுணர்களுடனும் நொடியில் தொடர்புகொண்டு ஆலோசனைகளைப் பெற முடியும். இதன்மூலம் விவசாயப் போதனாசிரியர்கள் பயிர் மருத்துவர்களாகத் தங்களை வளர்த்துக் கொண்டு விவசாயிகளுக்குத் தகுந்த வழிகாட்டல்களை மேற்கொள்ள முடியும் – என்றார்.
இந்த நிகழ்வில் விவசாயத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து 15 கையடக்கக் கணினிகள் விவசாயப் போதனாசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.
மேலும் 15 கையடக்கக் கணினிகளை விவசாயம் மற்றும் உயிரியல் விஞ்ஞானத்துக்கான பன்னாட்டு மையம் விரைவில் அன்பளிப்பாக வழங்க வுள்ளது.
மாகாண விவசாயப் பணிப்பாளர் சி. சிவகுமார் தலைமையில் நடைபெற்ற செயலமர்வின் ஆரம்ப நிகழ்ச்சியில் விவசாய அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் மற்றும் உயிரியல் விஞ்ஞான பன்னாட்டு மையத்தின் பிரதிநிதிகள் அப்துல் ரஹ்மான், மஞ்சு தாகூர், அ.வாகீசன், தாவரப் பாதுகாப்பு நிலையத்தின் பிரதி இயக்குநர் பீ.ரீ.பண்டார மற்றும் பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ந-5)

**தேவை**
யாழ் நகரில் இயங்கும் பிரபல அழகுக்கலைப் பயிற்சி நிலையமொன்றுக்கு கணக்காளர், வரவேற்பாளர் மற்றும் அழகுக்கலையில் அனுபவமுள்ள பெண்கள் தேவை.
076 570 3988

**தவறிவிட்டது**
கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த தில்லையம்பலம் சிவகுமார் ஆகிய எனது வங்கிப் புத்தகம்(Commercial), காசோலைப் புத்தகம், உழவு இயந்திர வரிஅனுமதிப் பத்திரம் போன்றவற்றுடன் கோண்டாவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.
(சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு: 077 724 2381

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸை விட லஞ்சத்தில் கல்வித் துறையே முன்னிலை

## லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 6
லஞ்சம் வாங்குவதில் பொலிஸாரை விட கல்வித்துறை முன்னிலையில் இருக்கின்றது. இவ்வாறு லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு குற்றம் சுமத்தியது.
கடந்த காலங்களில் பொலிஸ் துறை மீதே லஞ்சம் தொடர்பில் அதிக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டது. அது தற்போது குறைவடைந்துள்ளது.
லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டு அதிகம் இடம்பெறும் நிறுவனங்களில் இதனை ஒழிப்பதற்கு லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. லஞ்சம் பெறுவதில் கல்வித்துறை முன்னிலை வகிக்கின்றது என்று ஆணைக்குழு தெரிவித்தது.
அது தொடர்பில் சிறப்பாக இலங்கை சுங்கப்பிரிவு, குடிவரவு, குடியகல்வு திணைக்களம், ஆள்பதிவு திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றை தெளிவுபடுத்தும் நடவடிக்கையை லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.
கல்வித்துறையில் ஊழலை ஒழிக்கும் நோக்குடன் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் இதனை விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
பாடசாலை மட்டங்களில் இருந்தே லஞ்சம் மற்றும் ஊழலை முற்றாக ஒழிப்பதன் பொருட்டு இது தொடர்பான பாடவிதானங்களை இணைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று லஞ்ச ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு சுட்டிக்காட்டியது. (ரு-5)

# குச்சவெளி கரடிமலையிலுள்ள கடற்படையை வெளியேற்றுக

## பிரதேச மக்கள் கோரிக்கை

கொழும்பு, செப். 6
திருகோணமலை குச்சவெளி கரடி மலையில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.
1983 ஆம் ஆண்டு குச்சவெளி பொலிஸ் நிலையம் தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட பின்னர் கடற்படையினர் அந்தப் பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்தனர்.
மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்பி மீள்குடியேறிவரும் நல்லாட்சியில் கடற்படையினர் கரடிமலையில் நிலை கொண்டிருப்பது அவசியமற்றது என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.
மழை காலத்தில் அலை அடிப்பதால் கடலுக்குச் செல்ல முடிவதில்லை என்று தெரிவிக்கும் மக்கள் அவ்வாறான காலப்பகுதியில் அங்குள்ள மீனவ மக்கள் குறித்த மலையில் நின்றே சிறு மீன்பிடித் தூண்டில் தொழில் செய்வார்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டது.
தமது வாழ்வாதாரத்துக்காக அங்குள்ள கடற்படையினரை வெளியேறுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரு-5)

# மலேசியாவில் மகிந்தவை சந்தித்தார் தயா கமகே

கொழும்பு, செப். 6
மலேசியாவில் இடம்பெறும் ஆசிய அரசியல் கட்சி மாநாட்டில் கலந்து கொள்ள சென்றுள்ள அமைச்சர் தயா கமகே மலேசியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்த இரவு உணவு வேளையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைச் சந்தித்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
அவர்களுக்கு இடையிலான இந்த உரையாடல் நட்பு மிக்கதாக இருந்தது என்று தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.
மகிந்தவுடன் சுற்றுப்பயணம் மேற்கொண்ட உபாலி கொடிக்கார, லொஹான் ரத்வத்த மற்றும் தினேஸ் குணவர்தன ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.
மலேசியாவில் இடம்பெறும் ஆசிய அரசியல் கட்சிகள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே தயா கமகே மற்றும் மகிந்த ராஜபக்ச ஆகியோர் மலேசியா சென்றனர். அமைச்சர் தயா கமகே ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிநிதியாகவே அந்த மாநாட்டில் கலந்து கொண்டார்.
அமைச்சர் தயா கமகே ஆசிய அரசியல் கட்சிகள் மாநாட்டின் மூத்த உப தலைவராவார். (ரு-5)

# ஈரான் மீதான நடை குறித்து பேச்சு

கொழும்பு, செப். 6
ஈரான் மீதான பொருளாதாரத் தடை குறித்து இலங்கை மத்திய வங்கி அமெரிக்காவுடன் பேச்சு நடத்தியது. ஈரான் மீதான சில பொருளாதாரத்தடைகள் நீக்கப்பட்டுள்ளன என்று மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.
தற்போது ஈரானுக்குத் தேயிலையை ஏற்றுமதி செய்ய முடியும். ஏற்றுமதிக்கான தடை நீக்கப்பட்ட போதும், நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் குறித்த தடை நடைமுறையில் இருக்கின்றது.
இந்த விடயம் குறித்து மத்திய வங்கியின் அதிகாரிகள் அமெரிக்காவுடன் ஏற்கனவே பேச்சு நடத்தியுள்ளனர் – என்றார். (ரு-5)

# ஓரினச் சேர்க்கையால் அதிக ஆண்கள் எச்.ஐ.வி. தொற்று!

கொழும்பு, செப். 6
இலங்கையில் 30 சதவீதமான ஆண்கள், ஓரினச் சேர்க்கையால் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று பாலியல் மற்றும் எயிட்ஸ் நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்தது.
எச்.ஐ.வி. வைரஸ் தொற்று தொடர்பான சோதனை மேற்கொண்டவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிகரித்துள்ளது.
இதுவரையான காலப் பகுதிக்குள் 8 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் எச்.ஐ.வி. தொற்று தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர். தொற்றுக்குள்ளான வர்களில் 30 சதவீதமான ஆண்கள், ஓரினச் சேர்க்கையால் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகியுள்ளாகியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்று பாலியல் மற்றும் எயிட்ஸ் நோய் தடுப்பு பிரிவு தெரிவித்தது. (ரு-5)

# துர்நடத்தைக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 6
அல்வாய் பகுதியில் 14 வயது சிறுமி துர்நடத்தைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் 22 வயது சந்தேக நபர் ஒருவர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
சந்தேக நபர் நேற்றுமுன்தினம் மாலை, பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். சந்தேக நபரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
சிறுமியின் உறவினரான மேற்படி நபர் சிறுமியை துர்நடத்தைக்கு உள்ளாக்கினார் என்று தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்றும், அவர் மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ரு-5-109)

# ஆண்டு விழாவுக்கு வராதோர் மீது நடவடிக்கை

## – மகிந்த அமரவீர

கொழும்பு, செப் 6
சிறிலங்கா சுதந்திர கட்சியின் 65 ஆவது ஆண்டு விழாவுக்கு வராத உறுப்பினர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
இவ்வாறு அந்தக் கட்சியின் பிரதிச் செயலாளரும் மீன்பிடி மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த மைய செயற்குழு கூட்டத்தின் போது இதற்கான தீர்மானம் எடுக்கப்படும்.
கட்சியின் மாநாட்டை புறக்கணித்த உறுப்பினர்கள் தொடர்பில் தனிநபர்கள் அன்றி செயற்குழுவே தீர்மானம் எடுக்கும்.- என்றார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 65 ஆவது மாநாட்டை கூட்டு எதிர் கட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் புறக்கணித்துள்ளனர். (ரு-5)

# உணவில் சீனி நியம அளவில் இல்லாவிட்டால் வரி அறிவீடு

உணவுப் பொருள்களில் நியம அளவை விட சீனி, உப்பு மற்றும் கொழுப்புகளின் அளவு சேர்க்கப்படிருந்தால் வரி அறவிடப்படும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
உலக சுகாதார நிறுவனத்தின் தென் கிழக்காசிய பிராந்தியத்தின் 69 ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.
உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக் காசிய பிராந்தியத்தின் 69 ஆவது கூட்டத் தொடரின் தலைவராக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். (ரு-5)

# கந்தபுராண படிப்பு நிறைவு தினம்

யாழ்ப்பாணம், செப்.6
நீர்வேலி தெற்கு முருகையன் கோயிலில் கந்தபுராணப் படிப்பின் நிறைவு தினத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை விசேட அபிசேகங்கள், பூசைகள் இடம்பெற்று, நண்பகல் மகேஸ்வர பூசை இடம்பெறும். தொடர்ந்து இரவு முருகப்பெருமான் உள்வீதி வலம் வருதலும் நடைபெறும். (ரு-17)

# அதிபருக்கான கூட்டம் நாளை

தென்மராட்சி, செப்.6
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை பி.ப.1 மணிக்கு கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ரு-9)

மூளாய் வதிரன்புலோ
சித்திவிநாயகர் தேவஸ்தானம்
புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ
மஹா கும்பாபிஷேகம்
சித்தி விநாயக அடியார்களே!
நிகழும் மங்களகரமான துர்முகி வருஷம் ஆவணித் திங்கள் 07.09.2016 புதன்கிழமை காலை 7 மணிமுதல் கும்பாபிஷேக கர்மாரம்பம். அதனைத் தொடர்ந்து
எண்ணெய்க் காப்பு :- பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தல் 09.09.2016 வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 10.09.2016 சனிக்கிழமை பிற்பகல் 5 மணிவரை
கும்பாபிஷேகம்:- 11.09.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 06.01 முதல் 06.48 மணிவரை வரும் சுபவேளையில் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.
மண்டலாபிஷேகம்:- தொடர்ந்து 45 நாள்கள் 25.10.2016 வரை நடைபெறும்.
நிதி உதவ விரும்பும் அடியார்கள் தேவஸ்தான பொருளாளரிடமோ அல்லது கணக்கு இல.
S/A 77007365 இலங்கை வங்கி, வட்டுக்கோட்டை
அல்லது
C/A 1094433 இலங்கை வங்கி 2ஆம் கிளை யாழ்ப்பாணம் கணக்குக்கு அனுப்பலாம்.
அனைவரும் வருக! அருள் பெறுக.
"சித்தி விநாயகர் கருணை மகத்தானது"
- பரிபாலன சபை -

நேரான சிந்தனைகளே வெற்றிக்கு முதற்படி
Positive Thinking is the first step for success
இத் தகவலைத் தருவது ஒளிஅரசி....
மேலும் விபரங்களுக்கு செப்டெம்பர் மாத சஞ்சிகையைப் பார்க்கவும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குக்கான மாநாடு நேற்று கொழும்பில் ஆரம்பம்



கொழும்பு, செப்.6

உலக சுகாதார அமைப்பின் 69ஆவது தென் கிழக்குக்கான மாநாடு நேற்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் கொழும்பு தாமரைத் தடாகக் கூட்ட மண்டபத்தில் மிக விமரிசையாக ஆரம்பமானது.

அதில் பிரதமர் ரணில் விக்ரம சிங்க தலைமை அதிதியாகக் கலந்து கொண்டார். இந்த மாநாடு நேற்று 5ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 9ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

11 நாடுகளின் உயரதிகாரிகள் இதில் கலந்து கொண்டுள்ளனர். மாநாட்டில் சுகாதாரத்துறையின் புரட்சி பற்றிப் பிரதமர் ரணில், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் வெளிநாட்டு உயர் அதிகாரிகளின் விசேட உரைகளும் இடம்பெற்றது.

நிகழ்வில் அமைச்சர்களான சுசில் பிரமஜேந்த, ரவுப் ஹக்கீம், நவீன் திஸ்ஸநாயக்க பிரதியமைச்சர் பைசால் காசீம் ,கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட், கிழக்கு மாகாண சுகாதர அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நசீர், உட்பட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சுகாதர அமைச்சர்கள், என பலரும் கலந்து கொண்டனர். (ற-5)

# யாழ். இந்து சாரணர் நூற்றாண்டு நிறைவையொட்டி இந்து ஜம்போரி

யாழ்ப்பாணம், செப்.6

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு நூறாண்டு நிறைவை முன்னிட்டு யாழ். இந்துக் கல்லூரியும், கல்லூரியின் திரி சாரண குழுவும் இணைந்து 'இந்து போறி' என்ற பெயரில் நாளை தொடக்கம் 11ஆம் திகதி வரை வவுனிக்குளம் காட்டுப்பகுதியில் ஜம்போரி ஒன்று ஏற்படு செய்துள்ளன.

இது தொடர்பான விசேட செய்தியாளர் சந்திப்பொன்று நேற்று மதியம் 1.30 மணியளவில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் தயானந்தராஜா தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சாரணியர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு நூறாண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளனர். பிரதான நிகழ்வாக இந்து ஜம்போறி நிகழ்வு அமைகிறது. ஜம்போறியில் அகில இலங்கை ரீதியில் அனைத்து மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களும் பங்குபற்ற உள்ளனர். இலங்கை சாரணியர் கழகம், கல்வி அமைச்சு, வடமாகாண கல்வி அமைச்சு ஆகியவற்றின் உதவியுடன் ஜம்போரி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட சாரணிய பணிப்பாளர் தேவரஞ்சன் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1916ஆம் ஆண்டு சாரணியர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு இந்தஆண்டுதனதுநூற்றாண்டு விழாவைக் கொண்டாடவுள்ளது. அதன் சிறப்பு நிகழ்வாக முதல் தடவையாக ஜம்போரி ஒன்று காட்டுப் பகுதியில் நடத்தப்படவுள்ளது. இது சாரணிய மாணவர்களுக்கு புதிய அனுபவம் ஒன்றைக் கொடுக்கும் என நினைக்கிறேன். அது மட்டுமன்றி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணியர் இயக்கம் பல தடவை தேசிய மட்டத்தில் வெற்றி பெற்று இருக்கிறது. நூறுக்கும் மேற்பட்ட சாரணியர்கள் ஜனாதிபதி விருது பெற்றிருக்கின்றனர் என்றார். (ற-ரி)

# கல்முனை மாநகர சபையின் ஆணையாளரை மிரட்டியவரை கைது செய்யுமாறு போராட்டம்

கல்முனை, செப். 6

கல்முனை மாநகர சபை ஆணையாளரை அச்சுறுத்திய வர்த்தகரைக் கைது செய்ய வேண்டும். அதுவரை போராட்டம் நிறுத்தப்படாது.

இவ்வாறு வலியுறுத்தி மாநகர சபைப் பணியாளர்கள் போராட்டம் நேற்று நடத்தினர். கல்முனை மாநகர சபையின் அனைத்துப் பணிகளும் போராட்டத்தால் முடங்கின.

கடந்த சனிக்கிழமை மாலை சாய்ந்தமருது நகருக்குச் சென்ற ஆணையாளர், மோட்டார் சைக்கிள் விற்பனை செய்யும் கடைக்குமுன்பாகவீதியோர நடைபாதையில், விற்பனைக்கான மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டு, காட்சிப்படுத்தப்பட்டிருப்பதை சுட்டிக் காட்டி, அதனை உள்ளே நகர்த்துமாறு வேண்டுகோள் விடுத்தார். அந்த கடையின் உரிமையாளர், ஆணையாளரை மோசமான வார்த்தைகளினால் தூற்றி, அச்சுறுத்தியதுடன் அவரைத் தாக்கவும் முற்பட்டார் என்று கல்முனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



கல்முனை மாநகர சபை ஆணையாளரை அச்சுறுத்திய வர்த்தகரை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி காலை மாநகர சபை ஊழியர்கள் அனைவரும் மாநகர சபையில் இருந்து கல்முனை பொலிஸ் நிலையம் வரை பேரணியாகச் சென்றனர். பின்னர் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக சிறிது நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாநகர சபை ஊழியர்களை சந்தித்த கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ அப்துல் கப்பார், குற்றம் சாட்டப்பட்டுள்ள வர்த்தகர் தலைமறைவாகியுள்ளார். அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றார்.

பொலிஸ் நிலையத்தில் இருந்து மாநகர சபை அலுவலத்துக்கு சென்ற ஊழியர்கள் பொலிஸா[illegible] வர்த்தகரைக் கைது செய்யும் வரையில் தமது போராட்டம் தொடரும் எனத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தால் மாநகர சபையின் அனைத்துப் பணிகளும் முடங்கின. மாநகர சபைக்குட்பட்ட எந்தவொரு பிரதேசத்திலும் குப்பை அகற்றும் சேவையும் இடம்பெறவில்லை. கல்முனை பிரதேச செயலகம் கல்முனை மாநகரசபைவளாகத்தில்அமைந்திருப்பதால் அதன் பணிகளும் பாதிக்கப்பட்டிருந்தன. (ற)

## தெய்வீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 6

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயப்பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் தெய்வீக இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மிக உரைகள் என்பன நடைபெறுகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள 6 ஆம் நாள் திருவிழாவில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள் மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை ஆலய முன்றிலில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஜனை நிகழ்வும், யாழ். சின்மயா மிசன் வதிவிட ஆச்சாரியார் யாக்ரித் சைதன்யாவின் சத்சங்கும் நடைபெறவுள்ளது. (ற-ரி)


4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
29.12.1939

மறைவு
06.09.2012

அமரர்
சின்னத்தம்பி தர்மராஜன்
(ஓய்வு பெற்ற அஞ்சல் அத்தியட்சகர்)

நிமிர்ந்த கம்பீர நன் நடையும்
நேர்கொண்ட பார்வையும்
அவனியில் எவருக்கும் அஞ்சாது
அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே !
விழி மூடித் திறக்கும் நேரத்தில்
எங்களைத் தவிக்க விட்டு
நிரந்தரமாகப் பிரிந்தீர்களே!
உங்களிற்கு நிகர் இனி எங்களுக்கு யார் ?
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
அணையாதே உங்கள் நினைவுகள்



41/17, பாடசாலை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்


# மகாவலி அபிவிருத்தி அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

## ஜனாதிபதி தலைமையில் நடந்தது

கொழும்பு, செப்.6

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல்துறை அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் முற்பகல் மகாவலி அதிகார சபையில் இடம்பெற்றது.

மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் துறை அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் 2016 நிதியாண்டுக்கான முன்னேற்றங்கள் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டன.

2016ஆம் ஆண்டுக்காக அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள [illegible] இவ்வாண்டு நிறைவடைய முன்னர் உரிய முறையில் செயற்றிட்டங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி இதன்போது ஆலோசனை வழங்கினார்.

உரிய காலத்தில் பணிகள் ஆரம்பிக்கப்படாதுள்ள சிறிய நீர் மின்சார செயற்றிட்டங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் துறை பிரதி அமைச்சர் அநுராத ஜயரத்ன, மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் துறை அமைச்சின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் தலைவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-5)

## பாணுக்குள் கஞ்சா வைத்திருந்தோர் சிக்கினர்

தென்மராட்சி, செப்.6

பாணுக்குள் வைத்து கஞ்சாவை தென் பகுதிக்குக் கடத்தவிருந்த கொழும்பு கிராண்ட்பாஸ் வாசிகள் இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை மதுவரி நிலையத்தினருக்குக் கிடைத்த தகவலையடுத்து கைதடிப் பகுதிக்கு விரைந்த மதுவரி நிலையத்தினர் வீதியில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த இருவரை சோதனையிட்டனர். பாணுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1 கிலோ 700 கிராம் கஞ்சாவைக் கைப்பற்றினர். குறித்த இருவரையும் கைது செய்தனர்.

இருவரையும் மறுநாள் சனிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சாக் கடத்தலை முறியடிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்

## பொலிஸாருக்கு பரு. நீதிவான் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 6

பொலிஸாரும், கடற்படையினரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை விட அதிக முக்கியத்துவத்தை கஞ்சா கடத்தலுக்குக் கொடுப்பதன் ஊடாக இதனை முற்றாக துடைத்தழிக்கலாம் .

இவ்வாறு பருத்தித்துறை நீதிவான் பெ.சிவகுமார் தெரிவித்தார்.

4 கிலோ 100 கிராம் கஞ்சாப் பொதிகளுடன் பருத்தித்துறைப் பொலிஸாரால் அல்வாயைச் சேர்ந்த 5 பேர் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பான வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் போதே நீதிவான் இவ்வாறு தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், பொலிஸார் சில சந்தேக நபர்களைக் கைது செய்யும் போது அவர்களிடம் கஞ்சா போதைப் பொருள் காணப்படவில்லை. அவர்களைப் பிணையில் விடுதலை செய்ய வேண்டும் என்று கோரினார். பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யுவான் டந்த நாராயண அதற்கு ஆட்சேபனையை மன்றில் வெளிப்படுத்தினார்.

> பொலிஸார், கடற்படையினர் பயங்கரவாத தடைச் சட்டத்துக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவத்தை விட கஞ்சாக் கடத்தலுக்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்தால் அதனை முற்றாக ஒழிக்கலாம்.

குற்றச்செயல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று பொலிஸ் தரப்பு தகவல்களை மன்றில் வெளிப்படுத்தினார்.

அதற்குப் பதிலளித்த நீதிவான்- சட்டத்தரணிகள் சொல்வது போல் கஞ்சா மற் றும் ஹெரோ யின் போதை பொருள் கடத்தல் நடவடிக்கையின் போது கையில் குறித்த போதைப் பொருளை வைத்திருப்பவர்களை மாத்திரம் கைது செய்ய முடியாது. இது தொடர்பில் நீங்கள் பிடிபடும் போது போதைபொருள் கையில் இருந்ததா என்று கேட்டால் ஒருவரின் கையில் மட்டுமே அது இருந்தது என்று தெரிவிப்பார். மன்றால் எடுக்கப்பட்ட நடவடிக்கையை தொடர்ந்து இப்போது பொலிஸார் தமது கடமையை ஒழுங்காகச் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். இப்போது நெத்தலிகள் பிடிபடத் தொடங்கியிருக்கின்றன. இனி பெரிய சுறாக்கள் வெளிவரும். பிணையில் விட்டால் அவர்கள் மீண்டும் அந்தச் செயலைச் செய்யலாம் - என்று தெரிவித்தார். பிணை விண்ணப்பத்தையும் நீதிவான் நிராகரித்தார்.

பொலிஸார், கடற்படையினர் பயங்கரவாதத்தடைச்சட்டத்துக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவத்தை விட கஞ்சாக் கடத்தலுக்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்தால் அதனை முற்றாக ஒழிக்கலாம். அதனை விட இதன் பாரதூரத் தன்மை அதிகமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

சந்தேக நபர்கள் ஐவரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டதுடன் சந்தேக நபர்களிடம் இருந்து மீளவாக்கு மூலங்களைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக பஸ்நாயக்க என்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு அனுமதி வழங்குமாறு சிறைச் சாலை அத்தியட்சகருக்கும் மன்று கட்டளையிட்டது. (ற-5-109)

## போட்டிப் பரீட்சை

அச்சுவேலி, செப். 6

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு கணக்காய்வு உத்தியோகத்தர், பட்டதாரி ஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சைக்கு விண் ணப்பிக்கும் வயதெல்லையை 40 வயதாக அதிகரித்துள்ளது. இது தொடர்பாக வடக்குமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலா ளர் அறிவித்துள்ளார்.

வடக்குமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்குமாகாண பாடசாலைகளுக்கு பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிப்பதற்கு இலங்கை ஆசிரியர் சேவை 3ஆம் வகுப்பு I (அ) தரத்துக்கும் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் III ஆம் தரத்துக்கும் ஆள் சேர்ப்பு செய்வதற்கு போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங் களைக் கோரியுள்ளது.

இவற்றுக்கு விண்ணப்பிப்பதற்கான வயது எல்லை விண்ணப்ப இறுதித் தினத்தில் 40 வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் பதவி போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்ப இறுதித் தினம் எதிர்வரும் 23ஆம் திகதி என்பதும் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்கான போட்டிப்பரீட்சை விண்ணப்ப இறுதித் தினம் எதிர்வரும் 30ஆம் திகதி என்பதும் குறிப்பிடத்தக்கது. (ற-11)

## சங்கக் கட்டடத்தில் தென்னிலங்கைக் கள் பொது முகாமையாளர் இடைநிறுத்தம்

### வடமராட்சி கிழக்கு பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப் 6

வடமராட்சி கிழக்கு பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்க கட்டடத்தில் இருந்து ஒரு தொகை தென்னிலங்கைக் கள் கைப்பற்றப்பட்டது தொடர்பாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் அன்ரனியூட் மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த கிளை முகாமையாளர் அன்ரனி றொபேட் ஆகியோர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.

ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி இரவுவேளை வடமராட்சி கிழக்கு பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கக் கிளை நிலையத்தில் அதனை அண்டியதான ஒரு கட்டடத்திலிருந்து பொலிஸாரால் ஒரு தொகை தென்னிலங்கை செயற்கைக் கள் கைப்பற்றப்பட்டது. அது தொடர்பாக சங்கத்தின் கிளை முகாமையாளர் உட்பட ஏனைய இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக வடமராட்சி கிழக்கு பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபையினர் ஆராய்ந்தனர்.

சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த தென்னிலங்கைச் செயற்கைக் கள்ளுடன் நாகர் கோயில் கிளை முகாமையாளருக்கும் பொது முகாமையாளருக்கும் தொடர்பிருந்தமை கண்டறியப்பட்டது.

கூட்டுறவுச் சங்கத்தின் எந்தவொரு கொள்வனவு நடவடிக்கைகளும் இயக்குநர் சபையில் ஆராயப்பட்டு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாகவே மேற்கொள்ளப்படல் வேண்டும். ஆனால் பொதுமுகாமையாளர், இயக்குநர்சபைத் தீர்மானங்களோ அல்லது தலைவரின் அனுமதியோ இல்லாமலே கொள்வனவு செய்துள்ளார். ஏற்கனவே கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் தெரிவிக்கப்பட்ட வெளிமாகாண செயற்கை கள்ளைக் கொள்வனவு செய்யக்கூடாது என்ற அறிவுறுத்தலை மீறி செயற்கை கள்ளைக் கொள்வனவு செய்துள்ளார்.

கள் கொள்வனவு செய்தது மட்டுமன்றி சங்கத்தின் கணக்குப் புத்தகங்களிலும் கிளைக் களஞ்சியக்கணக்குப்புத்தகங்களிலும் இருப்புநிலை எழுதப்படவில்லை. கணக்கில் மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. செயற்கைக் கள் விற்பனை செயற்பாட்டால் அங்கத்தவர்களது உற்பத்தியை விற்பனை செய்ய முடியாமல் போனதுடன் சங்க வளங்களைப் பயன்படுத்தி குறித்த செயற்பாட்டை மேற்கொண்டதால் சங்கத்தின் இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.

இந்தக் காரணங்களை முன்வைத்து மேற்போன்ற குற்றச்சாட்டுக்களுக்கான விளக்கங்களைக் கேட்ட போது அவரால் குறித்த குற்றங்கள் தன்னால் மேற்கொள்ளப்பட்டன என்று ஒப்புக் கொண்டு கடிதம் வழங்கப்பட்டதை ஆதாரமாக வைத்து சங்கத்தின் பொதுமுகாமையாளரும் அவருக்கு உடந்தையாக இருந்த கிளை முகாமையாளரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டனர். இது தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்வது என்றும் வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தீர்மானித்துள்ளது. (ற-5-ஈ)



ஆவணிச் சதுர்த்தியை முன்னிட்டு நேற்று சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் உள்ள குபேர கணபதி ஆலயத்தில் விசேட வழிபாடுகள் நடைபெற்றன. (ற-9)

## அலங்கார திருவிழா

பளை, செப்.6

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று விசேட பூஜையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் கொடுக்கிளாய் கடலில் சமுத்திரத் தீர்த்தமும் மறுநாள் ஆலய தாமரைத் தடாகத் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ற-9)

## கும்பாபிசேக பெரும் சாந்தி

யாழ்ப்பாணம், செப்.6

திருநெல்வேலி ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார் ஆலய மகா கும்பாபிசேகப் பெரும் சாந்தி எதிர்வரும் வியாழக்கிழமை 8ஆம் திகதி நடை பெறவுள்ளது.

7ஆம் திகதி புதன்கிழமை எண்ணெய் காப்பும் மறு நாள் கும்பாபிசேகமும் நடை பெறும் எனதர்ம பரிபாலன சபையினர் அறிவித்தனர். (ற)

## மீளிணக்கத் திட்டச் செயலமர்வுகள் 15 பிரதேச செயலக பிரிவுகளில்

அச்சுவேலி, செப்.6

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஏழு பிரதேச செயலக பிரிவுகளில் நடைபெற்று வந்த தேசிய மீளிணக்கத் திட்ட செயல் அமர்வுகள் இந்தமாதம் தொடக்கம் யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலக பிரிவுகளிலும் நடை பெறவுள்ளன. செயலமர்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான செயலகம் மேற்கொண்டுள்ளது.

கடந்த காலங்களை குணப்படுத்துவதன் ஊடாக எதிர்காலத்தை கட்டியெழுப்புதல் என்ற தொனிப்பொருளில் தேசிய மீளிணக்க நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான செயலகம் செயலமர்வுகளை நடத்துகின்றது.

இந்தச் செயலமர்வுகள் யாழ். மாவட்டத்தில் கோப்பாய், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி, மருதங்கேணி,சங்கானை, வேலணை ஆகிய ஏழு பிரதேச செயலக பிரிவுகளிலும் நடைபெற்றன. இந்த மாதம் தொடக்கம் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலக் பிரிவுகளிலும் நடைபெறுகின்றன.

தெரிவு செய்யப்பட்ட வளவாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் மூலம் கிராம அலுவலர் பிரிவு வாயிலாக நடைபெறும் செயலமர்வுகளில் திரட்டப்படும் கருத்துக்கள் ஒன்று திரட்டப்பட்டு தேசிய நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகள் உள்ளடங்கிய பரிந்துரை அறிக்கைகள் உரிய முறையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ற-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. பொது வைத்தியசாலைக்கு நிரந்தரப் பணிப்பாளர் நியமனம்

கிளிநொச்சி, செப். 6
கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் நீண்ட காலமாக நிரப்பப்படாதிருந்த பணிப்பாளர், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பதவி வெற்றிடங்கள் தற்போது நிரப்பப்பட்டுள்ளன.

> கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக பணிப்பாளர், பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாதிருந்தது. பதில் பணிப்பாளர்களே நியமிக்கப்பட்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாகப் பணிப்பாளர், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாமல் பதில் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளராக நிசாதி ரணசிங்கவும், பிராந்திய சுகாதார பதில் பணிப்பாளராக ஜெயராசாவும் நியமிக்கப்பட்டு சேவைகளை தொடர்ந்தனர். தற்போது நிரந்தர வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளராக பி.கார்திகேயனும், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக எஸ். மைதிலியும் வைத்தியசாலையின் நிரந்தர வைத்திய அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள் ளனர்.

முன்னர் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளராகக் கடைமை யாற்றிய எம். ஜெயராசா கிளிநொச்சி மாவட்ட மலேரியா தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரியாகவும், வைத்தியசாலைப் பணிப்பாளராகக் கடமையாற்றிய நிசாதி ரணசிங்க கிளிநொச்சி வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணராகவும் கடமையேற்றுள்ளனர்.

தற்போது பிராந்திய சுகாதாரப் பணிப்பாளராகக் கடமையேற்ற பி. கார்த்திகேயன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளராகவும் கடமை யாற்றியுள்ளார். (ற-21,ரி3)

## கைதி மீது சக கைதிகள் தாக்குதல் சிறை அத்தியட்சகரிடம் விளக்கம்

யாழ்ப்பாணம், செப். 6
யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விளக்க மறியல் கைதி ஒருவர் சக கைதிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் நீதிமன்றில் முன்னிலையாகி விளக்கமளிக்க வேண்டும் என்று சிறைச்சாலை அத்தியட்சகருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டது.

குற்றச்செயல் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட கைதி ஒருவர் சக கைதிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டேன் என்று நீதிமன்றில் தெரிவித்தார்.

இது தொடர்பில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு முறையிட்டேன் என்றும், அவர்கள் நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கவில்லை. தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கூண்டுக்குள்ளேயே என்னைத் தாக்கும் கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் நீதிமன்றில் குறிப்பிட்டார். இதன் போதே நீதிவான் பெ.சிவகுமார் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

சிறைக்கைதிகள் விடயத்தில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கவனத்துடன் செயற்பட வேண்டும். அவர்களின் முறைப்பாடுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். குறித்த தாக்குதல் தொடர்பில் உடனடி விசாரணை நடத்தி மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். தாக்குதல் சம்பவம் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தொடர்பான விடயங்களை மன்றில் முன்னிலையாகி விளக்கமளிக்க வேண்டும் என்று நீதிவான், யாழ் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார். (ற-5-109)

## ஆங்கில பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், செப்.6
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை யாழ். மாவட்டத்தில் ஆங்கிலம் மற்றும் மென்திறன் கற்கை நெறியை முழுநேரமாகவும் பகுதி நேரமாகவும் ஆரம்பிக்கவுள்ளது. அதில் பாடசாலை மாணவர்களும் பாடசாலையை விட்டுவிலகியவர்களும் தொழில் புரிபவர்களும் இணைந்து கொள்ளலாம்.

கற்கை நெறியில் பயில விரும்பும் மாணவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபதின் 1 ஆம் மாடியில் உள்ள அலுவலகத்தில் மேற்கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி1)

## யாழ். நகரின் முக்கிய இடங்களில் சி.சி.ரி.வி. கமரா பொருத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.6
யாழ். மா நகரப் பகுதியின் முக்கிய இடங்களில் கண்காணிப்புப் கமராக்களைப் பொருத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது-

நல்லூர் ஆலயத்திருவிழாவின் போது ஆலய சுற்றாடலில் பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கமராக்களை நகரை அண்டிய முக்கிய இடங்களில் பொருத்துவதற்கு ஆலோசிக்கப்படுகின்றது. யாழ்.நகரிலும் நகரை அண்டிய புறநகர்ப் பகுதிகளிலும் இந்தக் கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

மாநாகரப் பகுதியில் கண்ட கண்ட இடங்களில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவோரை தடுக்கும் முகமாக இவை பொருத்தப்படும். குறித்த நபர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.-என்றார்.(ற-17)

## உற்பத்தித் திறன் போட்டியில் தமிழ் மொழி புறக்கணிப்பு

### கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, செப். 6
கிளிநொச்சி மாவட்டச் செயலகம் உற்பத்தித் திறன் போட்டியில் தமிழ்ப் பெயர்களை நீக்கி ஆங்கிலத்தையே முழுமையாகப் பயன்படுத்திய செயலானது தமிழ் ஆர்வலர்களையும் தமிழ்ப் பற்றாளர்களையும் அவமானப்படுத்தும் செயலாகவே கருத வேண்டியுள்ளது. மொழியுரிமைச் சட்டத்தை மீறிய செயலாகவும் இதனைக் கருத வேண்டியுள்ளது.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது-
நாடு முழுவதிலும் பொதுவாக சிங்களம், தமிழ் இரண்டும் ஆட்சி மொழியாக உள்ளது. ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கின்றது. வடக்கு, கிழக்கில் தமிழிலும் ஏனைய மாகாணங்களில் சிங்களத்திலும் அரச ஆவணப் பதிவுகள் இருக்க வேண்டும் என்று இலங்கைச் சட்டத்தில் உள்ளது. அவ்வாறு உரிமையிருந்தும் நாம் தமிழைப் பயன்படுத்தத் தயங்குகின்றோம்.

பிற மொழியினருக்கு தாய் மொழிப் பற்று இயற்கையாகவே அமைந்துள்ளது. அவர்கள் தமது தாய் மொழியைப் பயன்படுத்தத் தவறின் அந்த நாடுகளில் தண்டமும் விதிக்கப்படுக்கிறது.

சிங்களப் பிரதேசத்தில் உள்ள அரச திணைக்களங்களில் பணியாற்றும் அரச ஊழியர்களின் தாய் மொழிப் பற்றுடன் ஓர் ஆங்கிலச் சொல்லையேனும் பயன்படுத்தாமல் சிங்கள மொழியை அதாவது தமது தாய் மொழியை முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

2015 - 2016 ஆம் ஆண்டுக்கான போட்டியை இந்த ஆண்டு இறுதியில் நடத்த எண்ணியிருப்பதால் கோப்புக்கள், பதிவேடுகள், ஆவணங்கள் என்பவற்றில் ஆங்கிலப் பெயர்களை நீக்கி தமிழ்த் தாயின் கண்ணீரை நீக்குங்கள். -என்றுள்ளது.

மக்கள் பாவனைக்கு உரிய அனைத்து ஆவணங்களும் பதாகைகளும் மூன்று மொழிகளிலும் காணப்படுகின்றன. திணைக்கள ஊழியர்கள் பாவிக்கின்ற கோப்புக்கள் மட்டும் ஆங்கில மொழியில் காணப்படுகின்றன. சேகரிப்பை இலகுபடுத்தவே இந்தக் கோப்புக்கள் ஆங்கில மொழியில் பயன் படுத்தப்பட்டன.- என்று கிளி நொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ற-5-ரி-ரி3)

## சைவ சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.6
வண்ணை - சாந்தையர்மடம் சிறிகற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகம் பாடசாலை மாணவர் களுக்கு இடையில் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு சைவ சமய அறிவுப் பரீட்சை, செயல் முறைப் போட்டி ஆகியவற்றை நடத்தவுள்ளது.

தரம் - 1,2 மாணவர்களுக்கு நீதிநூல் மனனப் போட்டியும், தரம்-3 தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கு சைவ சமய அறிவுப் பரீட்சையும், கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல் முறைப் போட்டிகள் என் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

சைவசமய அறிவுப் பரீட்சை ஒக்ரோபர் 16 ஆம் திகதியும், நீதிநூல் மனனப் போட்டி ஒக்ரோபர் 20 ஆம் திகதியும் செயல்முறைப் போட்டி ஒக்ரோபர் 23 ஆம் திகதியும் நடைபெறும். பரீட்சைக்கு தோற்ற விரும்புவோர் எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் இல.82 நாவலர் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகத்துடன் தொடர்புகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர். (ற-5-ரி1)

## புளியம்பொக்கணையில் 28 போத்தல் கசிப்பு மீட்பு

கிளிநொச்சி, செப்.6
கிளிநொச்சி தருமபுரம் புளியம்பொக்கணையில் 28 போத்தல் கசிப்பும் 271 போத்தல் கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற குழுவினர் புளியம்பொக்கணைக் காட்டுப்பகுதியில் சுற்றிவளைப்பு நடத்தினர். அதில் கசிப்பும், கோடாவும் கைப்பற்றப்பட்டன. இருவர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ஏற்கனவே சட்ட விரோத கசிப்பு உற்ப்பத்தி தொடர்பில் தண்டிக்கப்பட்டவர் என்றும், கைது செய்யப்படடவர்கள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ற-ரி3)

## இரணைதீவில் தங்கி மீன் பிடிக்க விரைவில் அனுமதி பெறப்படும்

### அமைச்சர் விஜயகலா தெரிவிப்பு

கிளிநொச்சி, செப். 6
இரணைதீவில் தங்கி நின்று தொழில் மேற்கொள்வதற்கு, உரியதரப்புக்களுடன்பேச்சுநடத்தி நடவடிக்கை எடுக்கப் படும்.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இரணைதீவு பிரதேசத்திற்கு இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நேரில் சென்றார். கடற்படையினரின் படகில் சென்று அங்கு நிலமைகளைப் பார்வையிட்டார்.

அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அவர்-
மக்களின் மீள்குடியமர்வு தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வேன். 1992 ஆம் ஆண்டு இந்தப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்கள் இங்கு மீளக் குடியமர வேண்டும். அதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

அந்தப் பகுதி மக்கள் இங்கே தங்கி நின்று தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். முதல் கட்டமாக அந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இரணைதீவு மக்கள் தெரிவித்ததாவது:-
நாம் இந்தப் பகுதியில் மீள் குடியமர்வதற்கு ஆர்வத்துடன் உள்ளோம். 90 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இந்தக் கடற்தொழிலை நம்பி வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இங்கு மீள் குடியமரும் போது தமது வாழ்வாதாரத்தை அதிகரித்துக் கொள்ள முடியும் - என்றனர். (ற-5-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா வழங்கவுள்ள படகுகளுக்கு 25 குதிரைவலு இயந்திரம் பொருத்துக

## முல்லைத்தீவு மீனவர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, செப்.6
முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு இந்திய அரசு வழங்கவுள்ள 150 படகுகளுக்கு 25 குதிரை வலுக்கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்களை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்திய அரசு 150 படகுகளையும், வெளியிணைப்பு இயந்திரங் களையும் வழங்க இணங்கியது. அதற்கான பூர்வாங்க ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டுஇந்திய-இலங்கை அரசுகளுக்கு இடையே ஒப்பந்தங்கள் நிறைவடைந்துள் ளன.
படகுகள் கொள்வனவுக்கு இந்தியத் தூதரகம் ஏற்பாடு செய்தது. வெளியிணைப்பு இயந்திரங்களுக்கான கொள்வனவுக் கூறுவிலை கோரப்பட்டது.
கூறுவிலை கோரலில் 15 குதிரை வலுக் கொண்ட இயந்திரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்திய அரசு படகு வழங்க இணங்கிய காலத்தில் 20 குதிரை வலுவுக்கு மேற்பட்ட வலுக் கொண்ட இயந்திரம் பொருத்தித் தொழில்செய்யக் கடற்படை தடை விதித்திருந்தது. தற்போது 40 குதிரை வலுக் கொண்ட இயந்திரம் பொருத்தித் தொழில் செய்ய அனுமதிக்கப்படுகின்றது. இந்தியத் தூதரகம் வழங்கவுள்ள வெளியிணைப்பு இயந்திரங்களை 25 குதிரை வலுக் கொண்ட இயந்திரமாக வழங்க வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
கொள்வனவுக்கான அனுமதிகள், செலவு மதிப்பீடுகள் அனைத்தும் நிறைவுபெற்று கூறுவிலைக் கோரலும் இம்பெற்றுள்ளது. அதற்கு அனுமதி வழங்கி பொருள்களும் விரைவில் வழங்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்தில் மாற்றம் செய்யப்படுவது நீண்ட காலவிரயத்தை ஏற்படுத்தும் என்பதால் 15 குதிரை வலுக் கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்களுடனேயே படகுகள் வழங்கப்படும் என்று தூதரகத் தகவல்கள் தெரிவித்தன. (ற-101)

# வன வளத் திணைக்கள செயற்பாட்டால் வீதிகளை செப்பனிட முடியா நிலைமை

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 6
மன்னார் மாவட்டத்தின் மொத்த நிலப் பரப்பில் 45 வீத நிலப்பகுதி வனவளத் திணைக்களத்துக்குச் சொந்தமானது என்று உரிமை கோரப்படுகின்றது. அதனால் கிராமங்களை மட்டுமன்றி முக்கிய வீதிகள் கூட செப்பனிடப்பட முடியாத நிலமை காணப்படுகின்றது.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.
வன விலங்கு அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா மற்றும் மாவட்ட செயலாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.
அது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது-
மன்னார் மாவட்டத்தின் மொத்த நிலப் பரப்பில் 45 வீத நிலப்பகுதியை வனவளத் திணைக்களத்தினர் சொந்தம் கொண்டாடுகின்றனர். பழைய ஆவணங்களின் பிரகாரம் ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு பல குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு அவற்றுக்கான பாதைகள் அமைக்கப்பட்டன. அவற்றைத் தற்போது செப்பனிட முடியவில்லை. குறித்த வீதிகள் அமைந்துள்ள பகுதி வனவளத் திணைக்களம் தமது ஆளுகைக்கு உட்பட்ட பகுதி எனக் கூறுகின்றது.
மக்கள் நீண்ட காலமாக வாழும் பகுதிகளை வன வளத் திணைக்களத்தினர் விடுவிக்க வேண்டும் என வன விலங்கு அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவிடம் கோரிக்கை விடப்பட்டது.
அதை ஆராய்ந்த அமைச்சர் அது தொடர்பில் நேரில் சென்று ஆய்வு செய்து உடன் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டார்.
அமைச்சின் செயலாளரால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையின் பிரகாரம் குறித்த பகுதிகளை விடுவிப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.
இக் கலந்துரையாடலில் நிலையான அபிவிருத்தி மற்றும் வன விலங்கு அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா, வர்த்தக வாணிப அமைச்சர் ரிஸாத் பதியுதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண சபை உறுப்பினர், மன்னார் மாவட்ட மேலதிக செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி மெல், மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ், கடற்படை, இராணுவ உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் - என்றார். (ற-101)

# மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், செப்.06
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்றுசெவ்வாய்க்கிழமைகாலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணி வரை கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் பாரதிவீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், கறுக்காய் பிரதேசம், வாழைத்தோட்டம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும். வவுனியாவில் தோணிக்கல் சிவன் கோயில் பிரதேசம்,குட்செட்வீதி ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.
மன்னாரில் உயிலங்குளத்திலிருந்து அடம்பன் வரைக்கும், இத்திக்கண்டல்,வேட்டையன்முறிப்பு, மினுக்கன், பாப்பா மோட்டை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும் .(ற-ரி)

# இரண்டு மில்லியன் ரூபா செலவில் வெடுக்குநாறிக் குளம் சீரமைப்பு

முல்லைத்தீவு, செப்.6
போரால் சேதமுற்ற வெடுக்குநாறிக்குளம் 2 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்படுகின்றது. சீரமைப்புப் பணிகள் வேகமாக முன்னெடுக்கப்படு கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வெடுக்குநாறிக்குளம் போரின் பின்னர் சீரமைக்கப்படவில்லை. குளத்தின் அணைக்கட்டு பாதிக்கப்பட்டிருந்தது. குளத்தின் நீர் பாயும் துருசும் பழுதடைந்தடைந்திருந்தது.

> “குளச் சீரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் குளத்தின் கீழ் 35 ஏக்கர் நிலப் பகுதியில் விவசாயம் மேற்கொள்ள முடியும். அதனால் 15 விவசாயக் குடும்பங்கள் பயனடைவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.”

குளத்தின் கீழ் உள்ள விவசாயிகள் தமது விவசாயத்துக்குத் தேவையான நீரைத் தேக்க முடியாத நிலை காணப்பட்டது. கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களத்தால் 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு குளத்தைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
குளச் சீரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் குளத்தின் கீழ் 35 ஏக்கர் நிலப் பகுதியில் விவசாயம் மேற்கொள்ள முடியும். அதனால் 15 விவசாயக் குடும்பங்கள் பயனடைவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.
(ற-5-ரி7-500)

# இராயப்பு யோசேப்பு ஆண்டகை நாடு பிரிவதை ஆதரிக்கவில்லை

*அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகள் தெரிவிப்பு*

மன்னார், செப்.6
ஒரு போதும் நாடு பிரிந்து போவதை ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஆதரிக்கவில்லை. அவர் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வைத்தான் எதிர்பார்த்தார். தமிழ் மக்களுக்கு நீதியான ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தனது போராட்டத்தை முன்னெடுத்தார்.,
இவ்வாறு மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகள் தெரிவித்தார்.
மன்னாரில் இடம்பெற்ற மன்னார் மறை மாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை பற்றியதான நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
ஒய்வு பெற்ற மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை மக்களுக்காகவும், சமூகத்துக்காகவும், திருச்சபைக் காகவும், நாட்டுக்காகவும் அரும் பணி ஆற்றியுள்ளார்.
பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்க மக்களின் ஆன்மிக வாழ்வுக்கு அவர் பொறுப்பாக இருந்தார். பல விதமான ஆன்மிக முன்னேற்றத் திட்டங்கள் அவருடைய காலத்தில் முன்னெடுக்கப்பட்டன. அவர் ஆற்றிய பல்வேறு பணிகளை நாங்கள் இந்த நூலிலே பார்க்கின்றோம்.
தமிழ் மக்களின் வாழ்விலே அவர் பின்னிப்பிணைந்தவராக அவர் களின் உரிமைப் போராட்டத்திலேயே அவர் இரண்டறக் கலந்தவராக இருந்திருக்கின்றார். அதை யாரும் மறுப்பதற்கு இல்லை. சர்வதேச சமூகமே அதை ஏற் றுக்கொண்டுள்ளது.
ஆயர் ஒரு பொழுதும் நாடு பிரிந்து போவதை ஆதரிக்கவில்லை.தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வைத்தான் அவர் எதிர்பார்த்தார். தமிழ் மக்களுக்கு நீதியான ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தனது போராட்டத்தை முன்னெடுத் தார். அதைப் பலர் பலவிதமாக புரிந்து கொண்டதும் எமக்குத் தெரி யும். தமிழ் மக்கள் கௌரவமான, நீதியான ஒரு தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதிலே அவர் விடாப்பிடியாக இருந்தார்.
மக்களின் குறைகளை, மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை கிடைக் கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி வெளிப்படுத்தினார். பிரச்சினைகள் நடந்த காலகட்டத்தில் அவருடைய குரல் ஒடுக்கப்பட்டவர்களுக்காகவே சென்றது.
படகுத் துறையிலே விமானத் தாக் குதல் இடம்பெற்ற போது தனது அலுவலகத்தில் இருந்து கொண்டு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு அப்பாவி மக்களை நீங்கள் கொன்று விட்டீர்கள் என்று கூறினார். அப் போது அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் ஆயர் அவர்கள் தொடர்ந்து சொன்னார் நீங்கள் இதை செய்வது பிழை, அப்பாவி மக்களைக் கொன்றுவிட்டு நீங் கள் பெருமிதம் அடைய வேண்டாம் என்று கூறினார்.
அவர் உரிமைக்காகவும் மக்கள் சார்பாகவும் நின்று பேசிய தன்மையை இது காட்டுகின்றது - என்றார். (ற-21)

### வருடாந்த மகோற்சவம்

கைதடி மேற்கு இலுங்கித் தோட்டம் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தேர்த்திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கும், மறுநாள் முற்பகல் 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ற-ரி)

★★★

உரும்பிராய் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை 7 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 15 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவம் 10மணிக்கும் நடைபெறும். (ற-ரி)


## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 04 . 1929



மறைவு
04 . 09 . 2016

திருமதி
**நாகேஸ்வரி அம்மா வெற்றிவேலு**
(ஓய்வு பெற்ற ஆசிரியர் -சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு, சாவகச் சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி அம்மா வெற்றிவேலு 04.09.2016 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு (முன்னாள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான சேனாதிராஜா - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பூலோகசிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற லதா சிவகுமார் மற்றும் அசோகன்(லண்டன்), குமாரன்(கனடா), ராதா கிருஷ்ணன் (ஐக்கியஅமெரிக்கா), Dr.செல்வரஜனி(களுத்துறை அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் P.K.சிவகுமார்(கனடா), புவனேஸ்வரி (லண்டன்), வாசுகி (கனடா), தாரணி (ஐக்கியஅமெரிக்கா), Dr.முகுந்தன் (காலி அரசினர் பொது வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஹரிசரவணா, சிந்திவைதேகி, கரிகஜன், அரன்செந்தூரன், விதுஷா, ஹிமவான்,சாம்பவி, வருண், ஜீவன், கீர்த்தனா, கீர்த்திகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2016) புதன் கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் காந்தாளம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

" சிவனகம் "
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
73/34, A Saranangara place,
Sri saranangara Road, Dehiwela.
Dr.Selvi Vettivelu.

தகவல்
குடும்பத்தினர்.

தொடர்பு: 077 323 0215


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் அச்சத்தை நல்லாட்சி முடிவுக்கு கொண்டுவந்துள்ளது

## இப்படிக் கூறுகிறார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, செப். 6

மக்களின் அச்சத்தை நல்லாட்சி அரசு ஒருவருடகாலத்தில் நிறைவுக்குக் கொண்டு வந்துள்ளது. இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தன தெரிவித்தார். பியகமவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டில் கடந்த காலத்தில் இடம்பெற்ற ஊழல் நிறைந்த ஆட்சியை வீழ்த்தி நல்லாட்சி அரசை அனைவரும் ஒன்றிணைந்து ஜனவரி 8ஆம் திகதி உருவாக்கினோம். அதன்மூலம் ராஜபக்ச குடும்ப ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தோம். நாட்டில் ஏற்பட்டிருந்த இனப்பிரச்சினையைத் தீர்த்து இனங்களுக்கிடையில் சகவாழ்வை ஏற்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தை மேற்கொள்ளவே இணக்க அரசு ஏற்படுத்தப்பட்டது. கடந்த காலத்தில் ஊழல் மோசடிகள், வெள்ளை வான் கலாசாரம், ஊடகவியலாளர்கள் கடத்தல், இனங்களுக்கிடையிலான பிரச்சினை என்று பல சிக்கல்கள் மத்தியில் மக்கள் அச்சத்துடனே வாழ்ந்தனர். மக்களின் அச்சத்தை நல்லாட்சி அரசு ஒரு வருட காலத்தில் நிறைவுக்கு கொண்டு வந்தது. வாழ்வாதார வறுமையில் இருந்த மக்களின் துயரத்தை துடைக்கும் வகையில் நல்லாட்சி அரசின் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை குறைத்து நிவாரணம் வழங்கினோம்.

> **அரசு அமைந்தவுடன் அபிவிருத்திகள் உடனடியாக ஏற்படப்போவதில்லை. ஆனால் இளைஞர்களின் தொழிற் பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக்கொடுப்பதாகப் பிரதமர் வாக்குறுதி வழங்கியுள்ளார். அதற்கான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோன்று ஆசியாவின் அபிவிருத்தி அடைந்த நாடாக இலங்கையை ஏற்படுத்துவதே எமது திட்டமாகும்.**

மகிந்த ராஜபக்ச காலத்தில் பன்னாட்டுச் சமூக மட்டத்தில் நாடு மிகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இன்று நல்லாட்சி அரசின் வேலைத்திட்டங்கள் காரணமாக பன்னாடுகள் எமக்கு உதவுவதற்கு முன்வந்துள்ளன. அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, சீனா போன்ற நாடுகள் எம்முடன் இணைந்து செயற்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையில் எமக்கு எதிராக வாக்களித்த இந்தியா தற்போது எம்முடன் இணைந்து செயற்படுகின்றது. அன்று மிகப் பெரிய கடன்பட்ட நாட்டைத்தான் மகிந்தவிடம் இருந்து நாங்கள் பெற்றுக் கொண்டோம். அந்த கடன்களை அடைக்கும் நடவடிக்கைகளால் அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்தும் மக்கள் எதிர்பார்த்த அபிவிருத்திகளை உடனடியாக மேற் கொள்ள முடியவில்லை.

அரசு அமைந்தவுடன் அபிவிருத்திகள் உடனடியாக ஏற்படப் போவதில்லை. ஆனால் இளைஞர்களின் தொழிற் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதாகப் பிரதமர் வாக்குறுதி வழங்கியுள்ளார். அதற்கான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோன்று ஆசியாவின் அபிவிருத்தி அடைந்த நாடாக இலங்கையை ஏற்படுத்துவதே எமது திட்டமாகும்.

நல்லாட்சி அரசில் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்வதுடன் 20 வருடங்கள் தொழிற் பிரச்சினையில் கஷ்டப்பட்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கட்சி இளைஞர்களின் தேவைகளை நிறைவேற்ற எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பது எமது கடமை. அதனை நாங்கள் மேற்கொள்வோம் - என்றார். (ந-5)

# 50 புதிய தொழிற் சந்தைகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, செப். 6

50 புதிய தொழிற் சந்தைகளை ஏற்படுத்தி இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதற்காக சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். பியகம தேர்தல் தொகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்ற நிகழ்வில் பிரதமர் உரையாற்றினார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசிய கட்சியின் இளைஞர் அமைப்பில் நான் இருக்கும் போது கட்சியின் தலைவராக ஜே.ஆர் ஜெயவர்த்தன இருந்தார். அவர் சிறந்த தலைமைத்துவத்தை கொடுத்து வந்தார். நாங்கள் சந்தித்த தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியை அமைத்தோம். நான் பியகம தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவானேன். பியகம தொகுதி புதிதாக உருவாக்கப்பட்ட தொகுதியாக இருந்ததால் அது எந்தவித முன்னேற்றமும் இல்லாத பிரதேசமாகவே காணப்பட்டது.

ஆட்சி அமைத்ததும் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதே இருந்த பிரச்சினையாகும். தேர்தல் அறிக்கையில் தொழிற்சாலைகளை ஆரம்பித்தல் மற்றும் பன்னாட்டு முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குதல் என்ற விடயங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அதனடிப்படையின் ஆரம்பமாக கட்டுநாயக்க வர்த்தக சந்தை ஆரம்பிக்கப்பட்டது. பன்னாட்டு முதலீட்டாளர்கள் அங்கு வர ஆரம்பித்தனர். இதனால் அந்தப் பகுதியில் இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்புக்கள் கிடைத்தன.

பியகம தொகுதி இளைஞர்களுக்கு தொழில் பிரச்சினையைத் தீர்ப்பதென்றால் இங்கும் வர்த்தகச் சந்தை ஏற்படுத்த வேண்டும் என்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிடம் தெரிவித்தேன். அவரும் அதற்கு அனுமதித்தார். இந்தப் பகுதி எந்த முன்னேற்றமும் இல்லாத பிரதேசம் காரணமாக வர்த்தக சந்தை அமைக்கப்படுவதற்கு சிலர் எதிர்த்து வந்தனர்.

இந்தப் பகுதிக்கு வர்த்தகச் சந்தை ஏற்படுத்தப்படும்போது மேலும் சிலர் ஒரு வர்த்தகச் சந்தை போதும் என்று கூறியதுடன் அவ்வாறு அமைப்பதென்றால் வேறு பிரதேசமொன்றுக்கு கொண்டு செல்லுமாறு தெரிவித்தனர். இந்தப் பகுதி மக்கள் தொடர்ந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க முடியாது. அவர்களின் கரங்களில் பணம் கிடைக்க வேண்டும் என்று நாங்கள் உறுதியாக இருந்தோம். அதனால் நாங்கள் எடுத்த முயற்சியை கைவிடாமல் தொடர்ந்து மேற்கொண்டதால் 2 ஆவது வர்த்தக சந்தை இங்கு ஏற்படுத்தப்பட்டது.

அதன் பிறகு இந்தப் பிரதேசம் முன்னேற்றமடைய ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து பாதைகள் ஆரம்பிக்கப்பட்டன. சபுகஸ்கந்த எண்ணெய் குழாய், பொன்டேரா பால் கம்பனி, கொகாகோலா நிறுவனம் இவ்வாறு மிகப் பெரிய வர்த்தக நிலையங்கள் தற்போது இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாங்கள் கைத்தொழில் பேட்டைகளை கிராமங்களுக்கு கொண்டு செல்லும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்தோம். அதன் அடிப்படையிலேயே ஜனாதிபதி பிரேமதாஸ நாடு முழுவதும் கிராமங்களை மையப்படுத்தி 200 ஆடைத் தொழிற்சாலைகளை ஆரம்பித்தார்.

நாட்டை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்ல விரும்பக் கூடியவர்களே ஐக்கிய தேசிய கட்சியில் இருந்தனர். கட்சியை பிளவுபடுத்த எவருக்கும் இடமளிக்கவில்லை. எதிர்க் கட்சியில் 20 வருடங்கள் இருந்தும் கிராமத்தின் முன்னேற்றதுக்கான வேலைத்திட்டங்களை தொடர்ந்து மேற்கொண்டுவரும் முயற்சியை கைவிடவில்லை. அதன் காரணமாகத்தான் தற்போது கண்டியில் இருந்து அம்பந்தோட்டை வரையில் 50 புதிய தொழிற் சந்தைகளை ஏற்படுத்தி இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதற்காக சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

கைத்தொழில் நிலையங்களை கிராமங்களுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்தது போன்று தகவல் தொழில்நுட்ட துறையையும் கிராமங்களுக்கு கொண்டுசெல்லும் வேலைத் திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம் - என்றார். (ந-5)

# லண்டனில் கடலில் மூழ்கி இறந்த மாணவர்களின் இறுதிநிகழ்வுகள்

## மூவாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் திரண்டு அஞ்சலி





கொழும்பு, செப். 6

லண்டனில் கடந்த மாதம் எதிர்பாராது கடலில் மூழ்கிச் சாவடைந்த ஐந்து ஈழத்தமிழ் இளைஞர்களின் இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை மூவாயிரத்துக்கும் அதிகமான தமிழர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி தென்கிழக்கு லண்டனில் உள்ள கேப்பர் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த இந்த ஐந்து நண்பர்களும், திடீரென பெருக்கெடுத்து வந்த கடலில் மூழ்கினர்.

பிரிட்டன் வாழ் ஈழத்தமிழர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தில் கேனுகன் சத்தியநாதன், கோபிகாந்தன் சத்தியநாதன், நிதர்சன் ரவி, இந்துசன் சிறீஸ்கந்தராசா, குருசாந்த் சிறீதவராசா ஆகிய ஐந்து இளைஞர்களே உயிரிழந்தனர். அவர்களின் இறுதிச்சடங்கில் மூவாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அண்மைக்காலத்தில்பெரும்எண்ணிக்கையான ஈழத்தமிழர்கள் ஒன்றுதிரண்டஇறுதிஅஞ்சலிநிகழ்வாக இது அமைந்தது. (ந-5)

# சு.கட்சி தற்போதுதான் உரியவரின் தலைமைத்துவத்தின் கீழ் உள்ளது

## அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 6

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்போதுதான் உரியவர் தலைமைத்துவத்தின் கீழ் வந்துள்ளது. இனிவரும் எந்தவொரு சவாலையும் துணிந்து எதிர்க்க தயாராக உள்ளோம். இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 65ஆவது மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் சிறிலங்கா சுதந்திர கட்சியில் இன, மத அடிப்படையிலான வேறுபாடுகள் எவையும் இருக்கவில்லை. கட்சியின் உருவாக்க தந்தையான பண்டாரநாயக்கவின் கொள்கையாகவும் அது இருந்தது.

அண்மைக் காலமாக அவரின் கொள்கைக்கு முரணாக செயற்படும் நிலமை காணப்பட்டது. தற்போது அவ்வாறான நிலமை இல்லை. கட்சிக்கு வெளியிலிருந்து விமர்சிப்பவர்கள் தற்போது கட்சிக்கு வந்து பார்க்க வேண்டும். அப்போதுதான் அவர்களால் இந்தக் கட்சியின் வலிமையை முழுமையாக உணர்ந்து கொள்ள முடியும்.

எமக்கு எதிராக வருகின்ற எவ்வாறான சவால்களையும் எதிர்க்கும் நிலைப்பாட்டிலேயே தற்போது நாங்கள் வலிமையாக உள்ளோம். கட்சி தற்போது உரியவர் கைகளில் கிடைத்துள்ளது. கட்சியை உருவாக்கிய பண்டாரநாயக்கவின் கொள்கைகளும் தற்போது மீண்டும் உயிரூட்டப்படுகின்றது - என்றார். (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு – கிழக்கில் உள்ள இராணுவத்தை பிரதான தளங்களுக்குத் திருப்ப வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவிப்பு

கொழும்பு, செப். 6
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தற்போது போரில்லை. தேசிய பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு அந்தப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை பிரதான படைத்தலைமையகங்களுக்குப் படிப்படியாக அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த வர்ணசிங்க தெரிவித்தார்.

ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம் வடக்கு - கிழக்கில் இராணுவத்தினர் குறைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளமை தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாட்டை விளக்கியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

அண்மையில் இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் வடக்கிலிருந்து இராணுவத்தினரை அகற்ற வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குள் அவர்களின் நடமாட்டத்தை மட்டுப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். இந்த விடயம் குறித்து அவர் அறிவுறுத்தாவிடினும் வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவத்தை படிப்படியாக குறைக்க வேண்டியது அரசின் முக்கிய கடமை. தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போர் இல்லை. அங்கு இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலை கொள்வதில் அர்த்தமில்லை.

> பான் கீ–மூன் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குள் அவர்களின் நடமாட்டத்தை மட்டுப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். இந்த விடயம் குறித்து அவர் அறிவுறுத்தாவிடினும் வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவத்தை படிப்படியாக குறைக்க வேண்டியது அரசின் முக்கிய கடமை.

குறித்த பகுதியிலிருந்து இராணுவத்தை குறைக்கும் போது வேறு பகுதிகளிலுள்ள இராணுவ தலைமை அலுவலகங்களில் அவர்களை நிலைகொள்ளச் செய்ய வேண்டும். தேசிய பாதுகாப்பை கருத்திற் கொண்டு இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்கும் போது துரிதமாக இராணுவத்தைத் தலைமையகங்களுக்கு மாற்றி அனுப்புவதும் சாத்தியப்படாது. அதனால் படிப்படியாகவே குறைக்க வேண்டும்.

வடக்கு – கிழக்கு முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பான் கீ – மூனிடத்திலும் போர்க் குற்றவிசாரணைகளின் போது பனனாட்டுச் சமூகத்தின் தலையீடு வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அது அவரின் தனிப்பட்ட வேண்டுகோள் என்பதால் ஐ.நா.சபை பெரிதாக ஏற்றுக்கொள்ளுமா என்பது கேள்விக்குறியேயாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இவ்வாறான வேண்டுகோள் விடுத்தால் மாத்திரமே அது ஒரு நாட்டின் வேண்டுகோள் என்ற அடிப்படையில் நோக்கப்பட்டு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் - என்றார். (ந-5)

# இலங்கை திரும்பினார் மகிந்த

கொழும்பு, செப். 6
மலேசியாவுக்கான பயணத்தை மேற்கொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்றுக் காலை நாடு திரும்பினார்.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான குழு நேற்று மு.ப. 10.30 மணிக்கு மலேசியா விமான சேவைக்குச்சொந்தமான யுஎல் 319 விமானத்தின் மூலம் கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தித் தளத்துக்கு வந்தனர்.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான குழு 5 நாள் பயணத்தை மேற்கொண்டு கடந்த வாரம் மலேசியா சென்றது. இந்தக் குழுவினருக்கு மலேசியா வாழ் தமிழ் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். (ந-5)

# புலிகளின் ஆதரவாளர்கள் ஏன் என்னைப் பின்தொடர்கின்றனர்?

## கேள்வி எழுப்புகின்றார் மகிந்த

கொழும்பு, செப்.6
தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் ஏன் இன்னும் என்பின்னாலேயேவந்துகொண்டு இருக்கின்றார்கள்.



இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

மலேசியாவில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போரை நான் நிறைவு செய்யவில்லை. அப்படி இருக்கையில் ஏன் என் பின்னால் மாத்திரம் அனைவரும் வருகின்றனர். போரின் 75 சதவீதத்தைத் தானே நிறைவு செய்தேன் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கிறார். அப்படியானால் நான் போரை நிறைவு செய்யவில்லை என்றுதானே அர்த்தம். புலிகளின் ஆதரவாளர்கள் அப்படியானால் ஏன் என்னைப் பின்தொடர்ந்து வருகின்றனர். தமிழீழ விடுதலை புலிகளின் ஆதரவாளர்களின் அச்சுறுத்தல்கள் காரணமாகஎன்னுடையஅரசியல் செயற்பாடுகளுக்கு முடிவே கிடையாது- என்றார். (ந-5)

# ஒற்றையாட்சி முறைமைக்குள் அரசமைப்பு உருவாக்கப்படும்

## சுதந்திரக் கட்சியின் சம்மேளனத்தில் தீர்மானம்

கொழும்பு, செப். 6
தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஒற்றையாட்சி முறைமைக்குள் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்ற சிறப்புப் பிரேரணை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சம்மேளனத்தில் முன்வைக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.பிரேரணையை தொழில்நுட்ப அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்மொழிந்தார். அங்கு ஏழு பிரேரணைகள் முன் வைக்கப்பட்டன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சியைப் பாதுகாக்கும் செயற்றிட்டத்தை பாராட்டியும், இடதுசாரிக் கட்சிகளை ஒன்றிணைத்தல், இன நல்லிணக்கம் ஏற்படுத்தல் உள்ளிட்ட ஏழு பிரேரணைகள் முன் வைக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

ஒற்றையாட்சிக்குள் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். அதற்கான வேலைத் திட்டங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆரம்பித்துள்ளார் - என்று சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார். (ந-5)



நான்காம் நாள் திருவிழா
தெல்லிப்பழை துர்க்கை அம்மன்
ஐந்தாம் திருவிழா

### தெல்லிப்பழையூரில்(ன்) அருள் மிளிர்கிறது

கல்யாணம் கைகூடாக் கன்னிப் பெண்களுக்கு இன்முகம் செய்பவளே
நல் 'வரன்கள்' கூட உவந்தளிக்கும் சக்தியாய்
வல்லமை கொண்டவளே! வாள் ஏந்தும் சங்கரன் மணமுறை நாயகியே
தெல்லியூரில்(ன்) அருள் மிளிர்கிறது உன்னாலன்றோ தாயே...!!

க.பாலசுப்பிரமணியம், வட்டுக்கோட்டை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இன்று (06.09.2016)
செவ்வாய்க்கிழமை
ஐந்தாம் திருவிழா



மின்னலிலே ஒளி எடுத்து
மென்மலரின் குணம் எடுத்து
அன்னையே உன் உருவம்
அமைத்தாயோ ?
என்னவென்று பாடுவதோ ?
எந்த மொழி சூடுவதோ !
ஒன்றும் அறியாமல்
ஊமையாய் போனேனம்மா !

உன் போலக் கருணையுள்ளோர்
உன் போலக் கடுமையுள்ளோர்
உன்போல அருள்புரிவோர்
உன்போல பகையழிப்போர்
எம் போல ஏழ்மையுள்ளோர்
எம் போலக் குறைகளுள்ளோர்
என்னவளே ! எவருண்டு !
ஈடிலாதாய் ! அருள்வாயம்மா !

அனுசரணை: ச. ஸ்ரீஜெகன் (கொழும்பு)
(இந்து இளைஞர் சங்க உறுப்பினர்)

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.



செல்வச் சந்நிதியான் ஆலய ஆறாம் திருவிழா

அன்னதானக் கந்தனே
செல்வத்தின் சீர்நிதி வேலவனே
அல்லும் பகலும் உனைத்துதிக்கும்
மீளா அடியவரின் குறை தீர்த்திடப்பா
வேலும் மயிலுமாய் திருக்காட்சி தந்தெம்மை
அருளுரைத்து காத்திடப்பா
கந்தா கடம்பா கதிர்வேலா என்றுன்னை
அழைத்திடவே
கால மெல்லாம் முகமலர்ந்தருள்வாய் குமரா...!

த.ஹேமா



செல்வச்சந்நிதியானுக்கு
இன்று (06.09.2016)
செவ்வாய்க்கிழமை
ஆறாம் திருவிழா

ஆறுமுகத்தினால் அடியார் குறை களையும் அண்ணலே
கூறிட்டு சூரபத்மனை சேவலும் மயிலும் ஆக்கியவனே
தேரிட்டு செல்வச்சந்நிதி உறைந்துள்ள முருகனே
ஆறிட்டு திருவிழா இன்று உனக்கு

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:
சிறுவர் முதல் அனைவருக்கும் ஏற்ற
பல வகையான ஆடைகளைப் பெற்றிட
செல்லமுத்தூஸ்
புடைவை மாளிகை
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel : 021 226 3238

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெறும் கழிவிரக்கம் மட்டும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துமா?

✳ முன்னைய வரலாற்றுத் தவறுகளைப் புரட்டிப்பார்த்தோ என்னவோ, இந்த நாட்டில் நடைபெற்ற சம்பவங்களுக்காக வருத்தப்பட்டுள்ளார் நாட்டின் ஜனாதிபதி.

அது மட்டும் அன்றி--

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் அவகாசம் வேண்டும் என்று அதன் பொதுச் செயலாளர் பான் கீ - மூனிடம் வலியுறுத்த உள்ளதாக, நாட்டின் தலைவர் தகவல் வெளியிட்டிருக்கிறார்

பண்டா - செல்வா ஒப்பந்தம் மற்றும் டட்லி - செல்வா ஒப்பந்தம் ஆகியனவற்றை ஒப்பேற்றுவதற்கும் அவர் இடமளிக்கவில்லை.

அவற்றின் பின்னர், இடம்பெற்ற இந்திய இராணுவத்தினரின் வருகை மற்றும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் என்பன இந்த நாட்டுக்குள் துள்ளிக் குதித்தன!

நாம் முதலில் செய்ய வேண்டியவற்றை முன்னரே செய்திருப்பின் இந்தப் பேரழிவு இடம்பெற்றிருக்க வாய்ப்பு இருந்திருக்காது

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அறுபத்தைந்தாவது மாநாட்டில் (குருநாகலில்) உரை நிகழ்த்திய வேளையில் மேற்கண்ட கருத்துக்களை (நேற்று முன்தினம்) ஜனாதிபதி அள்ளி வீசியிருந்தார்.

அதனை வேறு ஒரு வகையில் சொல்வதானால், கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் என்ற பழமொழியையே சுட்டிக் காட்டலாம்.

அதாவது, கடந்த காலங்களில், தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகளை தட்டிப் பறித்த, தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் போக்குக் குறித்துக் கழிவிரக்கம் கொண்டு, கருத்து வெளியிட்டுள்ளார் இன்றைய ஜனாதிபதி.

நாட்டின் தென்னிலங்கைத் தலைவர்கள் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப அரசியல் கழிவிரக்கம் கொள்வதும், நேர் எதிரான போக்கைக் கடைப்பிடிப்பதும் காலம் காலமாக இங்கு ஒப்பேற்றப்படுகின்றன.

உலகளாவிய மட்டத்தில் காணாமற் போகச் செய்யப்பட்டோர் தரப்படுத்தலில் இலங்கை இரண்டாம் இடம் பெற்றிருப்பதையும் --

விசாரணை எதுவுமற்ற தடுப்பு முறைகளும் தமிழ் மக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதும்--

பயங்கரவாதச் சட்டத்தின் கீழ், தமிழர்கள் விசாரணை இன்றியே தடுத்து வைக்கப்படுவதும்-- நல்லாட்சி அரசிலும் தொடர்கின்றன.

அவற்றை நீக்கிவிடுவதாக அரச தரப்புக்களால் வாய் மூல தகவல்கள் குவிகின்றனவே அன்றி--

வெறும் கழிவிரக்கமும், கவலை தெரிவித்தலுமே ஊசாடுகின்றன. ஆக்கபூர்வமாக எதுவும் மேலெழுப்பப்பட வில்லை!

இந்த நிலைக்கு நல்லிணக்க அரசுதானும் முற்றுப்புள்ளி வைக்குமா என்பது மிகப் பெரிய வினாவாக எழுந்து நிற்கிறது...!



மைத்திரிபாலவுக்கும், கோத்தபாயவுக்கும் இடையில் சந்திப் பொன்று நிகழ்ந்திருந்த சம்பவத்துக்கு சில நாள்களுக்குப் பின்னர் மேலும் ஒரு ஆச்சரியம் நிகழ்ந்தது. இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக் குழு (CIABOC) கோதாபாய ராஜபக்ச மற்றும் இவர்கள் எண்மர் மீது குற்ற வழக்கு ஒன்றை பதிவு செய்தது.

**சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து ரெங்கன்**

கடந்த ஞாயிற்றுக் கிழமை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாடு குருநாகல் நகரில் கோலகலமாக நடைபெறவிருந்தவேளையில் அதற்கு முன்பதாக கட்சியின் பல்வேறு தரப்பினர்களிடமிருந்து வந்த கருத்துக்களுக்கு கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மிகக் கவனமாக செவிமடுத்து வந்துள்ளார். அப்படியான நிகழ்வுகள் சில அண்மையில் நிகழ்ந்திருந்தமை அதற்குமுன் எப்போதும் நடந்திராத நினைத்துப்பார்க்க முடியாதவையாக இருந்துள்ளன.

அவ்வாறான ஒன்றுதான் முன்னாள் பாதுகாப்பு செயலரும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்சவுடன் இடம்பெற்றுள்ள சந்திப்பு. ஒருசமயம் ஐ.தே.க. அமைச்சராக இருந்தவரும் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மேயர் பதவிக்கான வேட்பாளராக நின்றவருமான மிலிந்த மொரகொட இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தமை தெரியவந்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது விரிவான பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறானால் ராஜபக்ச குடும்பத்திலிருந்து ஒருவர் அல்லது பலர் அதன் அரவணைப்பில் இருக்க வேண்டும் என்ற வகையில் கோத்தபாய ராஜபக்ச கருத்து தெரிவித்ததாகத் தெரிகிறது. தாமோ அல்லது முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்சவோ அவ்வாறு இணைந்து கொள்வது வசதியாக இருக்கும் அந்நிலையில், இப்போது முன்னெடுக்கப்பட்டுவரும் புலன் விசாரணைகளினால் குடும்பத்திலுள்ள ஏனைய உறுப்பினர்கள் இடையூறுகளுக்குள்ளாக்கப்படலாகாது என்ற வகையில் கோத்தபாய ராஜபக்ச யோசனை வழங்கியதாகவும் தெரிகின்றது. இவை அனைத்தையும் மைத்திரிபால சிறிசேன தம்தரப்பில் கருத்து எதனையும் வெளியிடாமல் கேட்டுக் கொண்டிருந்ததாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்குமானால் சிறிசேனவின் அதிகாரங்களையும், அந்தஸ்த்தையும் மேலும் பலப்படுத்துவதாக மட்டுமல்ல, அவசியமானால் நாடாளுமன்றத்திலும்கூட அவரது பலம் அதிகரிப்பதாக இருந்திருக்கும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள். ஆனால், அப்படியான நகர்வானது சிறிசேன ஏற்கனவே எடுத்துள்ள உறுதிப்பாட்டுக்கு முரணாக அமைவதாய் இருக்கும். சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஐ.தே.க. கட்சியும் இரண்டு ஆண்டுகாலம் இணைந்து செயற்படுவதான முடிவை நாடாளுமன்றத்தில் ஐந்து ஆண்டுகால முடிவு வரை தொடர்வதற்கு அவர் உறுதி கொண்டுள்ளார் இரண்டுவாரங்களுக்கு முன்னர்தான் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஓராண்டுகால ஆட்சியின் வருடாந்த விழா மாத்தறையில் இடம்பெற்றபோது, அங்கே உரைநிகழ்த்திய ஜனாதிபதி சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தாம் தொடர்ந்து இணைந்து செயற்படவிருப் பதற்கான உறுதிமொழிகளை மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார்கள். இது இவ்வாறு இருக்கும் நிலையில், கட்சியைப்பலப்படுத்தும் விடயத்தில் தாம் ஈவுசோவுடன் இருக்கவில்லை என்று எவரும் பிற்காலத்தில் குற்றஞ் சாட்டலாகாது என்ற நிலைப்பாட்டை சிறிசேன மேற்கொள்வதைஎவரும்குறைகூறமுடியாது.

மைத்திரிபாலவுக்கும், கோத்தபாயவுக்கும் இடையில் சந்திப்பொன்று நிகழ்ந்திருந்த சம்பவத்துக்கு சில நாள்களுக்குப் பின்னர், மேலும் ஒரு ஆச்சரியம் நிகழ்ந்தது. இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக் குழு (CIABOC) கோதாபாய ராஜபக்ச மற்றும் இவர்கள் எண்மர் மீது குற்ற வழக்கு ஒன்றை பதிவு செய்தது. இவர்கள் மீது அவன்ட்கார்ட் மெரி ரைம் சேர்விசஸ் தனியார் நிறுவனம் மிதக்கும் இராணுவத்தளபாட நிலையம் ஒன்றை நடத்துவதற்கு அனுமதித்ததின் மூலம் அரசுக்கு ரூபா 11.4 பில்லியன் நட்டம் ஏற்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவர்களுடன் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளவர்களில் முன்னாள் கடற்படைத் தளபதிகள் மூவரும் அடங்குவர். சோமதிலக்கதிசாநாயக்க, ஜணாகெகொலம்பகே மற்றும் ஜயந்த பெரேரா ஆகியவர்கள். அரசமைப்பின் 19ஆம் திருத்தத்தின் பிரகாரம் இந்த ஆணைக்குழுவானது ஒரு தன்னாட்சி நிறுவனமாகும். குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஏனையவர்கள் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ, பாதுகாப்பு அமைச்சில் ஒரு சமயம் இராணுவத் தொடர்பு அதிகாரியாகவும் இருந்தவர். பாதுகாப்பு அமைச்சின் ஒருசமயம் மேலதிக செயலாளராக இருந்துள்ள சுஜாத்தா தமயந்தி, முன்னாள் இராணுவ விசேட படை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாயவின் கடைசிநேர முயற்சி தோல்விகண்டது சிறிசேன ஏற்கனவே எடுத்த முடிவில் மாற்றம் இல்லை

அதிகாரி மேஜர் நிஸாங்க சேனாதிபதி, அவன்ட்கார்ட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் கருணாரத்ன பண்டா அதிகாரி ஆகியோர். கொழும்பு பிரதம நீதிவான் முன் இவர்கள் அனைவரும் செப்ரெம்பர் 30ஆம் திகதி முன்னிலையாகும்படி பணிக்கப்பட்டுள்ளனர். குற்றவியல் புலனாய்வுப் பிரிவினராலும் அவனட்கார்ட் நிறுவனம் பிரிதொரு விசாரணைக் குட்படுத்தப்பட்டு வருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாக இருந்து வரும் கோத்தபாய விசுவாசிகள் சிலர் சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் சமரசம் செய்து கொள்வதில் ஆர்வமாய் இருக்கிறார் கள் என்பது இரகசியமன்று. ஆனால், மகிந்தவும் பசில் ராஜபக்சவும் அரசின் ஐ.தே.க. பிரிவினரையே விரும்புகிறார்கள். முன்பு வெளிப்படுத்தப்பட்டமை போலவே பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க மகிந்த ராஜபக்சவுடன் தனிப்பட்ட நட்புறவொன்றைப் பேணிவருகின்றார். இதைப்பற்றி விளக்கமளித்துள்ள விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி ஒருவர் என்ற முறையில் அவரது அழைப்புக்களுக்கு தாம் மதிப்பளித்து வருவதாகக் கூறியிருக்கிறார். அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமரிடம் இதுபற்றி கண்ணியமான முறையில் பிரஸ்தாபித்தபோது ராஜபக்சவினால் ஜனாதிபதியிடம் கேட்க வேண்டிய கேள்விகளை பிரதமரிடம் ஏன் கேட்கிறார்கள் என்றவாறு கேள்வி எழுப்பியிருந்தார். இது ராஜபக்ச வெளிநாடு செல்லும்போதான பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அவரது அதிகாரபூர்வ வாகனத் துக்கு நான்கு சக்கரங்கள் தேவை ஆகியன தொடர்பானதாகும்.

### போட்டி மாநாடு நடத்த ஏற்பாடு

குருநாகளில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியினர் கொண்டாடியுள்ள கட்சியின் மாநாட்டுக்குப் போட்டியாக மகிந்த ராஜபக்சவினரும் பெரும் எடுப்பில் மாநாடு ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

இதன் முக்கிய நோக்கம் உள்ளூராட்சித் தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும் என்ற அழுத்தம் கொடுப்பதாக இருக்கும். அதேசமயம் புதிய கட்சியொன்றை நிறுவும் முயற்சி களிலும் பசில் ராஜபக்ச மும்முரமாக இறங்கியிருக்கிறார். இந்த விடயம் மிக இரகசியமாகப் பேணப்பட்டுவருகின்றது. கட்சியின் நிர்வாக செயலாளராக செயற்படுவதற்கு சட்ட வல்லுநர் ஒருவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார். கட்சியின் பெயர் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஒன்றாக இருக்கும் என்று எதிர்பார்க் கப்படுகின்றது.

அரசுக்கு எதிரான எல்லா எதிர்த் தரப்பினரையும் உள்ளடக்கியதாகப் புதிய கட்சி ஒரு கூட்டமைப்பாக செயற்படும். சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாட்டையடுத்து அந்தக்கட்சியின் வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்று பிறக்கவிருப்பதாகக் கருதப்படுகிறது. கட்சி பலமாக விளங்கப் போகின்றதா என்பது ஒரு புறமிருக்க பிளவுபடும் தரப்புக்களில் எந்தத் தரப்பு திக பலம் வாய்ந்ததாய் வெளிப்படும் என்பது இனிமேல்தான் தெரியவரும். எந்தப்பிரிவு வெற்றிபெற்றாலும் ஐ.தே. கட்சியே அதன் பலாபயன்களை அனுபவிக்கப் போகிறது என்பதே வெளிப்படை.



## காலதாமதமின்றிய புனரமைப்பு பணிகளை வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர் மேற்கொள்ள வேண்டும்...!

போக்குவரத்து என்பது இன்றியமையாதது. இயந்திரமயமான வாழ்வின் ஓட்டத்தில் மிகப் பிரதான பங்கினை நேரத்தின் இயக்கத்தோடு சரிநிகர் செய் பவை போக்குவரத்தின் உறுதுணையாக விளங்கும் வீதிகளே. இலக்கினை விரைவுற சென்றடைதல்,நேர முகாமைத்துவத்தின் கட்டமைவு,மக்களின் அன்றாட இயங்குநிலை என பல செயல்நிலைகளுக்கு வேகம் தருப்வை. பெரு வீதிகள் அவற்றோடு இணைகின்ற சிறு வீதிகள், ஊர்களிடையேயான போக்குவரத்தின் பிரதான வீதிகள் செம்மைப்படுத்தப்பட்டவையாகவும், சீரானவையாகவும் இருத்தல் வேண்டும்.

அந்தவகையிலே அளவெட்டிக் கிராமம், வலிகாமம் பிரதேச செயலர் பிரிவினுள்ளே வருகின்ற மிகப் பரந்த பிரதேசம். அந்தக் கிராமத்தை போக்குவரத்தின் வழி இணைத்திருகின்ற வீதிகள் நீண்டு செல்கின்றன. அவையே அங்கிருந்தான ஏனைய பிரதேசங்களுக்கான பிரதான பயண வழித்தடமாக இருந்து வருகின்றன. அதிகளவான விவசாயிகள், கால்நடை வளர்ப்பாளர்கள் வாழ்ந்து வருகின்ற அவ் ஊரின் விளைச்சல்கள் சந்தை நோக்கிச் செல்வதற்கும் வலிகாமத்தின் மிகப்பிரபல பாடசாலைகளை அடைய வேண்டிய மார்க்கமாகவும் இந்த வீதிகள் அமைந்துள்ளன. அன்றாடம் அதிகளாவன ஊரவர்கள் தங்களது கடமைகளை நிறைவேற்ற இந்த வீதிகளூடாக தமது பிரயாணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக அளவெட்டிக் கிராமத்தின் பிரதான 768 இலக்க வாகனப் போக்குவரத்து வழித்தடமான அலுக்கைச்சந்திக்கும் அம்பனைச் சந்திக்கும் இடைப்பட்ட கிட்டத்தட்ட 3 கிலோ மீற்றர் நீளமான வீதி முற்றாக சேதமடைந்துள்ளது. போக்குவரத்துக்கு உரிய வகையில் அல்லாது பெரிய குழிகளைக் கொண்டமைந்துள்ளது. வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான பராமரிப்பில் உள்ள மேற்படி வீதி 2003 ஆம் ஆண்டுகளின் பிற்பாடு தார்க் கலவை இடப்பட்டு சீர் செய்யப்படவில்லை. அவ்வப்போது வீதி வழி அமைந்துள்ள குழிகளை தேடிப் பிடித்து உடனடித் தன்மையான செயற்பாடுகள் சீரற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டன. தற்போது அதன் தொடர்புறுதல்கள் கடந்த ஆண்டில் பெய்த கடும் மழை,வெள்ளம் என்பவற்றால் வீதிகளில் இடைவிலகல்களை ஏற்படுத்தியிருக்கிறது. போக்குவரத்துக்கு உகந்த தல்லாத வீதி அமைப்பைப் பெற்றிருக்கின்றது.

நீண்டகாலமாக கவனிப்பாரற்று இருந்த இந்த வீதியின் புனரமைப்பு பணிகள் ஊர் மக்களின் ஒருமித்த குரலின்வழி சம்பந்தப்பட்ட திணைக்களத்தினரால் உற்று நோக்கப்பட்டுள்ள போதும் சரியான முறையிலே திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதாக தெரியவில்லை..! புனரமைப்புக்கான முன்னாயத்த நடவடிக்கைகள் மந்தகதியில் இடம்பெற்றுவருவதுடன் சேதமடைந்த வீதியின் ஓரமாக கொட்டப்படுகின்ற கற்கள் சரியான முறையில் ஒழுங்குபடுத்தி வைக்கப்படவில்லை. வீதிவழி எங்கும் சிதறுண்டு கிடக்கின்றன. போக்குவரத்துக்கு இன்னமும் இடைஞ்சல்களை தந்துகொண்டிருக்கிறது. மழை காலம் ஆரம்பிப்பதற்கான கால எல்லைகள் அண்மிக்கின்ற தருணத்தில் வீதியை சீர் செய்யும் பணிகளை விரைவுறச் செய்யாது காலதாமதமாக்குதல் என்பது ஏற்புடையதல்ல..! இவைதவிர வடக்கின் வீதி அபிவிருத்திக்கென அதிகளவான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்டுகின்ற சந்தர்ப்பத்திலே, மேற்படி வீதி புனரமைப்பு என்ன அடிப்படைகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது என்பது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். குறிப்பாக காப்பெற் வீதியா...? அல்லது சாதாரண கல்லடுக்கின் மீதான தார்க் கலவையிடலா...? எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, புனரமைக்கப்படும் வீதியின் அதி உச்ச பயனுறுதிக்காலம் என்பன தொடர்பில் ஓர் மக்கள் அறிவுறுத்தல் காட்சிப்படுத்தலை அவ்விடத்தில் செய்ய வேண்டும்...!

காலதாமதமின்றி புனரமைப்பு பணிகளை வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர் மேற்கொள்ள வேண்டும். கிராம மக்களின் எதிர்பார்ப்பு அதுவே.

அளவையூரான்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விபரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 50 மில்லியன் டொலர் நட்டஈடு தரவேண்டும்

## ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்திடம் கோருகின்றது இஸ்ரேல்



வோஷிங்டன், செப்.6

ஸ்பேஸ் எக்ஸ் ரொக்கட் ஏவுதலின்போது, ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் செயற்கைக் கோள் எரிந்து சாம்பலானது. இவற்றுக்கு நட்டஈடாக 50 மில்லியன் அமெரிக்க டொலர் தரவேண்டும் அல்லது இலவசமாக மீண்டும் ரொக்கட்டை ஏவவேண்டும் என இஸ்ரேல் விண்வெளி தொடர்பாடல் நிலையம் கோரியுள்ளது.

புளோரிடாவில் இடம்பெற்ற வெடிப்பில், 205 மில்லியன் டொலர் பெறுமதியான செயற்கைக் கோள் சாம்பலானது. இந்த விபத்தினால், 30 மில்லியன் டொலர் தொடக்கம் 123 மில்லியன் டொலர் வரை இழப்பு ஏற்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது.

விபத்து தொடர்பில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தெரிவிக்கையில், இஸ்ரேலுடனான ஒப்பந்தத்தைத் தாம் முடிக்கவில்லை-என்று கூறியது.

அத்துடன் காப்புறுதித் தொகை தெடர்பாக எந்தக் கருத்தும் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் 70க்கும் அதிகமான ரொக்கட் ஏவுதல் தொழிற்பாட்டைக் கொண்டுள்ளது. அவற்றின் தொழிற்பாட்டுக்கான சராசரிப் பெறுமானம் 10 பில்லியன் டொலர்களாகும். இவ்வாறான செயற்கைக் கோள் ஏவல்களில், நாடுகள், நிறுவனங்கள், வர்த்தக தனியார்களின் முதலீடுகள் இடம்பெறுவது வழமை ஆகும்.

குறித்த செயற்கைக் கோள் ஏவல் வெற்றி அடைந்தால், ஏவப்பட்ட தொழில்நுட்பத்தை 285 மில்லியன் டொலருக்குக் கொள்வனவு செய்ய சிங்வி என்ற நிறுவனம் தயாராக இருந்தது. தற்போது இடம்பெற்ற விபத்து அனைத்து முதலீட்டாளர்களையும் கவலையடையச் செய்தது. அத்துடன் சிங்வி நிறுவனம் தற்போது கொள்வனவு முயற்சியில் இருந்து பின்வாங்கியுள்ளது. செயற்கைக்கோள் மீண்டும் ஏவப்படவுள்ள நிலையில், புதிய கொள்வனவு நிறுவனத்தை எதிர்நோக்கி இருப்பதாகவும் இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்தனர். (த-ரி4)



பிரெஞ்சு சுங்க அலுவலர்களால் மிகப்பெரும் போதைப் பொருள் கடத்தல் கண்டுபிடிக்கப்பட்டது. 3 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்டுகள் பெறுமதியான போதைப் பொருள்களைப் பொலிசார் கைப்பற்றினர். பிரெஞ்சு நிலப் பரப்பில் கைப்பற்றப்பட்ட மிகப் பெரிய போதைப் பொருள் இது என அதிகாரிகள் தெரிவித்தனர். போதைப்பொருள் மிகவும் பாதுகாப்பான அலுமினியத் தாளினால் சுற்றப்பட்டுப் பைகளில் பொதி செய்யப்பட்டிருந்தது. (த-ரி4)



# வட...
# நேற்று...
# ஏவுகனை...

## ஜி-20 மாநாடு ந...

பியொங்யாங், செப்.6

வடகொரியா கிழக்குக் கடற்பரப்பில் நேற்று 3 ஏ... சோதனைகள் நடைபெற்றதாகத் தென்கொரியா தெ... சீனாவில் ஜி-20 மாநாடு நடைபெற்று வரு... இதற்காக முக்கியமான நாடுகளின் தலைவர்கள்... தந்திருக்கும்வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்... தலைநகர் பியொங்யாங் கரையோரப் ப... குவாங்ஜுவில் இருந்து இவை ஏவப்பட்டதாக... தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐ.நா. தீர்மான...



# இஸ்லாமிய த...

## பங்களாதேஷில் நேற்று சாவுத் த...

பாகிஸ்தானுக்கு எதிராகப் போராடிய பங்களாதேஷைச் சேர்ந்த இஸ்லாமியப் போராளிக் குழுத் தலைவருக்கு போர்க் குற்றங்களுக்காக விதிக்கப்பட்ட சாவுத் தண்டனை நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது. 1971ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக இடம்பெற்ற சுதந்திரப் போரின்போது இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்காகக் குறித்த தண்டனை வழங்கப்பட்டது. குவாசிம் அலி என்ற 63 வயதானவர். இஸ்லாமியக் கட்சியின் தலைவர், கடந்த 2010 ஆம் ஆண்டு கைது செய்யப் பட்டு, 2014 ஆம் ஆண்டு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்ட இடத்துக்கு அருகில் பொலிஸ் பாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொரியா
# று அதிரடி
# ணைச் சோதனை

## டு நடைபெறும் வேளையில்

நேற்று 3 ஏவுகணைச்
கொரியா தெரிவித்தது.
பெற்று வருகின்றது.
தலைவர்கள் வருகை
ம் இடம்பெற்றுள்ளது.
யோரப் பகுதியான
வப்பட்டதாக மேலதிக
ா. தீர்மானத்தின் படி

ஏவுகணைச் சோதனைகள் தடை செய்யப்பட்டுள்ளன.
இந்த நிலையில், தென் கொரிய அதிகாரிகள், மற்றும் சீன அதிகாரிகள் ஜி-20 மாநாட்டில் கலந்து கொண்டதை அடுத்து, சில மணிநேரங்களின் பின்னர் இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளது.
முன்னதாக சீன, தென் கொரிய அதிபர்கள் வட கொரியாவின் ஏவுகணைச் சோதனை முயற்சியால், அப்பகுதியின் சமாதானம் குலையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவித்தனர். (த-ரி4)



# பண்டா நீக்கம்

## அதிக ஆபத்துள்ள இனங்களில் இருந்து

பீஜிங், செப்.6
இராட்சத பண்டாக் கரடிகள் அதிக ஆபத்தான பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன எனப் பன்னாட்டு உயிர் பல்வகைமை அமைப்பு அதிகாரபூர்வமாக அறிவித்தது.
சீனாவின் கடின முயற்சியால் இந்த மாற்றம் சாத்தியமானது. ஆனாலும், கொரில்லாக் குரங்குகள் அதிக ஆபத்தான பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன என்னும் தகவலும் வெளியிடப்பட்டுள்ளது. சீனாவில் ஆயிரத்து 864 வளர்ந்த பண்டாக்கள் உள்ளன. சீனர்களின் நேசத்தை வென்ற பண்டாக்கள், அதிக பராமரிப்புக்கு உள்ளாகியுள்ளன. உலகளவில் 2 ஆயிரத்து 60 வளர்ந்த பண்டாக்கள் இருப்பதாகவும், குட்டிகளின் எண்ணிக்கை கணக்கிடப்படவில்லை எனவும் பன்னாட்டு அமைப்பு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.
இதற்கிடையே, உலகளவில் உள்ள கொரில்லாக்களில் 5 ஆயிரம் கொரில்லாக்கள் வேட்டையாடப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது. கடந்த 2 தசாப்த காலத்தில் 70 வீத கொரில்லாக்கள் அழிவடைந்துள்ளன. (த-ரி4)




## 350 ஆண்டுகளுக்கு முன் நடந்த

# தீ விபத்தை நினைவு கூரும் பிரமாண்ட நிகழ்வு லண்டனில்

லண்டன், செப்.6
லண்டனில் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற தீ விபத்தை நினைவுபடுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.
350 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தீ விபத்தில் லண்டன் நகர் முற்றாகச் சேதமடைந்ததை நினைவு படுத்தும் வகையில் கலைக் கல்லூரி மாணவர்களால் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.
தேம்ஸ் நதிக் கரையில், 120 மீற்றர் நீளமான மாதிரிகள் செய்யப்பட்டு எரியூட்டப்பட்டன. 1666 ஆம் ஆண்டு 4 தினங்கள் நகரில் தீ விபத்து ஏற்பட்டு நகரத்தின் அதிகமான பகுதிகள் சேதமடைந்தன. 13 ஆயிரம் வீடுகள், வர்த்தகக் கட்டங்கள், ஆலயம் என்பன இந்த விபத்தில் நாசமாகின.
இந்தத் தீயிடல் நிகழ்வு ஓகஸ்ட் 30 ஆம் திகதியில் இருந்து, நேற்று முன்தினம் வரை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலைஞர்களின் கைவினைகள் வெளிக் கொணரப்பட்டன.
நூற்றாண்டு அழிவை மீண்டும் நினைவுபடுத்தியமை மகிழ்ச்சியை ஏற்படுத்தியது என மாணவர்களும், பேராசிரியர்களும் தெரிவித்தனர். இந்த நிகழ்வைப் பார்வையிட நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டதுடன், பாதுகாப்பு, முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# வாகன நிழலுக்கும் குற்றப் பணம்



மொஸ்கோ, செப்.6
ரஷ்யாவில் வீதி விதிமுறைகளுக்கு முரணான விதத்தில் வாகனத்தின் நிழல் பதிந்தமைக்காகக் குற்றப் பணம் அறவிடப்பட்டமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
மொஸ்கோ நகரின் பிரதான சாலையில், பயணித்த வாகனச் சாரதி சாலையில் வரையப்பட்ட கோட்டுக்கு அப்பால் பயணிக்காதபோதும், வாகனத்தின் நிழல் கோட்டின் மறுபுறம் இருந்ததால், கண்காணிப்புக் கமராவில் குற்றமாகப் பதியப்பட்டுக் குற்றப் பணம் அறவிடப்பட்டது. இந்தச் சம்பவத்தை வாகனச் சாரதி தனது சமூக வலைத் தளத்தில் பதிவேற்றியதுடன், கண்காணிப்புக் கமராவின் தவறுக்கு எதிராகப் பொலிசில் முறைப்பாடு அளித்தார். இதனை அடுத்துப் பொலிஸார் அவரது முறைப்பாட்டைக் கருத்தில் எடுத்து விசா ரணை நடத்துகின்றனர். (த-ரி4)

## பேஸ்புக் படத்தால் சிக்கினான் திருடன்

வோஷிங்டன், செப்.6
வித்தியாசமான பேஸ்புக் அட்டைப் படத்தால் பொலிஸாரிடம் திருடன் மாட்டிக் கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் பொலிஸ் நிலையத்தில், தேடப்படும் குற்றவாளிகள் என்ற பட்டியலில் குறித்த நபர் ஒருவரின் பெயர், புகைப்படம் விவரங்கள் பதியப்பட்டு அறிவித்தல் பல கையில் தொங்கவிடப்பட்டி ருந்தது.
குறித்த அறிவித்தல் பலகையைப் புகைப்படமெடுத்த திருடன், அதனைத் தனது பேஸ்புக்கில் பதிவேற்றினார். அதனுடன் தனது இதர விவரங்களையும் பதிவேற்றியிருந்தார். பல குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட அந்த நபர் இறுதியில் பொலிசாரால் இலகுவாகக் கைது செய்யப்பட்டார்.
பேஸ்புக் சிறப்பான தொடர்பாடல் சாதனம். ஆனால் குற்றவாளிகளைக் கைது செய்யவும் உதவும் என நாம் எதிர்பார்க்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (த-ரி4)

# ப தலைவர் போர்க்குற்றவாளி

## வுத் தண்டனைத் தீர்ப்பு

த இஸ்லா
ாக விதிக்
ப்பட்டது.
சுதந்திரப்
க் குறித்த
தானவர்.
ாடு கைது
கப்பட்டது.
லிஸ் பாது

காப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. காரணம் அவரது ஆதரவாளர்கள் அங்கு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். சாவைத் தழுவிய அலியின் உடல் அவரது சொந்தக் கிராமமான மனிக்கான்ஜில் அடக்கத்துக்காகக் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது உடல் டாக்காவில் புதைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் அரசு அதற்கு மறுப்புத் தெரிவித்ததாக அலியின் மனைவி கூறினார். சிட்டங்கொங் நகரில் தீவிரவாதத்தை ஊக்குவித்தமை உட்பட 14 விதமான குற்றச் செயல்கள் அவர் மீது பதிவு செய்யப்பட்டன. அவற்றில் 8 நிரூபிக்கப்பட்டது. அவர் ஜனாதிபதியிடம் அவர் பொது மன்னிப்புக் கோரிய போதும் அது வழங்கப்படவில்லை. 2010 ஆம் ஆண்டில் போர்க்குற்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 6 பேருக்குச் சாவுத் தண்டனை வழங்கப்பட்டது. 9 மாதங்கள் இடம்பெற்ற இந்த சுதந்திரப் போரில் 3 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டனர். இதனால் அரசு மன்னிப்பு வழங்க மறுத்துவிட்டது என ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
இதற்கிடையே, அலிக்கு வழங்கிய சாவுத் தண் டனைக்குப் பாகிஸ்தான் கவலை தெரிவித்தது. நீதிப்பொறி றையினூடான, அலியின் சாவு எமக்கு அதிக கவலையைத் தருகிறது என பாகிஸ்தான் அயலுறவு அமைச்சு தெரிவித்தது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாதபலன்

**செப்ரெம்பர் 1 முதல்31 வரை**

## மிதுனம்

நிதானம் மற்றும் உலக அனுபவ அறிவை வெற்றுப் மிதுன ராசியினரே! நீங்கள் அடுத்தவரின் தராதரம் அறிந்து உதவிகள் செய்யக்கூடியவர். இந்தக் காலகட்டத்தில் ராசிநாதன் புதன் அருமையான இடத்தில் அமர்ந்து மிக அதிகமான பலன்களை அள்ளித்தரப் போகிறார். எதிலும் சற்று அதிக முயற்சி கொடுத்தால் எதிர்பார்த்த வெற்றி சேரும். நீங்கள் முடிக்க வேண்டும் என நினைத்த காரியம் கணகச்சிதமாக முடியும். ராசியாதிபதி புதன் மனதில் இருந்த கவலையைப் போக்கி நிம்மதி தருவார். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கலாம். ராசியை செவ்வாய் பார்ப்பதால் வெளியூர் பயணம் அதன் மூலம் அலைச்சல் உண்டாகலாம். தொழில் ஸ்தானாதிபதி குரு தனது ஸ்தானத்தை தானே பார்க்க, ராசிநாதன் புதனும் சேர்ந்து பார்க்கிறார். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். அரசு மூலமாக கிடைக்க வேண்டிய உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேல் அதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். அவர்களை அனுசரித்துச் செல்வது நன்மையைத்தரும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். செவ்வாய் குடும்ப ஸ்தானத்தை அஷ்டம பார்வையாக பார்க்கிறார். கணவன், மனைவிக்கிடையே அனுசரித்துச் செல்வதன் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம். தீ, ஆயுதங்களை கையாளும்போது கவனம் தேவை. உதவிகள் செய்யும்போது ஆலோசித்து செய்வது நல்லது. வாக்குக் கொடுப்பதற்கு முன் கவனம் தேவை. பெண்களுக்கு எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. எளிதில் முடிய வேண்டிய காரியம் கூட தாமதமாகலாம். கலைத்துறையினருக்கு விடாமுயற்சியுடன் காரியங்களைச் செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். பணவரத்து திருப்தி தரும். இதுவரை இருந்த தடைகள் நீங்கும். எதிலும் முழு முயற்சியுடன் ஈடுபடுவீர்கள். எல்லாவற்றிலும் சாதகமான பலன் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக நடக்கும். அரசியல் துறையினருக்குப் புத்தித் தெளிவு ஏற்படும். மனதில் தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். மனக்குழப்பம் நீங்கும். ராசிநாதன் சூரியன் சஞ்சாரம் பணவரத்தை அதிகப்படுத்தும். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினை தீரும். அரசு மூலம் நடக்க வேண்டிய பணிகளில் இருந்த தொய்வு நீங்கும். மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் கவனம் தேவை. ஒரு முறைக்கு இருமுறை பாடங்களைப் படிப்பது நல்லது.

**பரிகாரம்:** ஸ்ரீ ஆஞ்சநேயரை வியாழக்கிழமைகளில் வெண்ணெய் சாத்தி வணங்க மனதில் தைரியம் உண்டாகும். எதையும் எதிர்கொள்ளும் துணிச்சல் ஏற்படும்.




# மாரியில் ஏற்படும் மரக்கறி விலைஏற்றத்துக்கு ஆடியில் வீட்டுத் தோட்டம் போடுவோம்

ப.அருந்தவம்

“உணவே மருந்து” என வாழ்ந்த சமூகம் நாம். இயற்கையாய் விளைந்த காய்கறிகளையும் உண்டு வாழ்ந்த நம் முன்னோர்களுக்கு இருந்த ஆரோக்கியம் இன்று நமக்கு இல்லை. பூச்சி கொல்லிகளும், செயற்கை இரசாயனங்களும் சேர்ந்த மரக்கறிகளை உண்ட எமது உடல் நோய்களுக்கு புகலிடமாகிப் போனது. இதன் விளைவாக இன்று எம்மவர் மத்தியில் “இரசாயனம் பயன்படுத்திய காய்கறிகளைத் தவிர்க்க வேண்டும். இயற்கையாக விளைந்த காய்கறிகளைஉண்ணவேண்டும்”என்றநிலைஏற்பட்டுள்ளது. இன்று பலர் மத்தியில் வீட்டுத் தோட்டம் செய்ய வேண்டுமென்ற மனம் இருந்தாலும், போதிய இடம் இல்லை என்ற எண்ணமும், சரியான விவசாயத் தொழிநுட்ப அறிவு இன்மையும் பலரையும் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுத்தி விடமுடியாத நிலையை ஏற்படுத்திவிடுகிறது.

**சிறிய இடம்போதுமானது**

சரியான திட்டமிடலுடன் 35 தொடக்கம் 40 சாடிகளில் மரக்கறிச் செடிகளைப் பயிர் செய்தால் 5 பேர் கொண்ட குடும்பத்துக்கு வேண்டிய மரக்கறிகளைப் பெற்றுவிடலாம். இதற்கு 100 சதுர அடி நிலம் போதுமானது. அதாவது இரு படுக்கை அறை அளவு நிலத்திலேயே சாதாரண தேவையான மரக்கறிகளைப் பெற்று விடலாம் குடும்பத்துக்கு-

**காய்கறிகளைப் பயரிடுவோம்**

காய்கறிச் செடிகள் பயிரிட்டு 45 இலிருந்து 50 நாள்களில் முதலாவது அறுவடையைச் செய்யலாம். 35 தொடக்கம் 40 சாடிகளில் மரக்கறியைப் பயிரிட்டு, முறையாகப் பராமரித்து வந்தால் வாரத்துக்கு மூன்று கிலோ கிராம் வரை காய்கறிகளைப் பெறலாம். 3 சாடிகளில் நடப்பட்ட கீரைகள் என்றால் வாரத்துக்கு இரண்டு நாள்கள் சமைப்பதற்கு வேண்டிய கீரையையும் பெற்றுக்கொள்ளலாம். சாடிகளின் எண்ணிக்கை அதிகரித்த விளைவையும் கூடப் பெற முடியு மல்லவா!



**சரியான காலம் இது**

“ஆடிப்பட்டம் தேடி விதை” என்பது பழமொழியாகும். ஆடியிலே மரக்கறி விதைத்தால் மாரிகாலத்தில் ஏற்படும் மரக்கறி விலையேற்றம் பற்றி நாம் கவலை கொள்ளத் தேவையில்லை.

நாம் 40 சாடிகளில் மரக்கறிப் பயிர்கள் செய்ய எண்ணியிருந்தாலும் முதலில் 20 சாடிகளில் கூட்டெரு, மேல்மண் கலந்து இதில் இரண்டு சாடிகளில் வெண்டி, இரண்டு சாடிகளில் கத்தரி, இரண்டு சாடிகளில் அவரை, இரண்டு சாடிகளில் தக்காளி என விருப்பமான மரக்கறிகள் பத்தைப் பயிரிட்டுக் கொள்ளலாம்.

ஒரு மாதம் கழித்து மீதமுள்ள 20 சாடிகளிலும் ஊடகத்தை நிரப்பி விதை / நாற்றுகள் நட்டுக் கொள்ளலாம்.

இரண்டாவது தடவை பயிரிடுவதற்கு முன்னரே கீரை அறுவடை செய்து விடலாம். இதேவேளை- முதலில் நடப்பட்டமரக்கறிப் பயிர்களும் பூக்க ஆரம்பித்துவிடும். இன்னம் இரண்டு வாரத்தில் இருந்து தாராளமாக விளைவு அறுவடை செய்யக் கூடிய நிலையும் ஏற்படும்.

இரண்டாவது தடவை நடப்பட்ட செடிகள் காய்க்க ஆரம்பிக்கும் போது முதலில் நடப்பட்ட செடிகள் காய்த்து ஓய்வு நிலைக்கு வந்திருக்கும். இவ்வாறான செயற்பாட்டால் தொடர்ந்து காய்கறி கிடைப்பதை உறுதிப் படுத்திக் கொள்ளலாம்.

பயிர்கள் நட்ட 3 தொடக்கம் 4 மாதம் வரைதான் அதன் ஆயுள் நீடிக்கும். அதன்பின் அந்தச் செடிகளை அகற்றிவிட்டு சாடியிலுள்ள ஊடகத்தையும் கீழே கொட்டிவிட்டு மீண்டும் மேல் மண் கூட்டெரு கலவை சேர்த்து ஊடகம் தயாரித்து சாடிகளை நிரப்புதல் வேண்டும். இதன் போது முதலில் பயிரிட்ட பயிர்களை அதே சாடியில் நடாமல் வேறுபயிர்களைக் குறித்த சாடிகளில் நடல் வேண்டும்.

**விவசாயக் கவனிப்புகள்**

அதிகம் நீர் ஊற்றினால் அதிகம் விளைவைப் பெறலாம் என்ற எண்ணம் தவறானது. சாடியின்மேல் மண் காய்கின்ற நிலை அவதானித்தால் நீர்ப்பாசனம் செய்யலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.வி.வெங்கடேஸ்வரன்

# கண்டுபிடிக்கப்பட்டன நுண்ணிய உயிரிகள்



'பிச்சை எடுத்ததாம் பெருமாளு, அதைப் பிடுங்கித் தின்றதாம் அனுமாரு' என்ற சொல்லடையைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதைப்போல, மனித உடலில் வாழும் நுண்ணுயிரியான பக்ரீரியா நம்மை அண்டிப் பிழைக்க, அந்த பக்ரீரியா மீதே ஒட்டுண்ணியாக வாழும், அதைவிட மிக நுண்ணிய உயிரிகளைச் சமீபத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

வாஷிங்டன் பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவத் துறையைச் சார்ந்த ஜெஃப் மக்லீன் (Jeff McLean) என்பவர், மனித உமிழ்நீரில் உள்ள டி.என்.ஏ எனப்படும் கரு அமில மூலக்கூறுகளை ஆராய்ந்து வருபவர். இவர் அந்த மூலக்கூறுகளை உமிழ்நீரிலிருந்து பிரித்தெடுத்து, அவற்றைச் சோதனைக்கூடத்தில் நுட்பமாக ஆராய்ந்தார். அப்போது எல்லா விதமான டி.என்.ஏ. கூறுகளும், உமிழ்நீரில் வாழ்ந்த ஏதாவது ஓர் அறிமுகமான பக்ரீரியாவின் பகுதியாக இருந்தது. ஆனால், ஒரே ஒரு டி.என்.ஏ கூறு மட்டும் எதனோடும் பொருந்தாமல் தனித்துக் கிடந்தது. நம் வீட்டை ஒருவர் ஆராய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். தம்பியின் பாடசாலைப் புத்தகப்பை, நம்முடைய சட்டை, அப்பாவின் மடிக்கணினி, அம்மாவின் நகைப்பெட்டியைத் தவிர, எவருக்கும் சொந்தமில்லாத ஒரு மர்மப்பெட்டி கிடந்தால் எப்படியிருக்கும்? அதுபோல தனித்துக் கிடந்த அந்த டி.என்.ஏ அவரது ஆர்வத்தைத் தூண்டியது.

இது எவர் விட்டுச்சென்ற பொருளாக இருக்கும் என்று ஆராய்வதைப் போல, அவர் மனித உமிழ்நீரில் வாழும் அனைத்து வகை பக்ரீரியாக்களையும் நுட்பமாக ஆராய ஆரம்பித்தார். கடைசியில், பொருளுக்குரியவன் அகப்பட்டுக்கொண்டான். அதாவது, உமிழ்நீர் பக்ரீரியாவான ஆக்டினோமைசெஸ் ஓடொன்டுலிடிகஸ் (Actinomyces odontolyticus) ஐ நுண்ணோக்கியில் ஆராய்ந்தபோது, அதன் முதுகில் இன்னும் நுணுக்கமான நுண்ணுயிரி சவாரி செய்வது தெரியவந்தது. மர்மமாகக் கிடந்த டி.என்.ஏ. கூறானது, அந்தப் புதிய நுண்ணுயிரி என்பதைக் கண்டுபிடித்தார். இந்த ஒட்டுண்ணியின் ஒட்டுண்ணியான நுண் பக்ரீரியாவுக்கு பிடல்லோவிப்ரையோ (Bdellovibrio) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

ஓடொன்டுலிடிகஸ் பக்ரீரியாவில் சுமார் 2,200 மரபணுக்கள் இருக்க, அதன் முதுகில் தொற்றிக்கொண்டு வாழ்க்கையை ஓட்டும் பிடல்லோவிப்ரையோ நுண்ணுயிரியில் வெறும் 700 மரபணுக்களே உள்ளன. எனவே, தனக்கு வேண்டிய அனைத்து அமினோ அமிலங்களையும் தனக்குத்தானே தயாரித்துக் கொள்ளமுடியாது. (அது தெரிஞ்சா ஏன், உன் முதுகுல தொத்திக்கிட்டுத் திரியுறேன்?) தலைமுடி இல்லாமல் பேன் இருக்க முடியாது என்பதுபோல, ஓடொன்டுலிடிகஸ் இல்லாமல் இந்த பிடல்லோவிப்ரையோ தனித்து வாழவே முடியாது.


இன்னொரு விடயத்தையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது எல்லோருடைய உமிழ்நீரிலும் அதிகமாக இருப்பதில்லை. ஈறு தொல்லை உள்ளவர்கள், சிஸ்டிக் ஃபைப்ரோஸிஸ் எனும் கொடிய நோய் உள்ளவர்களின் எச்சிலில்தான் கூடுதலாகக் காணப்படுகிறது. சுருக்கமாகச் சொன்னால், நாற்றம்பிடித்த வாய்தான் இதற்குப் பிடிக்கும்போல.

அதெல்லாம் இருக்கட்டும் - இந்த நுண்ணுயிரியைக் கண்டுபிடித்ததால் நமக்கு என்ன பிரயோசனம் என்று கேட்கிறீர்களா?

மாட்டின் முதுகில் உட்கார்ந்திருக்கிற காகம் அதன் உடலில் உள்ள உண்ணிகளைத் தின்று, அதற்கு உதவுவதைப்போல, இந்த நுண்ணுயிரி பக்ரீரியாவானது, ஆக்டினோமைசெஸ் பக்ரீரியாவுக்குச் சில நன்மைகளைச் செய்கிறது. உதாரணமாக, ஆக்டினோமைசெஸ் பக்ரீரியா பல் ஈறு வீக்க நோயை ஏற்படுத்தக்கூடியது என்பதால், அதனை நம் குருதியில் உள்ள மேக்ரோபேஜ் செல்கள் அழித்துவிடுகின்றன. அதே நேரத்தில், இந்த ஒட்டுண்ணியுடன் இருந்தால், அந்த ஆக்டினோமைசெஸ் பக்ரீரியாவானது தப்பிவிடுகிறது என்று ஆய்வுகள் கூறுகின்றன. அதுமட்டுமல்ல, ஒட்டுண்ணியுடன் இருக்கும் இந்தப் பக்ரீரியாவை, ஸ்ட்ரெப்ட்டோமைசின் எனும் நுண்ணுயிர்க் கொல்லியால்கூட அழிக்க முடிவதில்லை என்பதையும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

எனவே, இந்த நுண்ணுயிர்கள் கண்டுபிடிப்பானது ஆய்வு உலகின் புதிய கதவைத்திறந்துவைத்துள்ளது. முள்ளை முள்ளால் எடுப்பதுபோல இதுபோன்ற நுணுக்க நுண்ணுயிரிகளைக் கொண்டே நுண்ணுயிரிகளால் ஏற்படும் நோய்களுக்கு மருந்து தயாரிக்க முடியுமா என்று விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.

" எல்லாவிதமான டி.என்.ஏ. கூறுகளும், உமிழ் நீரில் வாழ்ந்த ஏதாவது ஓர் அறிமுகமான பக்ரீரியாவின் பகுதியாக இருந்தது. ஆனால், ஒரே ஒரு டி.என்.ஏ. கூறு மட்டும் எதனோடும் பொருந்தாமல் தனித்துக் கிடந்தது. நம் வீட்டை ஒருவர் ஆராய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். தம்பியின் பாடசாலைப் புத்தகப்பை, நம்முடைய சட்டை, அப்பாவின் மடிக் கணினி, அம்மாவின் நகைப் பெட்டியைத் தவிர, எவருக்கும் சொந்த மில்லாத ஒரு மர்மப் பெட்டி கிடந்தால் எப்படியிருக்கும்? அதுபோல தனித்துக் கிடந்த அந்த டி.என்.ஏ அவரது ஆர்வத்தைத் தூண்டியது. "




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் காப்பான் தோழன்

அதுவொரு வயல் வெளி ஓரம், நீல வான் பரப்பின் குடை நிழலில் உயர்ந்த தென்னை மரம் ஒன்றில் அழகிய பொந்து அமைத்து ஒரு கிளி வாழ்ந்து வந்தது. அந்த மரத்தில் ஒரு காகம் அடிக்கடி இளைப்பாற வருகை தருவது வழமை. இதனால் இருவரும் அடிக்கடி சந்தித்துப் பேசுவதால் நண்பர்களாயின.

இருந்தும் பல பறவைகளுடன் கூடி உலவு கையில், கிளி தானே பேரழகி எனப் புகழ்ந்து கொள்ளும். காகத்தை ஏளனமாகப் பார்த்து "நீ கறுப்பி" எனக் கிண்டல் செய்யும். ஏனைய பறவைகள் முன்னிலையில் தன்னைக் கேலி செய்வதைக் காகம் ஒருபோதும் அவமானமாக நினைப்பதில்லை. "இறைவன் எம் இனத்தைக் கறுப்பாகப் படைத்து விட்டார். நான் என்ன செய்ய முடியும்?" என தன்னிலை உணர்ந்து காரணம் சொல்லும். காகத்துக்கு மனதில் சின்னதாகச் சலனம் இருந்தாலும் வெளியே காட்டிக் கொள்வதில்லை. மற்றப் பறவைகளுடன் நட்பாகப் பேசிப் பழகும். இவ்வாறே கிளியுடனான நட்பும் தொடர்ந்தது.

ஒருநாள் கிளி கொவ்வை மரத்தை நாடிச் சென்றது. அதில் கனிந்திருந்த கொவ்வைப் பழங்களை உண்டு மகிழ்ந்து கொண்டிருந்தது. அவ்வேளை அந்த வழியால் வருகை தந்த வழிப்போக்கனிடம் வசமாக மாட்டிக் கொண்டது. கிளி அவனிடம் இருந்து தப்பிக்க முயற்சி செய்து போராடியது. முடியவில்லை. "என்னைக் காப்பாற்று" எனக் கத்தியது. அவ்வழியே வந்த காகம் கிளியாரின் பரிதாபநிலை கண்டு மிகுந்த கவலை அடைந்தது. வழிப்போக்கன் பின்னாலேயே சென்றது. என்ன கொடுமை! அவன் கிளியைக் கூட்டில் அடைத்து விட்டான். கூட்டின் அருகால் சென்ற காகம் ஆறுதல் வார்த்தைகள் கூறியதுடன் "உன்னை நான் காப்பாற்றுகிறேன்" எனக் கூறியது. கிளியோ "எப்படி உன்னால் முடியும்?" என மனச் சஞ்சலத்துடன் கேட்டது.

"ம்ம்! பொறுத்திரு...!" எனக் கூறி நிலமைகளை அவதானித்தது. கிளியைக் கூட்டில் அடைத்தவன் பழம் பறிப்பதற்குத் தோட்டத்துக்குச் சென்று விட்டான். அவனது தாயார் அடுப்படியில் சமைத்துக் கொண்டிருந்தாள். காகம் தனது சமயோசித புத்தியைப் பயன்படுத்தி கிளியைக் காப்பாற்ற முயற்சி செய்தது. கூட்டை தனது வாயால் திறக்க முயற்சி செய்து ஒருவாறு கூட்டைத் திறந்து கிளியை "வெளியே வா" என அழைத்தது. கிளி தப்பினேன் பிழைத்தேன் என வெளியே பறந்து சென்றது.



விடுதலை பெற்ற உணர்வோடு தன் நண்பர்களிடம் நடந்தவற்றைக் கூறிய படியிருந்தது கிளி. நட்புறவோடு மீண்டும் அவ்விடம் வந்த காகத்தைக் கண்டவுடன் விம்மி விம்மி அழுதது. காகமும் பரிதாபமாக "இனியும் ஏன் அழுகிறாய்" என்றது. "நான் அழகின் வடிவம், அதைக்கண்டு எல்லோரும் ஆசைப்படுகின்றனர் என்ற மன உணர்வில் உன்னைக் காயப்படுத்தி விட்டேன் . மன்னித்துக் கொள்" எனப் பதிலுரைத்தது. "சீச்சீ. நான் அதைப் பெரிதாக எடுக்கவில்லை. இறைவன் படைப்பில் எல்லாமே அழகு தான்" எனக் கூறியது. "நீ அழகு என்பதால் தான் உன்னைப் பிடித்தார்கள். ஆனால், என்னை ஒவ்வொரு நாளும் அழைத்துச் சோறு போடுகிறார்கள்" என்று தன்னடக்கத்துடன் கூறியது. காகம் அதனைக் கேட்ட ஏனைய பறவைகளும் உண்மைதான். காகத்துக்கு அப்படி ஒரு சிறப்பு உள்ளது எனக் கூறின. தன்னிலை உணர்ந்த கிளி வெட்கத்தில் தலை குனிந்தது.

பறவைகள் அனைத்தும் ஒற்றுமையோடும், நட்புறவோடும் வாழத் தீர்மானித்தன. காகமும் அதற்கிணங்கிய படி கிளிக்கு ஆறுதலும், மனத் தைரியமும் வழங்கி அன்பு பாராட்டியது.

'உயிர் காப்பான் தோழன்' என்ற முதுமொழிக்கு அமைய கிளியும், காகமும் இணை பிரியா நண்பர்களாயின.

எஸ்.நிலானி

# வரலாற்றில் இன்றைய தினம்

1642 - பியூறிற்றன் தலைமையில் ஆங்கில நாடாளுமன்றம், அரங்குகளில் இடம்பெற்ற அனைத்து நாடகங்களையும் நிறுத்தி வைக்கும் கட்டளையைப் பிறப்பித்தது.

1803 - வெவ்வேறு மூலகங்களுக்கு தனித்தனியா குறியீடுகளை பிரிட்டிஷ் விஞ்ஞானி ஜோன் டோல்ற்றனால் பயன்படுத்தப்படுவது ஆரம்பிக்கப்பட்டது.

1870 - லூயிசா ஆன் ஸ்வைன் அமெரிக்காவில் 1807 ஆம் ஆண்டுக்குப் பின் சட்டபூர்வமாக வாக்களித்த முதற் பெண்மணியானார்.

1930 - ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்ஜென்ரீனா ஜனாதிபதி, ஹிப்போலிற்றா றிகோயன் இராணுவப் புரட்சி மூலம் அகற்றப்பட்டார்.

1939 - தென் ஆபிரிக்கா, நாஸி ஜேர்மனி மீது போர்ப் பிரகடனம் செய்தது.

1940 - றோமானிய அரசர் இரண்டாம் கரோல் பதவியிறக்கப்பட்டு அவரது மகன் மைக்கல் அரசரானார்.

1943 - இலத்தீன் அமெரிக்காவின் முன்னணி தனியார் பல்கலைக்கழக மான மொன்ரெறி தொழில்நுட்ப நிறுவனம் மெக்ஸிக்கோ மொன்ரெறியில் தொடங்கப்பட்டது.

1944 - எஸ்தோனியா டார்டூ நகர் சோவியத் படைகளால் கைப்பற்றப்பட்டது.

1946 - போருக்குப் பின்னரான ஜேர்மனியில், பொருளாதாரச் சீர்திருத்த கொள்கை பின்பற்றப்படும் என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் எப். பைர்ண்ஸ் அறிவித்தார்.

1948 - யூலியானா, நெதர்லாந்தின் அரசியானார்.

1952 - இங்கிலாந்து ஹம்ஸயரில் விமானக் கண்காட்சியின்போது, மாதிரி விமானெமான்று விபத்துக்குள்ளாகியதில், 29 பார்வையாளர்களும், விமானத்திலிருந்த இரண்டு பேரும் சாவு.

1955 - இஸ்தான்புலில் கிரேக்கர் யூதர் மற்றும் அமெரிக்க சிறுபான்மையினர் மீது அரசு சார்பாகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்செயலில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

1963 - சர்வதேச தொழிற்றுறை சொத்து கற்கை நிறுவனம் தொடங்கப்பட்டது.

2002 - அரசமைப்பு 19 ஆவது திருத்த விவகாரம் ஜனாதிபதி பிரதமர் இடையிலான சமரச முயற்சி அவுட். தனி வழிபோக இருவரும் முடிவு.

2003 - சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி இடையில் கூட்டணி அமைக்கும் முயற்சி தோல்வி. இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தால் சிக்கல்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளார்ந்த உணர்வுடன் செயற்படுவோம்

அன்னை திரேசாவுக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டமை, உலகையே திரும்பிப் பார்க்க வைத்த ஒரு விடயமாகும். பலரும் அவரது சேவையை வியந்து பேசிக்கொண்டிருக்கும் வேளை அவரது வாழ்க்கையைச் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியமானதே. அவர் சேவையை ஆரம்பித்தபோது, அவர் எதிர் கொண்ட சவால்களும், அவமானங்களும் அதிகம். வெளிநாட்டில் பிறந்த பெண்ணுக்கு இந்தியாவில் என்ன வேலை? என ஊடகங்கள் கேள்வி எழுப்பின. ஆனால் தளராத மனம் கொண்டவராய்த் தொடர்ந்து தனது பணியை மேற்கொண்டார். ஒரு வகையில் அது ஒரு போர். செய்யும் செயலுக்குத் தகுந்த அங்கீகாரம் கிடைக்காத போது, விடாமுயற்சியாகச் செயற்படுவது ஒருவகைப் போராகும். தனது முயற்சியில் இருந்து அவர் சற்றும் மனம் தளரவில்லை. ஒரு பெண்ணாக அவர் தனித்துப் போராடினார். அவரது படங்களில் அனேகமானவை வயோதிப வயதில் எடுக்கப்பட்டவை ஆகும். தனது பதின்ம வயதில் இருந்தே சேவையில் இறங்கினார். ஆனால் முதுமையில் தான் அங்கீகாரம் கிடைத்தது. ஏழ்மை தொடர்பான கவலையும், அக்கறையும் அவர் மனதில் இருந்தது. ஆனால் தேவைகளைச் சந்திக்கக் கூடிய அளவு வசதி, வருமானம் அவரிடம் இருக்கவில்லை. இதனால் அவர் பொது மக்களை நாடினார். ஆரம்பத்தில் அதிகமாக அவமானப்படுத்தப்பட்டார்.

ஆனால், அவர் தனது முயற்சியில் இருந்து பின்வாங்கவில்லை. தற்போது சேவை நிறுவனங்களின் நிலை என்ன? ஒரு சில வருடங்களில், விளம்பரங்களும், ஆதரவாளர்களும், சேவை நிறுவன உரிமையாளர்களுக்கு ஓசியில் ஏசி வாகனங்களும் வழங்கப்படுகின்றன. இவை அனைத்தையும் சேவை செய்கிறோம் எனும் தலைப்பில் தான் அனுபவிக்கின்றனர். தொடர்பாடல் வளர்ச்சியும் தற்போதைய போலிச் சேவைகளுக்கு ஒரு காரணம். உண்மையான சேவைகளுக்கு விமர்சனங்களும், வதந்திகளும் அதிகம். பணக்காரரால் நடத்தப்படும் தொண்டு நிறுவன்த்திற்கு மக்கள் கொடுக்கும் ஆதரவு, ஒரு சாதாரண நபர் நடத்தும் நிறுவனங்களுக்குக் கிடைப்பதில்லை. காரணம் பணம் வசூலிக்க முயல்கிறார் என்னும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாகும். எல்லோரும் கெட்டவர்களாக இல்லை, அதே போன்று எல்லோரும் நல்லவர்களும் அல்லர் என்பதைப் பகுத்தறியும் திறன் மக்களிடம் இருக்கவேண்டும். தற்காலத்தில் பணமுடையவர் மட்டுமே தனது பணத்தைப் பயன்படுத்திச் சேவை செய்யலாம் எனும் நிலை தோன்றியுள்ளது. இதனால் சிறந்த உணர்வு கொண்டவள மில்லாதவர்களின் உணர்வுகள் சிதைக்கப்படுகின்றன.




ஆனால் சேவை நிறுவனங்களில் தொழிலாளராக இணைவதன் மூலம் தொண்டு உணர்வுகளை நிறைவேற்றி வருகின்றனர். பலர் தம்மைச் சிறந்த நபர் எனக் காட்டுவதற்காகவும் அவ்வாறான சேவை விடயங்களில் ஈடுபட்டு வருகின்றனர். சுயவிளம்பரமும், தமது வங்கிக் கணக்கை உயர்த்துவதுமே இவர்களது உன்னத நோக்கங்களாக உள்ளன.

இந்த இருசாராரையும் இனம் கண்டு செயற்படுவது எமது கடமையாகும். பொதுவாக உழைத்து உண்ண நினைப்பவர்களுக்கான சந்தர்ப்பங்களை வழங்குவதே சிறந்த உதவும் மனப்பான்மை ஆகும். அன்று அன்னையின் மனதில் இருந்த அதே பாரம் இன்று எமக்கிடையில் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. மனித உணர்வுகளை உணர முற்படுவோம். விளம்பரத்துக்காக உதவி செய்யாமல் உள்ளார்ந்த உணர்வுடன் செயற்படுவோம்.



# பெண்மையைக் கொன்று போடாதீர்கள்

உடுவிலூர் கலா

தாய்மை அழகானது. உயிர்த் துடிப்பானது. தாய்மைக்கு ஒரு போதும் கருவறை சுமக்கும் மகவை யாரும் தாரை வார்த்துக் கொடுப்பதில்லை. ஆனால் தற்சமயம் அதிர்ச்சி தரும் திடுக்கிடும் சம்பவங்களாக சில அருவருப்பான சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. சில பெண்கள் தாய்மையை சமுதாய வாய்களுக்கு விற்கிறார்கள். தம் கருவறையில் பத்துமாதங்கள் சுமந்த குழந்தையை கழுத்தை நெரித்துக் கொலை செய்கிறார்கள். வீதிகளில் வீசி எறிகிறார்கள். பிறந்து சில வாரங்களான குழந்தையொன்று வடலியடைப்பில் வீதியில் வீசப்பட்டுள்ளது. இந்தக் குழந்தையை வீசிய பெண் பெட்டியொன்றில் குழந்தையை வைத்து இன்னொரு வீட்டின் முன்பாகச் சைக்கிளில் சென்று வீசிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டாள். அதிகாலை 4.30 மணிக்கு தன் வயிறு சுமந்த குழந்தையைக் கொண்டு சென்று வீசி விடுவது நியாயமா?

புரியவில்லை. பெற்ற குழந்தையை வளர்க்க மனோபலம் இல்லாதவள் எதற்காகத் தாய்மை அடைந் தாள்? பத்துமாதம் சுமந்த பிள்ளைக்குத் தனது பால் கொடுக்காவிட்டாலும் ஏதோ பால் கொடுத்திருப்பாள் தானே. குழந்தையின் முகத்தைப் பார்த்தபின் எப்படி வீச மனம் வந்தது? குழந்தையை வீசிய செய்தியானது எங்கள் கருவறையையே நடுங்க வைக்கிறது. குழந்தைக்கு தண்டனை கொடுக்குமுன் தப்புச் செய்யாமலே இருந்திருக்க வேண்டும்.

தப்பான நடத்தையால் சட்ட விரோதக் கருவுறல் பெற்று வீதியில் வீசியெறிதல்தான் பெண்மையின் சிறப்பா? நல்லவேளை கழுத்தை நெரித்துக் கொலை செய்யவில்லை. பிரசவ வலி சும்மாவா? வலியுணராமலா பெற்றாள்? பெற்ற பிள்ளையை வீசியெறியலாமா? குழந்தைப்பாக்கியம் இன்றி எத்தனையோ பெண்கள் கண்ணீரோடு வாழ்கிறார்கள்? இப்படியான பெண்களுக்குக் காரணமின்றிக் கருவறையை கடவுள் படைத்து விட்டான். கருவறையும் மார்பகங்களும் மரத்து விட்ட பெண்களை உருவாக்கும் இந்த சமுதாயம் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறது? பதறிப்பதறி பத்து மாதமும் சுமந்து வாழ்ந்து பெற்று வீசியெறிந்து சாதனை படைப்பதில் பெண்மை வாழ்கிறதா?

பெண்களே தப்புச் செய்யாதீர்கள் எச்சரிக்கையாயிருங்கள். பெற்ற குழந்தையைக் கொலை செய்வதோ வீசி எறிவதோ பெண்மைக்கு இழுக்கு. ஆண்களை விட்டு விலகி வாழுங்கள். எவனோ ஒருவன் செய்த துரோகத்துக்காகப் பெற்ற குழந்தையை வீறி எறிவது கொடுமையல்லவா? எப்படி நிம்மதியாக வாழ முடியும்? ஒவ்வொரு பெண்ணும் செய்கிற செயல்களால் ஒட்டுமொத்தப் பெண்களும் அவமானப்பட்டு நிற்பதா? காதலிலோ தப்பான தொடர்புகளிலோ உடலைப் பரிமாறிக்கொள்ளத் துணியாதீர்கள். பாலியலுக்கு முன்னுரிமை கொடுத்து வாழ்ந்து பெண்மையை அசிங் கப்படுத்தாதீர்கள்.

குழந்தையை வீசி எறிந்த இந்தச் சம்பவம் இணையம், பத்திரிகை என வெளிவந்து உலக நாடுகளே பார்க்கின்றன. ஆண்களின் பின்திரிந்து ஆபாசத்துக்குத் துணை போகும் பெண்களே திருந்துங்கள். அதீத துணிச்சல் கொண்ட பெண்களாக துர்நடத்தையில் உங்களை அர்ப்பணித்து பெண்ணினத்தையே அசிங்கப்படுத்தி கேவலப் படுத்துகிறீர்கள். சட்டம் இப்படியான பெண்களைத் தேடிக்கண்டுபிடித்து தக்க தண்டனை வழங்கவேண்டும்.

எப்படிப் பெண்விடுதலை வரும்? ஆண்களுக்கும் ஆபாசத்துக்கும் துணைபோகும் பெண் கள் உள்ளவரை பெண்கள் சுதந்திரமாக வாழவே முடியாது. தவறு செய்த ஆணைக் காப்பாற்ற, சமுதாயத்தில் உத்தமி எனத் தன்னை அடையாளப்படுத்தத்தான் பெற்ற குழந்தையைத் தெருவில் வீசி எறிபவள் பெண்ணா? ஆண்கள் செய்யும் தவறுக்கு அழுகிறோம். நீதி கேட்கிறோம். பெண்கள் செய் கிற அசிங்கமான வேலைகளுக்கு யாரிடம் நீதி கேட்பது? பெண்ணினத்தைக் கொன்று போடும் பெண்களே நீங்கள் பெண்களா? ஏன் பெண்ணினத்தைக் களங்கப்படுத்துகிறீர்கள்? எப்படி மனதைக் கல்லாக்கி இப்படியொரு செயலைச் செய்கிறீர்கள்? காறியுமிழ்கின்ற வாழ்க்கை வாழ்ந்து சமுதாயத்தின் குற்றவாளிகளாக வாழ்வதுதான் உங்கள் விருப்பமா? பெண்ணினத்தின் எதிரிகளே! துரோகிகளே! அழிந்தொழிந்து போய் விடுங்கள். பெண்ணாக வாழவே தகுதியற்றவர்கள் நீங்கள். இனியாவது பெண்மையைக் கொச்சைப்படுத்தாது நிம்மதியாக வாழ விடுங்கள். பெண்ணின் பெருமையை தெருவிலே வீசியெறிவதை உணர்கிறீர்களா? பெண்மையும் தாய்மையும் தெருவில் நின்று கண்ணீர்வடிக்க ஊடகங்கள் உரத்துப் பேசுகின்றன. உணர்வாயா பெண்ணே?

> எவனோ ஒருவன் செய்த துரோகத்துக்காகப் பெற்ற குழந்தையை வீசி எறிவது கொடுமையல்லவா? எப்படி நிம்மதியாக வாழ முடியும்? எவரோ ஒரு பெண் செய்கிற அருவருப்பான செயல்களால் ஒட்டு மொத்தப் பெண்களும் அவமானப்பட்டு நிற்பதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்:** குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், தடைகள் குறுக்கிடலாம். இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் இனிய அணுகு முறையால் ஓரளவு சலுகை பெறுவர்.

**இடபம்:** முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாக்கவும். பெண்களுக்கு, வீட்டுச் செலவில் சிக்கனம் தேவை. தாய்வழி உறவினரால் நன்மை உண்டு.

**மிதுனம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். தொழில், வியாபாரத்தில், வியத்தகு வளர்ச்சி ஏற்படும். வருமானம் உயரும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம்:** பெற்றோரின் சொல்லுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். புதிய முயற்சியால், தாமதமாகப் பணி நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். பெண்கள், புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு.

**சிங்கம்:** சோம்பல் எண்ணம் உருவாகலாம். பணியை நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில், மிதமான பணவரவு கிடைக்கும். உடல் நலத்திற்கு மருத்துவச் சிகிச்சை தேவைப்படும்.





**கன்னி:** மனதில் குழப்பம் ஏற்பட்டு மறையும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். தாய்வழி உறவினரிடம் கேட்ட உதவி வந்து சேரும்.

**துலாம்:** அக்கம் பக்கத்தினரின் அன்பைப் பெறுவீர்கள். எதிர்கால வாழ்வில் புதிய நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், தாராள பணவரவு கிடைக்கும். குடும்பத்தில், ஒற்றுமையும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.



**விருச்சிகம்:** உறவினர் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். இலாபம் மிதமாக இருக்கும். உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**தனுசு:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில் வளர்ச்சிபெற, முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடந்தேறும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மகரம்:** சொந்தப் பணியில் மட்டும் அக்கறை கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறை சரி செய்வீர்கள். சராசரி பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கும்பம்:** மனதில் புத்துணர்வு ஏற்படும். குடும்ப உறுப்பினர் ஆதரவாக நடந்து கொள்வர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வெகு நாள் காணாமல் தேடிய பொருள் கிடைக்கும். இயன்ற அளவில், நண்பருக்கு உதவுவீர்கள்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை நிறைந்திருக்கும். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெற, அதிக அளவில் பணிபுரிவீர்கள். வருமானம் உயரும். இயன்ற அளவில் தான, தர்மம் செய்வீர்கள்.

# விஜய் நடிக்கும் 60-ஆவது படம் "பைரவா"




'தெறி' படத்தைத் தொடர்ந்து, நடிகர் விஜய் நடித்துவரும் புதிய படத்துக்கு "பைரவா" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது அவரது 60-ஆவது படமாகும்.

கடந்த 3 மாதங்களுக்கு மேலாகப் படப்பிடிப்புகள் நடந்தும், படத்துக்குப் பெயர் சூட்டப்படாமல் இருந்து வந்தது. எம்.ஜி.ஆர். நடித்து வெளிவந்த 'எங்கள் வீட்டுப் பிள்ளை' என்ற படத்தின் தலைப்பே இந்தப் படத்துக்கும் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. இதுதொடர்பாக விளம்பரங்களும் சமூக வலைத்தளங்களில் வெளிவந்தன. இந்த நிலையில், அந்தப் பெயரை பயன்படுத்தவில்லை என விஜயா புரொடக்ஷன் தரப்பில் கூறப்பட்டது. இந்தப் படத்தின் முதல்பார்வை போஸ்டர்கள் ஞாயிற்றுக்கிழமை வெளியாகியுள்ளன. இதில், "பைரவா" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. படப்பிடிப்புகள் 50 சதவீதம் நிறைவு பெற்றுள்ள நிலையில், பொங்கல் பண்டிகைக்கு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.










# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 3 | 7 | | | | |
| 8 | | | | | | 6 | | |
| | | 9 | 1 | | | | 3 | |
| | 4 | | | 6 | | | | |
| | | 6 | | 5 | | | | |
| | | | 9 | 1 | | 3 | | 6 |
| | | | 7 | 9 | | 2 | 8 | 5 |
| | | | 5 | | | | 6 | |
| | | 5 | 6 | | 1 | 4 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



மெதுவா நடக்கனும்...
அதிர்ந்து ஓடக்கூடாது...
நேரத்துக்குச் சாப்பிடனும்...
அதிகமாப் பாரம் தூக்கக் கூடாது...
எச்சரிக்கையா இருக்கணும்...
ஏனெண்டா, இது ஒன்பதாவது மாசம். அதுதான்...
ஹப்பி செப்ரெம்பர்...

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 2 | 1 | 7 | 6 | 4 | 9 | 8 |
| 9 | 4 | 7 | 3 | 8 | 5 | 6 | 1 | 2 |
| 1 | 8 | 6 | 2 | 4 | 9 | 7 | 3 | 5 |
| 7 | 2 | 5 | 8 | 6 | 3 | 9 | 4 | 1 |
| 3 | 1 | 9 | 7 | 2 | 4 | 5 | 8 | 6 |
| 8 | 6 | 4 | 9 | 5 | 1 | 2 | 7 | 3 |
| 6 | 5 | 3 | 4 | 9 | 8 | 1 | 2 | 7 |
| 2 | 9 | 1 | 5 | 3 | 7 | 8 | 6 | 4 |
| 4 | 7 | 8 | 6 | 1 | 2 | 3 | 5 | 9 |






எழுத்தாளன் @itzAza
எந்த உறவு, உங்கள் தவறை எந்தவித விளக்கங்களும் இன்றி மன்னிக்கிறதோ, அதுவே நமக்கான உண்மையான உறவு...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொழும்பு | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 800 | 600 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 800 | 800 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | 600 | – |
| சுறா | 500 | 650 | 500 | 800 | 700 | 700 | – |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 400 | 400 | 450 |
| விளை | 650 | 500 | 300 | 600 | 600 | 400 | 500 |
| முரல் | 300 | 500 | 300 | 500 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 450 | – | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 400 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 300 | – | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | 200 | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | 300 | 170 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 300 | – | 300 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | – | – |

## இது புதுசு



பெண்களுக்கான நெற் பிளவுஸ்கள் அறிமுகமாகியுள்ளன. முழுமையாக நெற்றில் உருவாக்கப்பட்ட இவை,உள்துணியுடன்வடிவமைக்கப்பட்டுள்ளது. இவை ஆயிரத்து 800 ரூபா முதல் விற்பனை செய்யப்படுகின்றன.

# அன்னாசிப் பழ கேக்

### தேவையான பொருள்கள்

பழுத்த அன்னாசி - 1
கோதுமை மா --200 கிராம்
வெண்ணெய் - 150 கிராம்
முட்டை - 4
சீனி -150 கிராம்
(பொடித்துக் கொள்ளவும்)
செரி - 6
பேக்கிங் பவுடர் - 1/2 தேக்கரண்டி
அன்னாசி எசன்ஸ் - சில துளி
மஞ்சள் கலர் - 2 சிட்டிகை
வெல்லச்சர்க்கரை - 4 தேக்கரண்டி



### செய்முறை

அன்னாசியை தோல் சீவி வில்லைகளாக போட்டுக் கொள்ளவும். வெண்ணெயையும் சர்க்கரையையும் நன்றாகக் குழைத்துக் கொள்ளவும். முட்டைகளை நன்றாக அடிக்கவும். அடித்த முட்டையைச் சிறிது சிறிதாக சீனிக் கலவையில் ஊற்றித் தொடர்ந்து அடித்துக் கொண்டே இருக்கவேண்டும். அத்துடன் எசன்ஸ். கலர் சேர்க்கவும். பேக்கிங்பவுடர்.மைதாமாவு இரண்டையும் கலந்து சீனிக் கலவையில் சேர்க்கவும். 10 அங்குல கேக் தட்டில் 20 கிராம் வெண்ணெயை சமமாகத் தடவிக் கொள்ளவும். வெல்லச் சர்க்கரையை மேலாக சமமாகத் தூவி விடவும். அன்னாசி வில்லைகளை கேக் தட்டில் அழகாக வைக்கவும். நடுவில் செரி பழங்களை பாதியாக வெட்டி வைக்கவும். அன்னாசி வில்லைகள் மீது கலவையை மெதுவாக போடவும். வில்லைகளை நகராமல் இருக்குமாறு செய்யவேண்டும். 375 டிகிரி சூட்டில் 40 நிமிடம் வரை ஓவன் அடுப்பில் வைத்து பேக் செய்யவும். கேக் ஆறிய பிறகு ஒரு தட்டில் கவனமாக திருப்பவும். தட்டில் கீழே உள்ள அன்னாசி பழம். செரி கேக்கின் மேல் அலங்காரம் செய்தது போல் அழகாக இருக்கும். வெல்ல சர்க்கரை சூட்டில் கரைந்து அன்னாசி பழ வில்லைகளின் மேல் ஒரு பளபளப்பைக் கொடுக்கும். அன்னாசிப் பழ கேக் தயார்.

## நாளை

ஆவணி-22
புதன்கிழமை
-07.09.2016
திதி:ஷஷ்டி பி.இ.12.09
நட்சத்திரம்: விசாகம்
பி.இ.12.46
ராகுகாலம்:
12.04-01.34 வரை
சுபநேரம்:
04.34-06.04 வரை
ஷஷ்டி விரதம்

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொழும்பு | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 60 | 80 | 40 | 30 | 30 | 20 |
| கத்தரி | 40 | 60 | 80 | 60 | 40 | 40 | 90 | 40 |
| கரட் | 80 | 120 | 120 | 120 | 100 | 120 | 110 | 100 |
| மரவள்ளி | 80 | 90 | 100 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 80 | 50 | 160 | 120 | 60 | 100 | 100 | 60 |
| பாகல் | 100 | 80 | 200 | 120 | 100 | 120 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | 160 | 160 | 80 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 90 | 90 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 80 | 80 | 70 | 100 | 90 | 60 |
| பூசணி | 50 | 35 | 50 | 50 | 30 | 40 | 70 | 40 |
| தக்காளி | 40 | 60 | 40 | 60 | 40 | 50 | 120 | 40 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 120 | 100 | 60 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 15 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 35 | 30 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 90 | 80 | 120 | 80 | 300 | 200 | 140 |
| புடோல் | 40 | 35 | 50 | 60 | 60 | 40 | 70 | 40 |
| கோவா | 100 | 100 | 120 | 120 | 100 | 120 | 90 | 80 |
| வெண்டி | 40 | 60 | 120 | 60 | 40 | 60 | 70 | 20 |
| போஞ்சி | 120 | 140 | 200 | 180 | 160 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 | 120 | 100 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 30–35 | 30 | 30 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 200 | 140 | 240 | 220 | 200 | 120 | 150 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 160 | 100 | 200 | 200 | 100 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 120 | 60 | 80 | 40 | 80 | 50 |

# வீட்டுத் தூய்மையில் சில விடயங்கள்

மேக்அப் போடும் பெண்கள் தங்கள் அழகியலுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை பயன்படுத்தும் மேக்அப் பிரஷ்களுக்கு கொடுப்பதில்லை. அவைகளை முறையாக பராமரிக்காவிட்டால் சருமம் பாதிப்படையும். அழுக்குகள், எண்ணெய் பசை, கிருமிகள் மீண்டும் உங்கள் சருமத்தையே சென்றடையும். அது உடல் ஆரோக்கியப் பிரச்சினையாக உருவெடுக்கும். அதைத் தவிர்க்க மேக்அப் பிரஷ்களை அடிக்கடி சுத்தப்படுத்திவர வேண்டும். வெதுவெதுப்பான நீரைக் கொண்டு சுத்தம் செய்வது பயனுள்ளதாக அமையும்.

சமையலறையில் அழுக்குகள் அதிகம் சேரும் இடம் பாத்திரம் கழுவும் தொட்டியாகத்தான் இருக்கும். பாத்திரங்கள் கழுவும்போது அதனைத் தண்ணீரைக் கொண்டு அடிக்கடி சுத்தப்படுத்தி வந்தாலும் ஒருவித துர்நாற்றம் வீசக்கூடும். அதனைத் தவிர்க்க அடிக்கடி பேக்கிங் சோடாவை தொட்டியில் ஊற்றிக் கழுவ வேண்டும். அத்துடன் வினிகர், எலுமிச்சை சாறு கலந்தும் சுத்தம் செய்யலாம். தண்ணீருக்குப் பதில் வெந்நீரை பயன்படுத்துவது தூய்மைப்பணியை முழுமையடையச் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலோன் பிஸ்கட் நடத்திய வருடாந்த விருது வழங்கல்



சிலோன் பிஸ்கட் நிறுவனம் அதன் வருடாந்த விநியோகத்தர் மாநாட்டையும், 2016இன் நட்சத்திர விருது வழங்கலையும் அத்திடிய, ஈகிள்ஸ் லேக்சைட்டில் சமீபத்தில் நடத்தியது.

பணிப்பாளர் சபையினர், வெளிக்கள விற்பனை அதிகாரிகள், நாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த விநியோகத்தர்கள், வர்த்தகப் பங்காளிகள், வெளிநாட்டுக் கிளைகளின் பிரதிநிதிகள், சிலோன் பிஸ்கட் நிறுவனத்தின் மூத்த முகாமையாளர்கள் மற்றும் நிறைவேற்று அதிகாரிகள் உட்பட அதிக எண்ணிக்கையானோர் அங்கு சமுகமளித்திருந்தனர்.

நிறுவனத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்பை வழங்கியமைக்காகவும், சவாலுக்குட்பட்ட ஆண்டுக்கான விற்பனை இலக்கைப் பெற்றமைக்காகவும், சிலோன் பிஸ்கட் நிறுவனத்தின் விற்பனை அதிகாரிகள் மற்றும் விநியோகத்தர்கள் வழங்கியப் பங்களிப்புக்கு விருது வழங்கும் வகையில், இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல வருட காலமாக உற்பத்திப் பொருள்களை விநியோகித்து வந்த விற்பனையாளர்களும் இந்த விழாவின்போது பாராட்டப்பட்டுள்ளனர். ஊழியர்களுக்கான சென்ற நிதியாண்டின் பதவி உயர்வுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

நிகழ்ச்சி நிரலின் மற்றொரு முக்கிய அம்சம், 2016/17ஆம் ஆண்டுக்கான சிலோன் பிஸ்கட் நிறுவனத்தின் தொனிப்பொருள் பற்றி அறிவிப்பாகும். நிறுவனத்தை உயர் நிலைக்குக் கொண்டு செல்வதில் "அடுத்த மட்டம்-அதியுயர் இலக்கு" என்ற மந்திரத்தை எதிர்வரும் வருடங்களில் ஊழியர்கள் கடைப்பிடிக்க விருக்கின்றனர். சிலோன் பிஸ்கட் நிறுவனத்தின் குழும முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி ஷியாமலி விக்கிரமசிங்க அங்கு உரைநிகழ்த்துகையில், "எமக்குச் சொந்தமான வர்த்தக அடையாளங்களில் மாத்திரம் எமது வெற்றி தங்கியிருக்கவில்லை என்றும், ஊழியர்கள், விநியோகத்தர்கள், பொருள் வழங்குநர்கள் ஆகியோரின் அர்ப்பணித்த நடவடிக்கையிலேயே தங்கியுள்ளது" என்றும் தெரிவித்தார். (த)

## புதிய முகவரிகளில் யூனியன் அஷ்ரன்ஸ்

வாடிக்கையாளர்களுக்கு மேலும் சௌகரியமான முறையில் சிறந்த சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதை அடிப்படையாகக் கொண்டு, யூனியன் அஷ்யூரன்ஸ் தனது வத்தளை மற்றும் மஹியங்கனைக் கிளைகளை புதிய முகவரிக்கு இடம்மாற்றியுள்ளது.

நாடு முழுவதும் முழு அளவிலான செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய கிளைகளைக் கொண்டிருப்பது எனும் நிறுவனத்தின் கொள்கைக்கமைய இந்த கிளைகள் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

மஹியங்கனைக் கிளையை ஓகஸ்ட் 23ஆம் திகதி, மியுகுணகம, மஹியங்கனை எனும் முகவரிக்கு இடம்மாற்றியிருந்ததுடன், வத்தளைக் கிளையை, ஓகஸ்ட் 25ஆம் திகதி, 520/2/1, நீர்கொழும்பு வீதி, வத்தளை எனும் முகவரிக்கு இடம்மாற்றியுள்ளது. இதன் மூலம் இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு சிறந்த சேவைகளைப்பெற்றுக்கொடுக்கத் திட்டமிட்டுள்ளது.

யூனியன் அஷ்யூரன்ஸ் சந்தைப்படுத்தல் பிரிவின் பொது முகாமையாளர் ருக்மன் வீரரத்ன கருத்துத் தெரிவிக்கையில், "எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு இலகுவான முறையில் தமது சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளை நாம் ஏற்படுத்தியுள்ளோம். இந்தப் பிரதேசங்களில் காணப்படும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளதுடன், இந்த வளர்ச்சியில் ஈடுபட எமக்கு வாய்ப்பளித்திருந்தது" - என்றார். (த)

## வொக்ஸ்வேகன் திட்டம் இலங்கையில் இடைநிறுத்தம்

இலங்கையில், வொக்ஸ்வேகன் கார்களைப் பொருத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில், 26.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் ஆரம்பிக்கப்படவிருந்த வொக்ஸ்வேகன் தொழிற்சாலையின் நிர்மாணப்பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக, பொது வர்த்தக நிறுவனங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர் எரான் விக்ரமரட்ன தெரிவித்தார்.

சர்வதேச ரீதியில் வொக்ஸ்வேகன் எதிர்நோக்கியுள்ள இடர் நிலையைக் கவனத்தில் கொண்டு, உடனடியாக இலங்கையில் தமது முதலீடுகளை மேற்கொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார். ஏற்கெனவே இந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு அவசியமான காணி ஒதுக்கீட்டை நாம் மேற்கொண்டுள்ளோம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

வணிகம்

1000சிசி முதல் 2000சிசி வரையான வாகனங்களைப் இலங்கையில் பொருத்துவதற்கு முன்னர் வொக்ஸ்வேகன் தீர்மானித்திருந்தது. இதில் பயணிகள் கார்கள், எஸ்.யு.வி. ரக வாகனங்கள், எம்.யு.வி. ரக வாகனங்கள் மற்றும் வணிக நோக்கிலான வாகனங்கள் போன்றன அடங்கியிருந்தன. போலியான விளம்பரப்படுத்தலை மேற்கொண்டிருந்ததாக வொக்ஸ்வேகன் நிறுவனத்துக்கு இந்த ஆண்டின் மார்ச் மாதமளவில் அமெரிக்க வர்த்தக சங்கத்தினால் நட்டஈடு கோரப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (த)

CSE
147-2/3, K.K.S Road Jaffna - 212221455

பங்குச் சந்தை தகவல்கள்

| 5/9/2016 | | | |
|---|---|---|---|
| www.cse.lk | | | |
| ASPI | -15.62 | 6,523.47 | 6,539.09 |
| S&P SL20 | -7.99 | 3,591.95 | 3,599.94 |
| வியாபாரப்புரள்வு | | 280,716,960 | 1,471,378,180 |
| உள்நாடு- கொள்வனவு | | 195,647,584 | 379,587,584 |
| விற்பனை | | 242,691,360 | 992,564,672 |
| வெளிநாடு- கொள்வனவு | | 85,069,360 | 1,091,790,592 |
| விற்பனை | | 38,025,580 | 478,813,440 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 227 | 192,443 | 43,755,995 |
| சிலோன் கிறேன் எலெவேட்டர்ஸ் | GRAN.N | 92.8 | 281,982 | 26,227,176 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 138.4 | 139,135 | 19,318,992 |
| ஹப்லிஸ் பைப் | HEXP.N | 102.9 | 189,680 | 19,314,822 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 153 | 83,348 | 12,704,359 |
| சம்பத் வங்கி | SAMP.N | 255.9 | 42,719 | 10,901,755 |
| அலுமக்ஸ் | ALUM.N | 20.8 | 459,180 | 9,270,028 |
| ஹெர்மஸ் கோல்டிங்ஸ் | HHL.N | 99.00 | 86,418 | 8,484,925 |
| நேஷனல் டெவலப்மென்ட் வங்கி | NDB.N | 164 | 50,711 | 8,315,834 |
| அக்ஸஸ் இஞ்சினியரிங் | AEL.N | 26.4 | 276,698 | 7,322,914 |



அறிவித்தல்கள்

பங்குலாபம்
வலிபெல் பவர் (VPEL) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.50
லேக் ஹவுஸ் (LPRT) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.00
மில்லினியம் ஹௌசிங் (MHDL) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.275

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| [illegible] | 220 |
| விலை உழைப்பு | 13.4 |
| [illegible] | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

## நுட்பம்

### கைபேசி வெடிப்பதை தடுக்க புதிய நுட்பம்




தொடுதிரைக் கைப்பேசிகளின் பாவனை அதிகரித்து வந்தபோதும் அதில் பல பிரச்சினைகளும் அதிகரித்த வண்ணமே உள்ளன.

தொடுதிரைக் கைப்பேசிகளில் மின்னேற்றம் உடனே குறைவது பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்ற நிலையில், மற்றுமொரு பிரச்சினையாக மின்கலங்கள் மின்னேற்றப் படும்போது வெடித்துச் சிதறும் சம்பவங்களும் ஏற்படுகின்றன.

தொடுதிரைப்பேசிகளுக்கு மின் வழங்குவதற்கு அதிகளவில் பயன்படுத்தப்படுவது இலிதியம் அயன் மின்கலங்கள் ஆகும்.

மின்கலப் பிரச்சினையால் சம்சுங் நிறுவனமும் தான் புதிதாக அறிமுகம் செய்திருந்த லட்சக்கணக்கான தனது கலக்சி நோட் 7 தொடுதிரைக் கைப்பேசிகளை மீளப் பெற்றுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக குறித்த கைப்பேசிகளில் பயன்படுத்தப் படும் மின்கலங்கள் வெடித்துச் சிதறுவதற்கான காரணங்களை அறியும் முயற்சி இடம்பெற்று வருகின்றது.

இதன் முதற் கட்டமாக இலிதியம் அயன் மின்கலங்கள் மிக விரைவாக மின்னேற்றம் ஆகும் தன்மை கொண்டவையாக இருப்பதாகவும், இதனால் குறுஞ் சுற்றுக்கள் உருவாகி தீப்பற்ற முனைவதால் வெடித்தல் சம்பவங்கள் ஏற்படுகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

இலிதியம் அயன்களுக்கு பதிலாக மாற்று தொழில்நுட்பம் ஒன்றைப் பயன்படுத்த வேண்டும் என கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பிரபல விரிவுரையாளர் ஒருவர் பரிந்துரைத்துள்ளார்.

### புதிய வசதியை ஏற்படுத்தும் முகப்புத்தகம்




நாளுக்கு நாள் புதிய வசதிகளை அறிமுகப் படுத்தி வரும் முகப்புத்தக நிறுவனம், தனது மெசேஞ்சர் செயலியில் உரையாடிக் கொண்டே அவர்களின் முகம் பார்த்து வீடியோ அழைப்பைப் பேசுவதற்கு ஒரு வசதியை அறிமுகப் படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு முதல் பரவலாக பயன்படுத் தப்படும் பேஸ்புக்கின் மெசேஞ்சரில் வீடியோ அழைப்பு வசதி ஏற்கனவே கொடுக்கப்பட் டுள்ளது.

ஆனால் அதில் எழுத்துக்களை ரைப் செய்து கொண்டே வீடியோ அழைப்பில் பேச முடியாது. தற்போது அதை மெருக்கூட்டி, இந்தப் புதிய வசதியைப் பயனர்களுக்கு முகப்புத்தக நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசியக் கட்சி இன்று 71ஆவது ஆண்டில் காலடி

கொழும்பு, செப்.6
தேசிய அரசில் பிரதான பங்காளிக்கட்சியாக விளங்கும் ஐக்கிய தேசியக் கட்சி இன்று 71ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கின்றது.
இதனை முன்னிட்டு அந்தக்கட்சி ஏற்பாடு செய்துள்ள கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பொரளை கெம்பல் மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இதில் கலந்துகொள்கிறார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் கட்சியைச் சேர்ந்த அமைப்பினர்கள் மட்டுமன்றி, 30க்கும் மேற்பட்ட தொழிற்சங்க அமைப்புக்களின் பிரதிநிதிகளும் 10ஆம் திகதி நடைபெறும் மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

(வ)

---

## படையினரின்...

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் கூட்டப்பட்ட சிறப்புக் கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இந்தக் கலந்துரையாடலில் பங்கு கொண்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகள், தாம் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் மற்றும் இடையூறுகளைப் பட்டியல் இட்டதோடு, சட்ட ரீதியாகத் தமக்குள்ள பிரச்சினைகளையும் முதலமைச்சரிடம் எடுத்துரைத்தனர்.
முல்லைத்தீவு மீனவர்கள் மீது நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதிகாரிகள் பலர், சட்டத்தினை மீறும் தென்னிலங்கை மீனவர்கள் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள அஞ்சுகின்றனர். சிலர் துணிந்து சட்டத்தினை நடைமுறைப்படுத்த முன்வந்தால், அவர்கள் படையினரின் துணையு டன் தாக்கப்பட்டும் உள்ளனர்.
படையினரின் அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்கள் தொடர்பில் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதனால் அதிகாரிகளும் அஞ்சி பின்வாங்குகின்றனரோ என்ற அச்சம் நிலவுகின்றது. அவ்வாறானால் சட்டம் என்பது ஒரு தரப்பாருக்கு மட்டும்தான் பாதுகாப்பளிக்குமா என்ற கேள்வியும் எழுகின்றது. எனவே இவற்றைக் கருத்தில்கொண்டு முதலமைச்சர் உரிய முறையில் சட்டத்தினை அனைவருக்கும் சமனாக நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர் முல்லைத்தீவு மீனவ சங்கப் பிரதிநிதிகள்.
மீனவர்களுடைய கோரிக்கையை அடுத்து கருத்து தொரிவித்த வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்,
"13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மீன்பிடித் தொழில் சம்பந்தமாக உள்நாட்டு நீர் நிலைகள் மீதே எமக்கு அதிகாரம் தரப்பட்டுள்ளது. கடல் மீன்பிடி சம்பந்தமாக கொழும்பு அரசுக்கே அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. எனினும் எமது மக்கள் என்ற முறையில் மீன்பிடித்தலில், ஈடுபட்டிருக்கும் அனைவரும் எமது அதிகாரத்தின் கீழேயே உள்ளார்கள். அவர்களின் வாழ்வாதாரங்கள், தொழில்நிலைகள் போன்றன எம்மால் தீர்த்துவைக்கப்பட வேண்டிய விடயங்களே.
அத்துடன் கரையோடு சம்பந்தப்பட்ட சில மைல் தூர கடலும் மாகாண சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டது. ஆகவே முடிந்த மட்டில் இவை சம்பந்தமான பிரச்சினைகளை நாம் கொழும்பு அரசுடன் பேசித் தீர்ப்பதே உசிதம். இந்த இடங்கள் பற்றியும், இங்கு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்கள் பற்றியும் கொழும்பு அரசும் இராணுவத்தினரும்கடற்படையினரும் கொண்டிருக்கும் அபிப்பிராயங்கள் எம்முடைய அபிப்பிராயங்களிலிருந்து மாறுபட்டவை. அது மட்டுமல்லாமல் அவர்களுடைய அபிப்பிராயங்கள் தவறான அடிப்படையிலே அரசியல் காரணங்களுக்காக முன்வைக்கப்பட்டு வரும் கருத்துக்களே.
1965ஆம் ஆண்டு பெப்ரவரி 1ஆம் திகதி வெளியிடப்பட்ட கரைவலை சம்பந்தமான சுற்றறிக்கை பற்றிக் கூறப்பட்டது. யார் யாருக்கு அந்தக் காலகட்டத்தில் எந்தெந்தப் பாடுகள் கொடுக்கப்பட்டிருந்தன என்ற விவரங்கள் அதில் தரப்பட்டுள்ளன. ஆனால் குறித்த சுற்றறிக்கையின் முன் பக்கம் கிடைக்காததால் அதனைச்; சுற்றறிக்கை என ஏற்க முடியாதென்றும் 1985ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையே சரியானதென இராணுவத்தினரும் சிங்கள குடியேற்றவாசிகளும் கூறி வருகின்றனர். 1985ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட ஆவணம் 1983இல் கலவரங்களுக்கு உட்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து வேற்று இடங்களில் இருந்த போது, கொழும்பு அரசினால் தான்தோன்றித்தனமாகத் தயாரிக்கப்பட்ட ஆவணமேயாகும். எனவே குறித்த பிரச்சினைக்குரிய ஆவணத்தை ஏற்றுக்கொள்ள முடியா தென்று எமது மக்கள் ஆணித்தரமாக எடுத்துரைத்தார்கள். இது சம்பந்தமான உண்மைகளை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.
மேலும் மாவட்ட ரீதியாக இராணுவத்தினரும் கடற்படையினரும் முல்லைத்தீவு மீன்பிடித்தொழிலில் பாரம்பரியமாக ஈடுபட்டிருக்கின்ற மக்களைப் பலவித இடையூறுகளுக்கும் இன்னல்களுக்குந் தற்போது உட்படுத்தி வருகின்றார்கள். இவை நிறுத்தப்பட வேண்டும். இராணுவத்தினருக்கும் கடற்படையினருக்கும் இங்கு பல ஏக்கர் நிலங்களை வைத்துக் கொண்டிருப்பதற்கு எந்தவிதமான தார்மீக உரித்தும் இல்லை. பாதுகாப்பு என்ற போர்வையில் மக்களின் பாரம்பரிய வாழ்வாதாரங்களில் அவர்கள் கைவைத்து வருகின்றார்கள்.
தெற்கிலிருந்து சிங்கள மக்களைக் கூட்டி வந்து எமது மக்களுக்குக் கிடைக்க வேண்டிய வளங்களை அவர்கள் சூறையாடிச் செல்ல படையினர் உதவி புரிகின்றார்கள். எனவே இது சம்பந்தமான முழுமையான விசாரணையைச் செய்து அறிக்கை ஒன்றை முன்வைக்க வேண்டும் என்று நான் கருதுகின்றேன். அதற்கு இங்கு வந்திருக் கும் அனைவரும் ஒத்துழைப்புத் தருவதாகக் கூறியிருக்கின்றமையால், இளைப்பாறிய மாவட்ட செயலாளர் ஒருவரின் தலைமைத்துவத்தின் கீழ் சிறப்புக் குழு ஒன்றை விரைவில் நியமிப்பேன். அந்தக் குழு படையினரின் இடையூறுகள் மற்றும். பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து முன்வைக்கும் அறிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதியுடனும், பிரதமருடனும், கொழும்பு அமைச்சர்களுடனும், உயர் அதிகாரிகளுடனும் உரிய கலந் துரையாடல்கள் நடைபெறும் - என்றார்.

(வ-21,10ி)

## வடக்கில்...

சாகல ரத்னாயக்க உட்பட சில அதிகாரிகளும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
கடந்த சில மாதங்களாக வடக்கு மாகாணத்தில் நிலைநாட்டப்பட்டுள்ள பௌத்த உரிமைகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதன்படி சில புத்த சிலைகள் அழிக்கப்பட்டுள்ளன.
அரசு மற்றும் மாகாண சபைகள் புத்த மதத்தைக் காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் வட பகுதியில் அமைந்துள்ள பௌத்த உரிமைகளைக் கண்டிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றார். இதன் மூலம் அரசமைப்பைக் காப்பதாக வழங்கியுள்ள சத்தியபிரமாணத்தை முதலமைச்சர் மீறியுள்ளார். வடக்கு மாகாண முதலமைச்சரின் நடவடிக்கைகளின் மூலம் அரசமைப்பை மீறியுள்ளதாக தீர்ப்பு வழங்க வேண்டும்.
வடக்கு மாகாணத்தில் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ள புத்த விகாரைகளுக்கு பாதுகாப்புப் பெற்றுக்கொடுக்கும்படி கொழும்பு அரசுக்கு உத்தரவொன்றைப் பிறப்பிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(வ)

## பரவிப்பாஞ்சானில்...

யளித்தார் . இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்.
இராணுவத்தினர் வசம் உள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி பரவிப்பாஞ்சான் மக்கள் 6 நாள்களாக தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். தீர்வு கிடைக்கும் வரையில் தமது போராட்டங்களை இடைநிறுத்தப் போவதில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
பரவிப்பாஞ்சான் மக்கள் கடந்த மாதமும் தொடர் போராட்டத்தை இரவு பகலாக முன்னெடுத்திருந்தனர். இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், போராட்டத்தை முன்னெடுத்த மக்களுடன் சந்திப்பு நடத்தியிருந்தார். அங்கிருந்து பாதுகாப்பு அமைச்சின் செயலருடன் தொலைபேசியூடாகவும் பேசியிருந்தார். இதன் போது பாதுகாப்பு அமைச்சின் செயலர், இரு வாரங்களினுள் அந்த மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என்று தெரிவித்ததை, போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் இரா.சம்பந்தன் குறிப்பிட்டார்.
இதனையடுத்து அந்த மக்கள் போராட்டத்தினை கைவிட்டிருந்தனர். வழங்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்த நிலையில், பரவிப்பாஞ்சானில் ஒரு தொகுதி காணிகள் மாத்திரமே விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், காணிகளின் உரிமையாளர்கள் மீளவும் போராட்டத்தை ஆரம்பித்தனர்.
பரவிப்பாஞ்சானில் விடுவிக்கப்பட்ட காணிகள் ஒப்படைக்கப்பட்ட நிலையில் ஏனையவர்களின் காணி ஆவணங்கள் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பரிசீலனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.
பாதுகாப்பு அமைச்சின் செயலர் பரவிப் பாஞ்சானில் ஒரு தொகுதி காணிகளை உடனடியாக விடுவிப்பதில் சிக்கல் இருப்பதாகத் தெரிவித்தார். அதனை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார். மக்கள் மீண்டும் போராட்டத்தை மேற்கொண்டுள்ள நிலையில், பாதுகாப்பு அமைச்சின் செயலருடன் மீண்டும் பேசவுள்ளேன் - என்றார் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்.

(வ-5-ரி3)

## போர்க்குற்ற...

மட்டங்களிலிருந்து கிடைத்த உத்தரவுகளால் குற்றங்களைச் செய்திருக்கலாம். எனவே அதன் உண்மைத் தன்மை தொடர்பில் விசாரித்து அறிவதில் எந்த விதமான தவறும் இல்லை.
போரின் இறுதிக் கட்டத்தின் போது புலிகள் இயக்கத்தின் முன்னாள் மூத்த தலைவர்கள் பல கோடி ரூபாய்களை பாதுகாப்பு தரப்பின் உயரதிகாரிகளுக்கு வழங்கி அரச ஒத்துழைப்புடன் தப்பிச் சென்றனர். எனக்கு தெரிந்த அளவில் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளும் இந்தக் கொடுக்கல் வாங்கல்களில் தொடர்புபட்டிருந்தனர். அன்றைய பாதுகாப்பு செயலாளருக்கு இது நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும். வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளவர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன.
இந்தத் தகவல்களில் உண்மையும் இருக்கலாம். பொய்களும் இருக்கலாம். எனவே காணாமற் போனோரை கண்டறியும் அலுவலகம் மூலம் இதன் உண்மையை கண்டறிய முடியும்.
பன்னாட்டு விசாரணைகள், கலப்பு நீதிமன்றம் என்ற பேச்சுக்கே இடமில்லை. தேவைப்பட்டால் பன்னாட்டு ஆலோசனைகள் பெறப்படும் - என்றார்.

(வ-5)

## 124ஏக்கர்...

பிரதேசங்களைச் சேர்ந்த 6 ஏக்கர் காணி களும் கடந்த வெள்ளிக்கிழமை மாவட்ட செயலாளரிடம் கையளிப்பட்டன.
விடுவிக்கப்பட்ட காணியில் செல்வாநகர் மற்றும் முழங்காவில் பகுதியில் விடுதலை புலி களினுடைய மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த காணிகளும், ஸ்கந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள கரும்புத் தோட்ட காணியும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் முழங்காவில் மாவீரர் துயிலும் இல்ல காணியானது நேற்று அந்தப் பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலகரிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.
காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினரால் கடிதம் மூலம் எமக்கு தகவல் அனுப்பப்பட்டது. இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட காணியில் தனியார் காணிகள், அரச காணிகள், விவசாயக் காணிகள் அடங்குகின்றன. இந்தக் காணிகளைப் பொறுபேற்குமாறு அந்தந்த பிரதேசங்களுக்குப் பொறுப்பாக உள்ள பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார் கிளிநொச்சி மாவட்டச் செயலர்.

(வ-21,ரி3)

## நல்லாட்சி...

மேற்படி பயணங்களை முடித்துக் கொண்டு அவர் நாடு திரும்புகையில் பெரிதாக எந்தவொரு வரவேற்பும் அளிக்கப்படவில்லை.
ஆனால், மலேசியா பயணத்தின்போது அவருக்கு எதிராக புலம்பெயர் அமைப்புகள் ஆர்ப்பாட்டம் நடத்தியதாலேயே அதற்கு சவால் விடுக்கும் வகையில் மகிந்தவுக்கு நேற்று வரவேற்பளிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
அரச பிரதிநிதியை வழியனுப்ப வந்த வேளையிலேயே இலங்கைக்கான மலேசியத் தூதுவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இது பாரதூரமான விடயமாகும். குறிப்பாக, தூதுவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலானது அரசின் மீதான தாக்குதலாகும். இது நாட்டுக்கு நல்லதல்ல.
இப்படியான அச்சுறுத்தல்கள் வரும் எனத் தெரியும். ஆனால், அச்சமின்றி பயங்கரவாதத்தை ஒழித்தேன். எமது பயண நிகழ்ச்சி நிரலில் ஒரு நிகழ்வில் மாத்திரமே கலந்துகொள்ள முடியாமல் போனது. அதுவும் விகாரையின் நலன்கருதியே அந்த நிகழ்வைத் தவிர்த்துக்கொண்டேன். மலேசிய அரசு முழுப் பாதுகாப்பையும் வழங்கியிருந்தது" என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார் மகிந்த ராஜபக்ச.

(வ-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி கந்தசாமி



பிறப்பு 05.10.1940 இறப்பு 04.09.2016

புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி கந்தசாமி 04.09.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இளையதம்பி கந்தசாமியின் அன்பு மனைவியும் வசந்தன், சின்னராசா, இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, பரமேஸ்வரி, மகேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2016) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலாம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(J4359)
(14.17.18)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IMMEDIAT VACANCY

## SPECIAL VACANCY IN MNC SRILANKA (NORTHERN PROVINCE)

வடக்கில் வியாபித்துள்ள எமது நிறுவனத்தில் சிறந்த வேலைவாய்ப்பு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய பிரதேசங்களிலிருந்து விண்ணப்பிக்கலாம்.

- உயர் சம்பளம்
- நிரந்தர வேலைவாய்ப்பு
- தகைமை :-(O/L,A/L)இம்முறை A/L எழுதியவர்களுக்கு முக்கியத்துவம்
- அனுபவம் அவசியமில்லை.

**077 664 4442, 077 556 6224**



## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**ஜெயலட்சுமி கையித்தாம்பிள்ளை**
திதி: ரிஷி பஞ்சமி (06.09.2016)

ஆறாத துயர்தந்து சென்ற லட்சுமியே
வஞ்சனை இல்லா உள்ளம் கொண்டவளே
யாவருக்கும் உதவிடும் குணமுடையவளே
வேசமில்லா நேசம் தந்த பெருமகளே
வீட்டுக்கொரு கலகலப்பான லட்சுமி கடாட்சமே
உங்கள்நினைவுகள் என்றும் பசுமையாக
எம் உயிர் உள்ளவரை இருக்கும்....
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னை மடியில் 25.11.1945
ஆண்டவன் அடியில் 18.09.2015

மகள்.சகோதரன்.
சகோதரிகள்.பெறாமகன்கள்.



## நவாலி YMCA யின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் சதுரங்க சுற்றுப்போட்டி

**இடம் - கொக்குவில் இந்துக்கல்லூரி**
**காலம் - 12.09.2016**
**நேரம் - காலை 8 மணி - மாலை 4மணி**

**போட்டிக்கான நிபந்தனைகள்**
1. வயதுப்பிரிவு 5, 7, 9, 11, 13, 15, open (ஆண், பெண் இருபிரிவுகளாக)
2. தமக்குரிய விளையாட்டு உபகரணங்களை தாங்களே கொண்டு வருதல் வேண்டும்.
3. பதிவுகளை 12.09.2016 ஆம் திகதி 8.00 மணிக்கு முன்னர் கொக்குவில் இந்துக்கல்லூரியில் மேற்கொள்ளவும்.
4. பதிவுக்கட்டணம் ரூபா 300.00
5. வெற்றி பெறுபவர்களுக்கு வெற்றிக்கிண்ணமும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தொடர்பு - 077 6733914
செயலாளர்
நவாலி (YMCA).



## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் உபயகாரர் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 11.09.2016 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும். அக் கூட்டத்தில் உபயகாரர்கள் /பதிவு பெற்ற அங்கத்தவர்களை தவறாது பங்கு பற்றுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**04.09.2016**

தர்மகர்த்தாக்கள் சபை.
ம.பத்மநாதன்
தலைவர்.

(C/25184) (10.18)



## நற்கருணைப் பிரசன்னத்தில் குணமாக்கல் வழிபாடு

தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்த கப்புச்சியன் சபையைச் சேர்ந்த
**அருட்பணியாளர் சின்னப்பன், சகோ.சாஜீ**
குழுவினரால் நெறிப்படுத்தப்படும்.

**இடம்: தூய அடைக்கல அன்னை ஆலயம், யாழ்ப்பாணம்** (O.L.R)
**காலம்: 06.09.2016 செவ்வாய் மாலை 5.00**

இறை இரக்கத்தின் யூபிலி ஆண்டில் பாவக் கட்டுக்களிலிருந்தும் உடல் நோய்களிலிருந்தும் விடுபட அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:** நற்கருணைத் திருவிழா 07.09.2016 மாலை 5.00
திருநாள் திருப்பலி
முதலாம் திருப்பலி காலை 5.30
இரண்டாம் திருப்பலி காலை 6.45
அன்னையின் திருச்சிலுவைப் பவனியும் ஆசீரும் மாலை 5.00 மணி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பங்குத் தந்தை,
பங்கு மக்கள்.

(J 4363)(10.18)


# 30 மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு, செப்.6
மூத்த பொலிஸ் அதிகாரிகள் 30 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் அவர்களுக்கு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்டவர்களே இடமாற்றம் செய்யப்பட்டனர். (வ)


## எழுதுவினைஞர் தேவை

யாழ். நகரில் இயங்கி வரும் மொத்த விற்பனை நிலையத்திற்கு எழுதுவினைஞர் (பெண்கள் மட்டும்) தேவை.
விரும்புவர்கள் எதிர்வரும் 12.09.2016 இற்கு முன்பாக தங்கள் சுயவிபரக்கோவையை கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
**சுப்பகூஸ்**
**இல.154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**



## கண்ணீர் அஞ்சலி

யாழ். **ஜெய்ப்பூர் நிறுவனத்தின்**
முகாமைத்துவக் குழு உறுப்பினர் **வைத்திய கலாநிதி (திருமதி) வசுமதி தேவநேசன்**
அவர்களின் அன்பு மாமியார்
திருமதி **பேரின்பராணி ஏகாம்பரநாதன்**
அவர்களின் பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**முகாமைத்துவக்குழுவினரும், பணியாளர்களும், யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்.**

(C/25185) (10.18)



ஓம் விராட் விஸ்வபிரம்மனே நமக

## ஓராண்டு நினைவலைகள்

விஸ்வபிரமஸ்ரீ அமரர்
**சின்னத்தம்பி அமரசிங்கம்**



சிங்காரத் தேரினம் உன்சிவந்த முகம் காணாது
சினம் கொண்டு உருகுதே யமன் செய்த பழியதனால்

காளி கோயிலடி. திருநெல்வேலி.
செல்வவதி ஓவிய கலையகம் குழுவினர்.


# யாழ். பல்கலையின் மாணவர் அறை மின்விசிறி சேதமாக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், செப் 6
யாழ். பல்கலைக்கழகத்தின் பொது மண்டப மாணவர் அறையில் பொருத்தப்பட்டிருந்த மின்விசிறி சேதமாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தினுள் இருக்கும் மாணவர் பொது மண்டபத்தில் உள்ள அறை முஸ்லிம் மாணவர்கள் தொழுகை செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த அறையின் மின்விசிறியே சேதமாக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

நேற்றுத் திங்கட்கிழமை வழமை போன்று அறைக்கு சென்ற பல்கலைக்கழக மாணவர்கள் அறைக் கதவு மூடப்பட்ட நிலையில் இருப்பதைக் கண்டு முஸ்லிம் மஜ்லீஸ் தலைவர் எம்.றஸீனுக்கு அறிவித்தனர். இதன் பின்னர் அங்கே சென்று பார்த்தபோது, தொழுகை அறையில் பல்கலைக்கழக பாதுகாப்பு தரப்பினர் அறிவுறுத்தல் ஒட்டி சீல் செய்திருந்தனர். தொழுகை அறையில் இருந்த மின்விசிறி உள்ளிட்ட பொருள்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. விசாரணை நடத்தப்படவுள்ளதால், தொழுகை அறையின் உள்ளே எவரும் செல்ல முடியாதவாறு பாதுகாப்பு ஊழியர்கள் தடை விதித்தனர். (வ-5)

# மீன் வளங்கள் குறித்து ஆராய்ச்சி

கொழும்பு, செப்.6
இலங்கைக் கடற்பரப்பிலுள்ள மீன் வளங்கள் தொடர்பில் அடுத்த வருடம் ஜனவரியில் நோர்வே அரசின் உதவியுடன் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படவுள்ளது என்று கடற்றொழில், நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்த ஆராய்ச்சி இலங்கை கடற்பரப்பில் 38 வருடங்களின் பின்னர் மேற்கொள்ளப்படுகின்றது என்று அவர் குறிப்பிட்டார்.

அருகிவரும் மீன்கள், கடல்வளங்கள் தொடர்பில் மதிப்பீடு மேற்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார். (ഇ-5)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

ஈழத்து நாதஸ்வரக் கருவிகளின் நாயகன்
விஸ்வப்பிரம்மஸ்ரீ
அமரர் **சின்னத்தம்பி அமரசிங்கம்**

## ஓராண்டு நினைவலைகள்



வியர்வைத் துளியை மையாக கலையமுதம் படைத்தவரே!
மண்ணகத்தில் உன் கரங்கள் மௌனமாய் ஆனதேனோ?
கலைப் படைப்பு உன் படைப்பு கவிபாடும் நாதஸ்வரம்
உன் நர்த்தனமிடும் கைப் படைப்பு
சிங்காரத் தேரினம் உன் சிவந்த முகம் காணாது
சினம் கொண்டு உருகுறதே யமன் செய்த பழியதனால்
விண்ணகத்தில் மைத்துனரும் உனைத் தேடி வருகின்றார்
மண்ணகத்தில் நாம் படும் துயர்தனைக் கேட்டிடுவீர்
அன்பின் திருவுருவாய் அகிலத்தை ஆண்டவரே
திருமுகம் மறைத்து நீ போனதின் மாயமென்ன?
நேர் கொண்ட உன் பார்வை நேர்மையின் உரு வடிவம்
சீர் கொண்ட உன் படைப்பு கலையின் பொக்கிசங்கள்
பாதங்கள் பவனிவரும் இடமெல்லாம் பாசவெள்ளம்
பாழாகிப் போனதோ பறந்து நீர் சென்றதனால்
கலைக் கருவி தேடுகிறதே கலையின் கரங்களை
காவிய நாயகனே கலை இன்று கலங்கிறதே
ஆண்டவன் அடி சென்று ஆழ்ந்து நீ உறங்கினாலும்
அழியாத உன் கலைகள் என்றுமே உறங்காது.

[illegible]
அராலி

**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு தங்க வியாபாரி திருகோணமலையில் மாயம்

கொழும்பு, செப்.6
தங்கம் வாங்குவதற்காக ஒரு கோடி ரூபா பணத்துடன் திருகோணமலை சென்றிருந்த முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் திடீரென காணாமற்போயுள்ளார் எனப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கொழும்பு, பம்பலப்பிட்டியில் இளம் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தெற்கில் பெரும் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்திய நிலையில், இவ்வாறானதொரு சம்பவமும் இடம்பெற்றுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
களுத்துறையிலுள்ள பண்டாரகம, அட்டுலுகம பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மொஹமட் நஸ்ரின் (வயது 35) என்ற தங்க வியாபாரியே மாயமாகியுள்ளார்.
இது தொடர்பில் திருகோணமலை, பண்டாரகம ஆகிய பொலிஸ் நிலையங்களில் குடும்பத்தாராலும், நண்பர்களாலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
இதன்படி, இரண்டு பொலிஸ் குழுக்களை அமைத்து திருகோணமலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர் என்று பொலிஸ்நிலைய உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
சி.சி.டி.வி. கமரா பதிவு, நண்பர்களின் வாக்குமூலம் உள்ளிட்ட துப்புகளை வைத்துக்கொண்டு பல கோணங்களில் ஆரம்ப கட்ட விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.
"காணாமற்போயுள்ள மொஹமட் நஸ்ரின், பண்டாரகம, அட்டுலுகம பகுதியிலுள்ள தங்க வர்த்தகராவார். அரச வங்கிகளிலும், தனியார் நிதி நிறுவனங்களிலும் ஏலம் விடப்படும் தங்கநகைகளைக் கொள்வனவு செய்து, அவற்றை மீள் விற்பனை செய்வதே அவரது தொழிலாகும். இதற்காக அவர் நாட்டின் சகல பகுதிகளுக்கும் செல்வார்" என்று பொலிஸ் ஊடகப்பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இவ்வாறே திருகோணமலையிலுள்ள அரச வங்கியொன்றில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தங்க ஏல விற்பனையில் பங்கேற்பதற்காக மூன்று நண்பர்கள் சகிதம் சனிக்கிழமை அங்கு சென்றுள்ளார். நண்பர்களும் குறித்த வணிகத்துடன் தொடர்புடைய நபர்கள் எனக் கூறப்படுகின்றது.
சனிக்கிழமை இரவு கந்தளாய் பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் தங்கிவிட்டே மறுநாள் முற்பகல் வங்கிக்குச் சென்றுள்ளனர். இவரிடம் சுமார் ஒரு கோடி ரூபா பணமும் இருந்துள்ளது என்பதை பொலிஸ் அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார்.
"பிற்பகல் 2.34 மணியளவில் வங்கியிலிருந்து அவர் வெளியேறியுள்ளார். நீரிழிவு வியாதி இருப்பதால், அதைக் கட்டுப்படுத்தும் மருந்தை வாங்குவதற்காக மருந்தகம் ஒன்றுக்கு அவர் சென்றுள்ளார். இவ்வாறு சென்ற அவர், மாலையாகியும் திரும்பாததையடுத்தே நண்பர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது" என்றும் அந்தப் பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டார்.
இதையடுத்து திருகோணமலை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். இந்தநிலையில், காணாமல்போனவரின் தந்தையால் நேற்று பண்டாரகம பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது. கப்பம் கோருவதற்காக அவர் கடத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நிலையில், பொலிஸ் விசாரணைகளும் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. (வ-சி)

# உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் மாற்றம் குறித்து பேராயர் விளக்கம்

யாழ்ப்பாணம், செப்.6
உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சிரானி மில்ஸ் நாளை 7ஆம் திகதி தன்னுடைய 60 வயதைப் பூர்த்தி செய்ய இருப்பதால், அவர் தனது பிறந்த தினத்துடன் ஓய்வுபெறுவார் எனத் தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையிலேயே புதிய அதிபர் நியமிக்கப்பட்டார். எனினும் புறம்பான தகவல்களைப் பரப்பி மாணவர்களையும், பொது மக்களையும் குழப்பும் முயற்சிகளில் சிலர் ஈடுபடுவது வருந்தத்தக்கது.
இவ்வாறு தெரிவித்தார் பேராயரும், கல்லூரியின் தலைவருமான பேரருட் கலாநிதி டீ.எஸ். தியாகராஜா.
உடுவில் மகளிர் கல்லூரியின் தற்போதைய அதிபரை இடமாற்றம் செய்யவேண்டாம் என்று கோரி கடந்த சனிக்கிழமை தொடக்கம் மாணவிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அத்து டன் நேற்றுப் பகலும் இரவும் 10 மாணவிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அவர்களுடன் பழைய மாணவிகள் சிலரும் இணைந்து கொண்டிருந்ததாக பழைய மாணவ சங் கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.
அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டாம் என்று கோரி மாணவிகள் உணவை மட்டும் தவிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இன்றும் உரிய தீர்வு வழங்கப் படாதுவிட்டால் தண்ணீரும் அருந்த மாட்டோம் என்று அந்த மாணவிகள் தெரிவித்ததாக அந்தப் பிரதிநிதி தெரிவித்தார்.
இந்த நிலையிலேயே உடுவில் மகளிர் கல்லூரியின் தலைவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
2015ஆம் ஆண்டு ஆவணிமாதம் 10ஆம் திகதி நடைபெற்ற கல்லூரியின் ஆளுநர் சபைக் கூட்டத்தில் அதிபர் திருமதி சிரானி மில்ஸ் தன்னுடைய பிறந்த தினத்துடன் 2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7ஆம் திகதியுடன் இளைப்பாறுவார் எனத் தீர்மா னிக்கப்பட்டது. கூட்டத்தின் குறிப்பேடு இதற்கு சான்று பகரும். இவர் மட்டுமல்ல, 2016ஆம் ஆண்டு 60வயதையுடையோரது பெயர்களும் குறிப்பிடப்பட்டு இளைப்பாறுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
2016ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி நடைபெற்ற கல்லூரியின் ஆளுநர் சபைக்கூட்டத்தில்புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்காக முயற்சி எடுக்கப்படுகிறது என்றும் அறிவிக்கப்பட்டது.
2016 மே மாதம் 27ஆம் திகதி தயாரிக்கப்பட்ட புதிய அதிபர் தேர்வுக்காக விண்ணப்பம் கோரும் அறிவித்தல் தற்போதைய அதிபருக்கூடாக கல்லூரி அறிவித்தல் பலகையில் வைக்கப்பட்டு அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டது. இதே அறிவித்தல் சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் இரு வாரங்களாக வெளி வந்தன. தான் இதனைச் செய்துள்ளதாக பேராயருக்கு ஜூன் மாதம் 2ஆம் திகதி எழுதிய கடிதத்துக்கூடாக அதிபர் அறிவித்தார்.
இதன் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அவற்றில் மூவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். இவர்கள் தவிர, தான் 60 வயதை எட்டுகின்ற போதிலும், தானும் பரிசீலிக்கப்பட முடியுமா என்ற கோதாவில் திருமதி சிரானி மில்ஸும் தன்னுடைய விண்ணப்பத்தை அனுப்பியிருந்தார்.
மூவர் தனியாக ஒரு நாளிலும், திருமதி மில்ஸ் அடுத்த நாளிலுமாக முறையே ஆவணி 14ம் மற்றும் 15ஆம் திகதிகளில் நேர்முகத் தேர்வுக்காக அழைக்கப்பட்டனர்.
தென் இந்திய திருச்சபை யாழ்ப் பாண அத்தியட்சாதீனத்தின் செயற்குழு தெரிவு செய்திருந்த ஐவருடன், இந்தியாவிலிருந்து சென்னை கிறிஸ்தவக் கல்லூரி யின் அதிபர் டாக்டர் அலெக்ஸாண்டர் இயேசுதாசன் வெளித் தேர்வாளராக அழைக்கப்பட்டிருந்தார்.
தற்போதய உப அதிபர் திருமதி பற்ரீசியா சுனித்தா ஜெபரட்ணம் புதிய அதிபராகத் தெரிவு செய்யப்படலாம் என்று தேர்வுக் குழு பரிந்துரை செய்ததை தென் இந்திய திருச் சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் செயற்குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து இந்த அறிவித்தல் உரியவர்களுக்கு வழங்கப்பட்டது.
தற்போதைய அதிபர் தனது பொறுப்புக்களை 2016 செப் டெம்பர் மாதம் 6ஆம் திகதி, அதாவது தன்னுடைய 60வயதைப் பூர்த்தி செய்யும் நாளில் புதிய அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும் என அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.
பாடசாலை செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி ஆசிரியர்களது கூட் டத்துடன் ஆரம்பமாகி, 8ம் திகதி [illegible] தொடரும் எனவும் தற்போதைய மற்றும் புதிய அதிபர்க ளுக்கு அறிவிக்கப்பட்டும் உள் ளது.
இந்த நிலையில் பல உண்மைக்குப் புறம்பான தகவல்களைப் பரப்பி மாணவர்களையும், பொது மக்களையும் குழப்பும் முயற்சிகளில் சிலர் ஈடுபடுவது வருந்தத்தக்கது.
முன்னய காலங்களில் சில அதிபர்கள் காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டும், போர்க் கால இடர்ப்பாடுகளை மனதிற் கொண்டும் தங்களது இளைப்பாறும் வயதைத் தாண்டிப் பணி செய்ய அனுமதிக்கப்பட்ட அதே வேளையில், ஒரு அதிபர் தன்னுடைய 58ஆவது வயதிலேயே பணியை முடித்துக்கொள்ளுமாறும் பணிக்கப்பட்டிருந் தார். எதுவாயினும் கல்வித் திணைக்களத்தின் சட்டங்கள் ஒருவர் 60வயதைப் பூர்த்தி செய்யும்போது, அவர் இளைப்பாற வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்பதைக் கருத்திற் கொள்ளுதல் அவசியம். யாழ்ப்பாணக் கல்லூரி முன்னாள் அதிபரும் தற்போதைய பேராயர் காலத்தில் இவ்வாறு இளைப்பாறினார்.
தானும் ஒரு விண்ணப்பதாரியாக இருந்து தெரிவு செய்யப்படாத நிலையில் இந்தவிதமான குழப்ப நிலைகளுக்கு உடந்தையாகத் தற்போதைய அதிபர் இருப்பது வருந்தத்தக்கது. அறிவிக்கப்பட்ட பிரகாரமும், அனைத்து நடைமுறைகளும் பின்பற்றப்படுகையில் முழு அறிவுடையவராக இருந்து ஒத்துழைப்பு வழங்கியநிலையிலும், தற்போதைய அதிபர் இன்று செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி தன்னுடைய பொறுப்புக்களைப் புதிய அதிபரிடம் ஒப்படைத்து அனைவருக்கும் ஒத்துழைப்பு நல்க வேண்டி நிற்கிறேன் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## காணாமற்போனோர் குறித்து நினைவுகூரல்

கிழக்கு மாகாணத்தில், 1990 ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமில் தங்கியிருந்தபோது, இராணுவ சீருடையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு காணாமற்போனவர்களை, அவர்களது உறவினர்கள் நேற்று 26ஆவது ஆண்டாக நினைவு கூர்ந்தனர். 1990ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில், இக்கால கட்டத்தில் நிலவிய போர் சூழ்நிலை காரணமாக 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர், தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி கிழக்கு பல்கலைக்கழகத்தின் வந்தாறு மூலை வளாகத்தில் தஞ்சம் அடைந்தனர்.
செப்டம்பர் 5-ஆம் திகதியன்று அதிகாலை இடம்பெயர்நதோர் முகாம் ராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு ஆண்கள் மூக முடி அணிந்த நபர்கள் முன் வரிசையாக நிறுத்தப்பட்டு, குடும்பத் தலைவர்கள், இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட 158 பேர் ஒரே நாளில் அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்ட உறவினர்கள் தெரிவித்தனர். (வ)

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளிப்பிள்ளை அருணாசலம்

(ஓய்வு பெற்ற குடும்ப நல சேவகர்)



மாதகல் மேற்கு மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை அருணாசலம் கடந்த (04.09.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகமணி-இளையாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அருணாசலத்தின் பாசமிகு மனைவியும் திருச் சிற்றம்பலம் (திரு-கனடா), திருஅருட்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும் சுகந்தினி, அரசரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும் தனுஷ், யதுஷ், தனுசியா, கபினாஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சரோஜினி தேவி, ஜெகாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற நவரத்தினராசா மற்றும் செல்வரத்தினம், அன்னப்பிள்ளை, நாகரத்தினம்,இராசமணி, சபாரத்தினம், முத்துப்பிள்ளை, நவமணி,கடம்பமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2016) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக போதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இறுதி ஆட்டத்தில் பாக். வெற்றி; தொடரைக் கைப்பற்றியது இங்கி.

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது ஒருநாள் ஆட்டத்தில் நான்கு இலக்குகளால் வெற்றி பெற்றது பாகிஸ்தான். ஆனால் 4:1 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து.

தொடரில் ஐந்து ஆட்டங்கள் முடிவடைந்த முதல் நான்கு ஆட்டங்களின் அடிப்படையில் இங்கிலாந்து 4:0 என்று முன்னிலையில் இருந்தது. இதனால் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றால் 5:0 என்று தொடரை வழித்துத் துடைக்க முடியும் என்ற நிலையில் அந்த அணி களமிறங்கியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஆரம்ப வீரரான கேல்ஸை 23 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் மொகமட் ஆமிர். ரூட்டை போல்ட் செய்தார் ஹசன் அலி. மோர்கனும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆனால் மறு முனையில் ரோயின் அரைச்சதம் அரங்கேறியது. 13 ஓட்டங்களுடன் சதத்தைத் தவற விட்டார் ரோய்.

மத்திய வரிசையைப் பலப்படுத்தினார் ஸ்டோக்ஸ். அவர் 76 பந்துகளில் 75 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஹசன் அலியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். முடிவில் 9 இலக்குகளை இழந்து 302 ஓட்டங்களைக் குவித்தது இங்கிலாந்து.

பந்துவீச்சில் பாகிஸ்தானின் சார்பாக ஹசன் அலி 4 இலக்குகளையும், ஆமிர் 3 இலக்குகளையும், உமார் குல், வசிம் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தானுக்கு அசார் அலி, சர்ஜீல் கான் இணை சிறந்த ஆரம்பத்தை வழங்கவில்லை. பத்தே ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் சர்ஜீல் கான். அசார் அலியை 33 ஓட்டங்களுடனும், அசாமை 31 ஓட்டங்களுடனும் வோக்ஸ் வீழ்த்தினார். மலிக், சர்பராஸ் அஹமட் இணை படிப்படியாக பாகிஸ்தானின் வெற்றியை உறுதிப்படுத்தியது. 44 பந்துகளில் அஹமட்டின் அரைச்சதமும், 49 பந்துகளில் மலிக்கின் அரைச்சதமும் பதிவாகியது. 77 ஓட்டங்களுடன் மலிக், 90 ஓட்டங்களுடன் அஹமட் இருவரும் டவ்ரிச்சின் பந்துப்பரிமாற்றத்தில் ஆட்டமிழந்தனர்.

ஆனால் இவர்களின் இழப்பு பாகிஸ்தானின் வெற்றியில் தடுமாற்றத்தை ஏற்படுத்தவில்லை. முடிவில் 4 இலக்குகளால் வென்றது பாகிஸ்தான்.

இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற்றாலும் ஏற்கனவே முடிவடைந்த முதல் நான்கு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றதால் தொடரை 4:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது இங்கிலாந்து. (ம)





றதீனா லக்சிகா

# தேசியமட்ட பளுதூக்கலில் சென். அன்ரனிஸ் சாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 6

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளுதூக்கலில் 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் பாசையூர் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயத்துக்கு இரு வெள்ளிப் பதக்கங்கள் கிடைத்தன.

கண்டி சிறி டிலான் மகா வித்தியாலய உள்ளரங்கில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம்செய்து களமிறங்கிய பாசையூர் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயத்தின் ப.றதீனா 58 கிலோ எடைப் பிரிவில் 74 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், 69 கிலோவிற்கு மேற்பட்ட எடைப் பிரிவில் யூ.லக்சிகா 85 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

குறித்த பாடசாலையின் 15 வயதுப் பிரிவு அணி 5 பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது. (ம-23-422)

# வயாவிளான் மத்திய கல்லூரிக்கு பளுதூக்கலில் இரு பதக்கங்கள்

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கலில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் வயாவிளான் மத்திய கல்லூரிக்கு வெள்ளி, வெண்கலம் என இரு பதக்கங்கள் கிடைத்தன.

வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய வயாவிளான் மத்திய கல்லூரியின் கே.றெஜினா 75 கிலோ எடைப் பிரிவில் 83 கிலோ பளுவைத்தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், 53 கிலோ எடைப்பிரிவில் எஸ்.குஜனி 70 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம-422)





# இத்தாலி கார்பந்தயத்தில் ரஸ்பேர்க் வெற்றிபெற்றார்

நடப்பு வருடத்துக்கான கார்பந்தயத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 14 ஆவது சுற்றில் ஜேர்மனின் வீரர் ரஸ்பேர்க் வெற்றிபெற்றார்.

வழக்கம் போல 21 சுற்றுக்களாகத் தொடர் நடத்தப்படுகிறது. இதன் 14ஆவது சுற்று இத்தாலியின் ஓடுதளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பந்தயத்தூரமான 301 கிலோ மீற்றரை முதலில் அடைந்தார் ரஸ்பேர்க். ஹமில்டனுக்கு இரண்டாவது இடம் கிடைத்தது. இந்தச் சுற்றில் ஹமில்டன் இரண்டாவது இடத்தைப் பிடித்தாலும் ஒட்டுமொத்தமாக முடிவடைந்த 14 சுற்றுக்களின் அடிப்படையில் 250 புள்ளிகளுடன் அவர் முதலிடத்தில் உள்ளார். 248 புள்ளிகளுடன் ரஸ்பேர்க் இரண்டாவது இடத்தில் உள்ளார். (ம)

# அத்தியார் இந்துக் கல்லூரி தங்கத்தை தனதாக்கியது

யாழ்ப்பாணம், செப். 6

யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 800 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அணி தங்கத்தை தனதாக்கியது.

யாழ். மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. நிர்ணயிக்கப்பட்ட இலக்கை 12 நிமிடங்கள், 04 செக்கன்கள், 03 மில்லிசெக்கன்களில் அடைந்து தங்கத்தைத் தனதாக்கியது நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அணி. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி 13 நிமிடங்கள், 03 செக்கன்கள், 09 மில்லிசெக்கனில் ஓடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தையும், திருக்குடும்பக் கன்னியர் மட அணி 14 நிமிடங்கள், 04 செக்கன்கள், 08 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றன. (ம-23)



# வேம்படிக்குத் தங்கப்பதக்கம்



நிலோஜினி



தக்சாயினி

யாழ்ப்பாணம், செப். 6

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் தொடரில் பெண்கள் பிரிவில் வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலைக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.

குறித்த பாடசாலையின் சார்பாகக் களமிறங்கிய பி.நிலோஜினி 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 58 கிலோ எடைப் பிரிவில் 73 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தை வென்றார். குறித்த பாடசாலையின் இ.தக்சாயினி 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 75 கிலோ எடைப் பிரிவில் 74 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தை வென்றார். (ம-422)

# இலங்கை கிரிக்கெட்டில் பாலியல் குற்றச்சாட்டு

இலங்கை கிரிக்கெட் சபையின் அதிகாரிகள் சிலர் தன்னை பலாத்காரம் செய்ய முயன்றனர் என குறித்த சபை யில் பணியாற்றிய பெண் ஒருவர் முறைப்பாடு தெரிவித்துள்ளார். இலங்கை கிரிக்கெட் சபையின் இரகசியத் தகவல்களை பத்திரிகைகளுக்கு வெளிப்படுத்திய குற்றச்சாட்டில் குறித்த பெண் மீது விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. விசாரணை நடத்தும் குழுவிடமே அவர் இந்தத் தகவலை வெளிப்படுத்தினார் என்று அறியவருகிறது.

இதற்கு முன்னர், இலங்கை கிரிக்கெட் சபையின் விற்பனை பெண் அதிகாரி ஒருவர் தனது ஒப்பந்த காலத்தை நீடிக்க தன்னிடம் பாலியல் லஞ்சம் கேட்டார்கள் என்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 200 மீற்றர் அஞ்சலோட்டத்தில் தங்கம் வென்றது சுண்டுக்குளி

யாழ்ப்பாணம், செப். 6
யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 200 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.
யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில், நிர்ணயிக்கப்பட்ட இலக்கை 2 நிமிடங்கள், 06 செக்கன்கள். 02 மில்லி செக்கன்களில் அடைந்து, தங்கப் பதக்கத்தை வென்றது சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. 2 நிமிடங்கள், 06 செக்கன்கள், 05 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து, மகாஜனக் கல்லூரி வெள்ளிப் பதக்கம் வென்றது. 2 நிமிடங்கள், 08 செக்கன்கள், 08 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து, வேம்படி மகளிர் பெண்கள் உயர்தரப் பாடசாலை வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது. (ம-23)
















### தேசியமட்ட பளுதூக்கல்

# 20 வயதுக்குட்பட்ட பிரிவிலும் யாழ். மத்தி, இந்து அசத்தல்

யாழ்ப்பாணம், செப். 6
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளுதூக்கலில் 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் வடக்கு மாகாணத்துக்கு நான்கு பதக்கங்கள் கிடைத்தன. இவற்றில் யாழ். இந்துக் கல்லூரி மூன்று பதக்கங்களையும், யாழ். மத்திய கல்லூரி ஓர் பதக்கத்தையும் வென்றுகொடுத்தன.
கண்டி சிறி டிலான் மகா வித்தியாலய உள்ளரங்கில் நேற்றுமுன்தினம் மாலை இந்தப் போட்டிகள் நடைபெற்றன. யாழ். மத்திய கல்லூரியின் சார்பாகக் களமிறங்கிய ந.டிலக்ஸ்குமார் 105 கிலோ எடைப் பிரிவில் 178 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், இதே எடைப்பிரிவில் களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரியின் மைத்திரேஜன் சர்மா 142 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். யாழ். இந்துக் கல்லூரியின் கே.திசாந் 94 கிலோ எடைப்பிரிவில் 150 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும், அதே கல்லூரியின் எஸ்.மிதுசன் 85 கிலோ எடைப்பிரிவில் 163 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம-422)

## சிறி முருகனின் துடுப்பாட்டம்; கரவெட்டி ஞானம்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 6
மல்லாகம் சிறி முருகன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியனானது.
மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து சுன்னாகம் றொப் லெவன் அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் றொப் லெவன் அணி 7.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து, 48 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக யசீம் 12 ஓட்டங்களைப் பெற்றார்: பந்துவீச்சில் கரவெட்டி ஞானம்ஸ் அணி சார்பில் குணதீபன், சேந்திரன், ரஜீவன் மூவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 2.3 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து, இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக சுகந்தன் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சுன்னாகம் றொப் லெவன் அணியின் சார்பில் ஜிந்தா ஓர் இலக்கை வீழ்த்தினார். ஆட்ட நாயகனாக கரவெட்டி ஞானம்ஸ் அணியின் சுகந்தன் தெரிவானார். நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன் கலந்து கொண்டார். (ம-422-108)

## பாடும்மீன் அணிக்கு அசத்தலான வெற்றி

கரணவாய், செப். 6
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை ஊதித் தள்ளியது குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம்.
இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பிரிவு இரண்டுக்கான தொடரில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகமும், கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. முதல் பாதியில் சீரான இடைவெளியில் அடுத்தடுத்து ஆறு கோல்களை அடுக்கியது பாடும்மீன். யங்கம்பன்ஸால் ஓர் கோலையேனும் பதிவு செய்ய இயலவில்லை.
இரண்டாம் பாதியில் பாடும் மீன் அணியால் கோல் எதனையும் பதிவுசெய்ய முடியவில்லை. யங்கம்பன்ஸின் பின்வரிசை பலமாக அமைந்தது. பிரகாஸ் யங்கம்பன்ஸின் முதல் கோலைப் பதிவுசெய்ய, முடிவில் 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றியைப் பதிவுசெய்தது பாடும்மீன். (ம-108)

## பாண்டியன்குளம் ம.வித்தி. வெண்கலங்கள் வென்றது

யாழ்ப்பாணம், செப். 6
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கலில் முல்லைத்தீவு-பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் இரு வெண்கலப் பதக்கங்களைச் சுவீகரித்தது.
கண்டி சிறி டிலான் மகா வித்தியாலய உள்ளரங்கில் நேற்றுமுன்தினம் மாலை இந்தப் போட்டிகள் நடைபெற்றன. வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து, களமிறங்கிய முல்லைத்தீவு-பாண்டியன்குளம் மகா வித்தியாலய மாணவிகளான ப.டர்சனா 15 வயதுக்குட்பட்ட 40 கிலோ எடைப் பிரிவில் 49 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும், ஞா.நிருசா 17 வயதுக்குட்பட்ட 69 கிலோ எடைப் பிரிவில் 74 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)







## சொந்தத் தொடரில் சாதித்தது யாழ். மத்திய கல்லூரி அணி

யாழ்ப்பாணம், செப். 6
யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 4 வீரர்கள் பங்குபற்றும் 800 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி தங்கப் பதக்கத்தை வென்றது.
அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான இந்தப் போட்டி யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. நிர்ணயிக்கப்பட்ட 800 மீற்றர் தூரத்தை 9 நிமிடங்கள் 07 மில்லி செக்கன்களில் அடைந்து யாழ். மத்திய கல்லூரி தங்கத்தை தனதாக்கியது.
9 நிமிடங்கள், 18 செக்கன்கள், 01 மில்லி செக்கன்களில் ஓடி முடித்து மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மாகா வித்தியாலய அணி இரண்டாம் இடத்தையும், 9 செக்கன்கள், 51 செக்கன்கள், 01 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து சென். பற்றிக்ஸ் கல்லூரி மூன்றாம் இடத்தையும் தமதாக்கின. (ம-23)

## யங்ஹென்றிஸ், ஞானமுருகன் இறுதியில் நாளை பலப்பரீட்சை

கரணவாய், செப். 6
புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ், மயிலங்காடு ஞானமுருகன் அணிகள் மோதவுள்ளன.
விக்னேஸ்வராவின் மைதானத்தில் நாளை புதன்கிழமை இரவு 8 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும். முன்னதாக இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் வி.கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் வி. கழகம் மோதவுள்ளது. (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுண்டுக்குளி மகளிர் சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 6
யாழ். மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான அஞ்சலோட்டத்தில் பெண்கள் பிரிவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி சம்பியனானது.
4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 200 மீற்றர், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 400 மீற்றர், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 800 மீற்றர் எனப் போட்டிகள் நடைபெற்றன.
ஒட்டுமொத்தமாக 47 புள்ளிகளைப் பெற்று சம்பியனானது சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி அணி 25 புள்ளிகளுடன் இரண்டாம் இடத் தையும், மகாஜனக்கல்லூரி அணி 24 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் தமதாக்கின. (ம-23)





# அஞ்சலோட்டப் போட்டியில் யாழ். மத்தி. சம்பியனானது

யாழ்ப்பாணம், செப். 6
யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான அஞ்சலோட்டத்தில் ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி சம்பியனானது.
4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர், 4 வீரர்கள் பங்குபற்றும் 200 மீற்றர், 4 வீரர்கள் பங்குபற்றும் 400 மீற்றர், 4 வீரர்கள் பங்குபற்றும் 800 மீற்றர் என அஞ்சலோட்டப் போட்டிகள் நடைபெற்றன. ஒட்டுமொத்தமாக 42 புள்ளிகளைப் பெற்று யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியனானது. மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலய அணி 38 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 27 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் தமதாக்கின. நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக வடமாகாண உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன் கலந்துகொண்டார். (ம-23)

## செரீனா வில்லியம்ஸ் சாதனை படைத்தார்

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் அதிக வெற்றியைப் பதிவு செய்தவர் என்ற சாதனையைப் படைத்தார் அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ்.
அமெரிக்கன் ரென்னிஸ் தொடர் அந்த நாட்டின் தலைநகர் நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற மூன்றாம் சுற்று ஆட்டத்தில், பன்னாட்டு தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீராங் கனையான செரினாவை எதிர்த்து சுவீடனைச் சேர்ந்த ஜோகன்னா மோதினார். இதில் செரீனா வில்லியம்ஸ் 6:2, 6:1 என்ற நேர் செற் கணக்கில் வென்று நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.
இந்த வெற்றி பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடர்களில் செரீனாவின் 307 ஆவது வெற்றியாகும். இதுவரை 306 வெற்றிகளுடன் நவரத்லோவா (அமெரிக்கா) முதலிடத்தில் இருந்தார். அவரைப் பின்தள்ளி செரீனா முதலிடத்தைப் பிடித்தார். (ம)



SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், இளைஞர்கள், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 10.09.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. மாலை 01.00-03.00
4. மாலை 03.00-05.00
வாரநாள் (திங்கள், புதன்) பிரிவுகள் ஆரம்பம்.
காலை 10.00-12.00
பாடப்புத்தகங்கள் சான்றிதழ், மற்றும் video DVD அனைத்தும் இலவசம்.
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486


ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்..
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்:
யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.
இலவசம்: PHOTOCOPIES, படிப்பதற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து...
செல்வோர்: யாழ். வன்னி, பிற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படிக்கிறார்கள்.
ஆரம்பம்: விரைவில் உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

காணவில்லை

சிறுவிளான் இளவாலையை வசிப்பிடமாகக் கொண்ட
**கனகசபை பொன்னம்பலம்**
கடந்த 31.08.2016 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளார். வயது 86.
விவரம் அறிந்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.
(J/4356),(14.17)
077 936 0569/ 021 205 9723

## எனது பந்துவீச்சையும் நொறுக்குவார் கோக்லி

### பிரட் லீ தெரிவிப்பு



இந்திய நட்சத்திர வீரர் விராட் கோக்லி, தனது பந்துவீச்சையும் நொறுக்கித்தள்ளுவார் என ஆஸ்திரேலியாவின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் பிரட் லீ தெரிவித்தார். தற்போது உலகில் உள்ள துடுப்பாட்டவீரர்கள் பட்டியலில் விராட் கோக்லிதான் முன்னணியில் உள்ளார். அவர் விளையாடும் விதம் மற்றும் அவரின் ஆக்ரோசம் எனக்கு மிகவும் பிடிக்கும். அவரின் ஆக்ரோசம்தான் அவரை முன்னிலையில் வைத்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக கோக்லி பல நுணுக்கங்களைக் கடைப்பிடிக்கிறார். தற்போது அவர் உள்ள போர்மில் எனது பந்து வீச்சையும் நொறுக்குவார் என பிரட் லீ மேலும் தெரிவித்தார். (ம)

## ரி-20 தொடர் இன்று

இலங்கை-ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் இன்று ஆரம்பமாகிறது.
இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை 3:0 என்ற அடிப்படையில் இலங்கையும், ஒருநாள் தொடரை 4:1 என்ற அடிப்படையில் ஆஸ்திரேலியாவும் கைப்பற்றின. இந்த நிலையிலேயே ரி-20 தொடர் இன்று ஆரம்பமாகிறது. பல்லேகல மைதானத்தில் இலங்கை நேரப்படி இரவு 7 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும். (ம)

சமுர்த்தி உத்தியோகத்தர் தெரிவு பரீட்சைக்கான இறுதி கருத்தரங்கு
பரீட்சை Sep 18 இல்
புதன் (7/9) இலிருந்து வெள்ளி (16.09.2016) வரை பி.ப. 5 - 6.30 மணிவரை புதிய பிரிவு ஆரம்பமாகின்றது.
T.P : 076 688 3394
* சகல போட்டிப்பரீட்சைகளுக்கும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல்வங்கி அருகில்)

V2 TRAVELS
11/09/2016 ஞாயிற்றுக்கிழமை
பருத்தித்துறை திறப்புவிழாவில் பணப்பரிசு
நீங்கள்
ரூபா 1000/= பணப்பரிசு
வெளிநாட்டுக்கு பார்சல் அனுப்பப்போறீங்களா?
விமானப்பயணச்சீட்டு எடுக்கப்போறீங்களா?
UK – 550/= Kg
DELIVERY IN 3 - 5 DAYS
முற்பதிவுகளுக்கு - 0768226240

## கெர்பர் முன்னேற்றம்

அமெரிக்க ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற மூன்றாம் சுற்று ஆட்டமொன்றில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார் கெர்பர்.
பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ள வீராங்கனையான கெர்பரை எதிர்த்து மிர்ஜானா பலப்பரீசை நடத்தினார். முதல் செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கெர்பர், இரண்டாவது செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று முன்னேற்றம் கண்டார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.